தமிழோடு

நெல்லை கண்ணன்



தமிழோடு

நெல்லை கண்ணன்

வேலுக்கண்ணன் பதிப்பகம்
69, அம்மன் சந்நிதி தெரு,
திருநெல்வேலி நகரம் - 627 006
தொலைபேசி : 0462 - 2337734

முதற் பதிப்பு : ஏப்ரல் 2015
இரண்டாம் பதிப்பு : ஜூன் 2020

தமிழோடு

நெல்லை கண்ணன்

பதிப்பாளர்
வேலுக்கண்ணன் பதிப்பகம்
69, அம்மன் சந்நிதித் தெரு,
திருநெல்வேலி நகரம் - 7.

அச்சகம்
எழுத்துக் கலையகம்
திருநெல்வேலி நகரம்

விலை : ரூ. 125.00

வள்ளுவர் காட்டும் வைகுந்தம்

திருமணமான இளம் தம்பதியர். அதிகாலையிலேயே எழுந்த பெண் குளித்துத் தலையிலே ஈரத் துண்டோடு கணவனுக்குப் பால் எடுத்துக் கொண்டுவருகிறாள்.

குளித்து விட்ட காரணத்தால் அவனைத் தொடாமல் கூப்பிடுகின்றாள். அவனிடம் இருந்து பதிலே இல்லை. மேஜையைத் தட்டிப் பார்க்கின்றாள். பதில் இல்லை. வளையல்களைக் குலுக்கி ஒசை எழுப்புகின்றாள். அவன் மிகச் சிரமப்பட்டு விழிப்பது போல நடிக்கின்றான். அவளுக்கும் தெரியும் தான்.

என்னங்க பால் கொண்டு வந்திருக்கிறேன். எழுந்து பல் விளக்கி விட்டுக் குடியுங்கள் என்று பால் டம்ளரை மேஜை மேல் வைத்து விட்டு கிளம்புகிறாள்.

அவன் சொல்லுகின்றான் என் கையிலே தந்து விட்டுப் போயேன் என்று. முடியாது உங்களைப் பற்றி இந்தப் பத்து நாட்களிலே என்னவெல்லாம் தெரிந்து வைத்திருக்கின்றேன் தெரியுமா. எழுந்து குடித்து விட்டு குளிக்கப் பாருங்கள் என்கின்றாள். அவன் கெஞ்சுகின்றான். சத்தியமா என் விரல் கூட உன் மீது படாது என்கின்றான்.

முடியாது முடியவே முடியாது என்கின்றாள்.

என் மீது சத்தியம் உன் மீது சத்தியம் இந்த உலகத்தின் மீதே சத்தியம் என்கின்றான்.

நான் பாவமில்லையா என்கின்றான்.

யார் நீங்களா இல்லை நானா என்கின்றவள் சிரித்துக் கொண்டே அவன் கைகளில் பால் டம்ளரைத் தருகின்றாள். கைகளைப் பிடித்தான்.

சத்தியம் செய்திருக்கின்றீர்கள் என்கின்றாள். அவன் உனக்காக எத்தனை சத்தியம் வேண்டுமானாலும் செய்வேன் என்கின்றான்.

பால் டம்ளர் மேஜைக்கு எப்படிச் சிந்தாமல் போயிற்றென்று அதற்கே தெரியாது. மொத்தமாக அவள் அவன் கைகளுக்குள் இருந்தாள்.

வியர்த்து விறுவிறுத்து ஒரு வித மயக்கத்திலே அவள் மெல்லிய தோளில் சாய்ந்து ஒரு சின்ன உறக்கத்தில் இருக்கின்றான்.

மனைவியாயிருந்தவள் அம்மாவாகி அவன் தலையைக் கோதுகின்றாள். அவன் மெல்லிய தூக்கம் அவளுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. குனிந்து ஒரு முத்தம் தருகின்றாள் கன்னத்தில். அவன் உறக்கம் கலைகின்றது. அவன் கண்கள் அவளின் கண்களோடு பொருந்துகின்றன. அந்தப் பார்வையில் அவள் மயங்கத் தலைப் படும் போது தீடிரென்று அவன் சிரிக்கின்றான்.

அவளுக்குக் கோபம் வருகின்றது. இதற்குத்தான் நான் மாட்டேன் என்றேன். கெஞ்சிக் கெஞ்சி என்னைக் கொஞ்சி விட்டு இப்ப என்ன சிரிப்பு என்று சிணுங்குகின்றாள்.

உடனேயே கிறுக்கு உன்னை என்றைக்காவது நான் கேலி செய்வேனா. ஒன்றுமில்லை நேற்று நம்மூர் பெரிய கோயிலுக்குப் போயிருந்தேன்.அங்கே ஒரு பெரிய பண்டிதர் பேசிக் கொண்டிருந்தார். பெரிய கூட்டம். அவர் சொன்னார் வைகுந்தம் மேலே இருக்கின்றது. அதை அடைய என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று பல பட்டியல்களை விளக்கிக் கொண்டிருந்தார்.அதை நினைத்துத்தான் சிரித்தேன் என்றான்.

அதை நினைத்து இப்போது இந்த இடத்தில் என்னை வைத்துக் கொண்டு ஏன் சிரிக்க வேண்டும் என்றாள்.

அட முட்டாளே இப்போது உன் தோளிலே சிறிது நேரம் உறங்கினேனே. என் தலையைக் கோதிக் கொண்டு எனக்கு ஒரு முத்தம் தந்தாயே. இதை விடவா வைகுந்தம் சொர்க்கம் எல்லாம் இனியது என்று எண்ணினேன். சிரித்தேன் என்றான். பெண்ணாள் வெட்கத்தில் முகம் புதைத்தாள்.

குறள்

தாம் வீழ்வார் மென் தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு.

எது நட்பு

எத்தனை நண்பர்கள். சுற்றி சுற்றி வருகின்றனர். தாங்கள் கொண்ட நட்பு குறித்துப் பெருமையுடன் பேசுகின்றனர். அந்த நண்பர்கள் குறித்து அவருக்கோ பெருமை.

அவர் விழாக்கள் அனைத்திலும் அவர்கள் அத்தனை பேரும் நின்று பம்பரமாகச் சுற்றிப் பணியாற்றுவார்கள். அவரோ எல்லோரையும் தனது உறவு வட்டத்தை விடச் சிறப்பாக நடத்துவார்.

எந்த நண்பர் வீட்டு விழாக்களிலும் அவர் தான் முன் நின்று நடத்துவார். பெரும்பான்மையான செலவுகளை அவர் தான் செய்வார்.

நண்பர்களின் உறவுகளும் அவரை அப்பா என்றோ மாமா என்றோ ஏதேனும் உறவு சொல்லித் தான் அழைக்கும்.

நண்பர் வீட்டுப் பெண்களின் பேறு காலச் செலவும் அவர் பொறுப்பு தான். எல்லாக் குழந்தைகளும் அவர் வீட்டுக் குழந்தைகள் தான்.

அவரைப் போலவே அவர் மனைவியும் குழந்தைகளும். அத்தனை பண்பு நலம் பேணுவர்.

எந்த நண்பருக்கும் ஒரு துன்பமோ இடையூறோ வருவதற்கு முன்னர் அதனைக் களைந்து விடுவார். அந்த நண்பரோ அவர் குடும்பத்தினரோ நன்றி சொல்ல வந்தால். என்னை அசிங்கப் படுத்தாதீர்கள் என்று கடிந்து கொள்வார்.

அவர் நட்பு வட்டத்தைப் பற்றிப் பேசும் போதெல்லாம் அவர் உறவினர் ஒருவர் சிரித்துக் கோண்டே இருப்பார்.

அவருக்கு அந்த உறவினர் மேல் கோபம் வரும். காட்டிக் கொள்ள மாட்டார்.

அவருக்கு தொழிலில் எதிர்பாராத விதமாக ஒரு பெரும் இழப்பு வந்தது.

துன்பமே அறிந்திராத அவரும் அவர் குடும்பத்தாரும் தடுமாறிப் போய் விட்டனர்.

அவருக்கு ஒரு தெளிவு. எத்தனை நண்பர்கள் உள்ளனர். கவலைப்பட வேண்டாம் மனைவியிடம் சொன்னார்.

எந்த நண்பரும் அவரைக் குறித்துச் சிந்தித்தாகத் தெரியவில்லை. இவராகத் தொலைபேசியில் அழைத்தாலோ எல்லோர் வீட்டிலும் வேலையாட்கள் தான் பதில் தருகின்றனர்.

துன்பம் அதிகமான பொழுது அவரே நண்பர்களைத் தேடிச் செல்லலானார். யாரையும் அவரால் சந்திக்க முடியவில்லை. சந்தித்தவர்களோ அவருக்காக மிகவும் வருந்தினார்கள். புலம்பினார்கள். கோடிக்கணக்கில் வைத்திருந்தாலும் உதவ முன் வரவில்லை.

அவர் மீது உயிரையே வைத்திருந்ததாகச் சொன்ன நண்பர்கள் அவர் மீது வைத்திருந்த அவர்களின் உயிரையெல்லாம் அவரிடம் சொல்லாமலே பத்திரமாகத் திரும்பி எடுத்துக் கொண்டனர்.

அவரைப் பார்த்து சிரித்த உறவினரோ இப்போதும் சிரிக்கின்றாரே ஒழிய ஒன்றும் சொல்லவில்லை.

வள்ளுவப் பேராசானிடம் சென்றால் அவர் சொன்னார்.

உன்னுடைய இந்த நண்பன் நட்பை ஆராயவில்லை. இப்படி ஒரு துன்பம் வந்த போது விட்டு விட்டு ஒடி விட்ட இந்த நட்பையெல்லாம் நினைத்து நினைத்து உறக்கம் இழந்து உள்ளம் துடிக்க அழுகின்றானே. இவனைப் பார்த்து மற்றவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

இவன் இறந்து இவனது உடலுக்கு இவன் மகன் கொள்ளி வைப்பானே. இவன் உடலின் மீது தீப்பற்றி எரியுமே. அப்போது மட்டும் இவன் உள்ளத்தை இறைவன் செயல்பட வைத்தானென்றால் இந்த பொல்லா நண்பர்கள் தன்னைக் கேடு வரும் போது விட்டு விட்டுச்

சென்ற கொடுமையை இவன் நினைத்தால் உடலின் மீது எறிகின்ற தீயை விட இவன் உள்ளத்தில் எரிகின்ற தீ மிக மிகச் சுடும். உணர்ந்து நட்புக் கொள்ளுங்கள் என்றார்.

குறள்

கெடுங்காலை கை விடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும்.

திருநெல்வேலிக்கே உரிய குசும்போடு பிள்ளைகள் என்னிடம் வந்து கேள்வி கேட்பர்.

ஒரு முறை உறக்கம் பற்றிப் பேச்சு வந்தது.

ஒவ்வொருவர் உறக்கம் பற்றியும் பேச்சு. எப்படியெல்லாம் மனிதர்கள் உறங்குகின்றார்கள் என்று. இந்த சுப்பையாப் பய உறங்கறதைப் பாக்கணுமே நிமிந்து படுத்தா அண்ணாச்சி விடியக்காலம் எழுந்திருக்கற வரை அப்படியேதான் படுத்திருப்பான். சம்முகப் பய படுக்க இடத்திலே மனுசன் படுக்கக் கூடாது அண்ணாச்சி. மிதிச்சே நம்மளக் காலி பண்ணிடுவான். இசக்கிப் பய கூத்து ரொம்ப மோசம் அண்ணாச்சி. நம்ம ராத்திரி எந்திரிச்சா அவாள முழுசாப் பாக்க வேண்டியிருக்கும். ராமையா கிட்ட படுத்தோம் அரிசி ஆலை சத்தத்தைத் தாண்டிரும் அவாள் சத்தம். ரவிப்பயதான் அண்ணாச்சி கூத்து. திடீர் திடீர்ன்னு எந்திரிச்சு உக்காந்து என்ன இழவெல்லாமோ பேசுவான். சிவராமன் எந்திரிச்சு எங்கன படுத்திருந்தான்னு சொல்ல முடியாது. கருத்தான் துன்பம் ரொம்பப் பெரிசு. அவன் பெரியம்மை செத்துப் பத்து வருசமாச்சு. அவளை நினைச்சு எங்க பெரியம்மை இப்பிடிச் செத்துப் போயிட்டாளேன்னு ஒப்பாரி வைப்பான். அவனைத் தேத்தி படுக்க வைக்கதுக்குள்ளே போதும் போதும்ன்னு ஆயிரும். சொக்குப் பய பொண்டாட்டி ஊருக்குப் போய்ட்டான்னா எங்களோடு வந்து படுப்பான். பல காதல் வசனங்கள் எங்களுக்கு மனப்பாடம் ஆயிரும்.

பேசிக்கொண்டேயிருக்கும் போது பாடகலிங்கம் தான் கேட்டான். அண்ணாச்சி அவாள் வள்ளுவர் இருக்காள்ளா அவாள் உறக்கத்தை பத்தி என்ன அண்ணாச்சி சொல்லியிருக்கான்னான்.

எலே அவாள் என்ன சொல்லுதான்னா உறக்கம் வந்து சாவு போலத்தான். முழிக்காம்ல்லாடா அது பிறப்பு மாதிரிங்கான்னு சொல்லிட்டு சொன்னேன்.

உறங்குறது சாகிறதுக்குப் பயிற்சி மாதிரின்னு சொல்லியிருக்காகண்ணு சொன்னேன்.

இப்ப நம்ம ஊர்ப் பயலுக அதை எப்படி அறிவாப் பயன் படுத்துதானுவ தெரியுமா.

யாரையாவது போய்ப் பாத்திட்டு வாங்கலேன்னு சொன்னா பதில் வந்து என்ன சொல்லுதானுவ தெரியும்ல.

அண்ணாச்சி அவாள் சாகுததுக்கு பயிற்சி எடுத்திட்டிருக்காகன்னு சொல்லுதானுவ.

குறள்

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

திருமூலர்

பல பெருந்தனவந்தர்கள் தொழிலதிபர்கள் திரைபடத் துறை சார்ந்தவர்கள் நடுத்தர வர்க்கத்தினர் அரசு அதிகாரிகள் அரசு ஊழியர்கள் அரசியல்வாதிகள் ஏழைகள் கூட கோயில் கோயிலாகச் சென்று வழிபாடும் அவர்களால் முடிந்த பணத்தை உண்டியலிலும் குவிக்கின்றனர்.

பணக்காரர்கள் கருப்புப் பணத்தை கோயில் உண்டியலில் மொத்தமாகப் போட்டு விடுகின்றனர்.

கடவளிடம் வருமான வரித் துறையினர் என்ன கேட்க முடியும்.

இங்கே மாவட்டந் தோறும் புதிய மடங்களும் புதிய சாமியார்களும் வந்தது கருப்புப் பண பெரியவர்களின் ஏற்பாடு. மடங்களுக்குள் வருமான வரித் துறை நுழைய முடியாது எனத் தெரிந்து வைத்துக் கொண்டு நடத்தும் நாடகம்.

இருக்கின்ற கோயில்கள் காணாது என்று புதிது புதிதாகக் கோயில்கள். அமைச்சர்கள் எல்லாரும் வருவார்கள். பிறகு அறங்காவலர்களும் அவரோடு இருக்கின்ற குழுக்களும் பக்த பெருமக்களாக அரசுத்துறையால் போற்றப் படுவார்கள். அவர்களின் திரை மறைவு வித்தைகளெல்லாம் மறந்து விடுவர் காவல்துறையினர்.

பெரிய அதிகாரிகளெல்லாம் அவர்களுக்குச் செய்கின்ற மரியாதை சொல்லொணாப் பெருமைக்குரியது.

இத்தனை செலவழித்து என்னவெல்லாமோ செய்கின்றார்களே.

பூவுக்கு மட்டும் பத்து லட்சம். பந்தல் முப்பது லட்சம். நாதஸ்வரம் கலை நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் நாற்பது லட்சம் என்று சொல்லிக் கொண்டே வேறு இருப்பார்கள். அன்னதானம் அறுபது லட்சம்.

ஆனால் இதையெல்லாம் பகவான் ஏற்றுக் கொள்வானா என்று ஒரு கேள்வி.

திருமூலர் சொல்கின்றார்.

கோயிலில் இத்தனை செலவழிக்கின்றானே. இதில் ஒன்றைக் கூட பகவான் ஏற்றுக் கொள்ள மாட்டான். ஏனெனில் இதில் ஏழை மக்களுக்கு எந்த நிரந்தர நன்மையும் ஏற்படப் போவதில்லை. ஒரு நாள் சோறு அவனை பசிப் பிணியில் இருந்து நிரந்தரமாகக் காப்பாற்றுமா.இதனால் இறைவனுக்கு கோயில் கட்டிய பெருமை உங்களுக்குக் கிடைக்காது.

ஆமாம் இறைவன் நிரந்தரமாகக் குடி கொண்டிருக்கின்ற மக்களுக்கு ஏதேனும் நல்லது கிடைக்கப் போவதில்லை.

ஆனால் இந்த நடமாடும் கோயில்களான மனிதர்களுக்கு நீங்கள் என்ன நன்மை செய்யினும் அதுவே எம்பெருமானுக்கு கோயில் கட்டிய திருப்தியைத் தந்து விடும்.

வழிபாடு என்ன என்பதனைத் திருமூலர் தெளிவாகச் சொல்லுகின்றார்.

செய்யுள்

படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பரமர்க்கு அங்கு ஆகும்

எனது கையில் பணம் இருக்கும் நேரம் நல்ல காரியங்களுக்காக யார் வந்து கேட்பினும் அதனை தந்து விடுவது எனது பழக்கம்.

அதிலும் கல்விக்கென்றால், ஒரு ஏழைப் பெண்ணின் திருமணத்திற்கென்றால் உடன் தந்து விடுவேன். எனது உதவியாளராக இருந்த உண்மைக் கிறிஸ்துவர் தம்பி ஜோதி கேட்பார். வேறு பணம் இல்லை என்பார். கர்த்தர் தருவார். இதனை எழுதுவதே எனக்கு வெட்கமாக இருக்கின்றது.

நான் சிறுவயதில் படித்த நகராட்சி பள்ளிக் கூடம் இப்போது என் ஞானத் தந்தை பாரதியின் பெயரில் நடந்து வருகின்றது. அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியை ஒரு முறை வந்தார்.அந்தப் பள்ளிக்கு ஒரு தொகையைச் சொல்லி நன்கொடையாகக் கேட்டார். அதை ஒரு பெரிய துணிக்கடைக்காரர்களிடம் சொல்லி வாங்கித் தரச் சொன்னார். நானே அந்தத் தொகையைக் கொடுத்து அவரிடம் ஒரு வேண்டுகோள் வைத்தேன். எனது பெயரைப் போடக் கூடாது என்று. அந்தப் பள்ளிக் கூடத்திற்கு நான் அந்தப் பணத்தைத் தர வேண்டும் என்றுதான் என் அன்னை காந்திமதி அதனை என்னிடம் கொடுத்துள்ளாள் என்று நான் நம்புவதால். அவர் ஒரு வேண்டுகோள் வைத்தார். காலஞ்சென்ற எனது மனைவி, சுகாவின் அம்மா வேலம்மாள் கண்ணன் என்று போட அனுமதி வேண்டும் என்று. எத்தனை ஏழைக் குழந்தைகளின் பசியாற்றியவர் என்று ஏற்றுக் கொண்டேன். இன்னும் சில கிறித்துவ நிறுவனங்களுக்கு மாதம் தோறும் எனது கூட்டங்களின் வாயிலாக வரும் பணத்தில் பாதிப் பகுதியைத் தருவேன். அந்தப் பாதிரிமார்கள் ரசீது என்பார்கள். அன்னை மேரி என்று போட்டுக் கொள்ளச் சொல்வேன். கடவுளர் தாராமல் நமக்கு இந்த மரியாதையும் பணமும் ஏது? எனது உடன் பிறந்த அண்ணன் அரசினர் வங்கியிலே எங்கள் மூத்த அண்ணன் சங்கரன் அவர்கள் வேலை வாங்கித் தந்தும் கல்விச் சேவை தான் செய்வேன் என்று அரசினர் பள்ளியிலே பணி செய்து இன்று ஒய்வு பெற்றிருக்கின்றார். முருகன்

என்று பெயர். எத்தனை ஏழைக்குழந்தைகளை அதில் அதிகம் சமூகத்தால் தாழ்த்தப்பட்டோர் குழந்தைகளைப் படிக்கவைத்தார். இன்றும் பல பேர் என்னை வெளிநாடுகளிலோ இங்கோ பார்க்கும் போது முருகன் சார்வாள் தான் என்னைப் படிக்க வைத்தார் என்று சொல்லும் போது நான் மனம் நிறைந்து போவேன்.

எனது மனைவி புற்றுநோயால் வாடும் போது சென்னையில் மாலை வேளைகளில் கடற்கரையில் சென்று அமர்ந்திருப்போம். ஒருநாள் ஒருவர் வந்து பசிக்கின்றது என்றார். நான் பத்து ரூபாய் கொடுத்தேன் எனது மகன் சுகா சொன்னார். பத்து ரூபாய்க்கு சென்னையில் சாப்பிட முடியாது என்று. நீங்களே கொடுங்கள் என்றேன். அவர் ஐம்பது ரூபாய் கொடுத்தார். இரவு எனது மனைவி என்னிடம் சொன்னார் நான் நிம்மதியாக இறந்து போவேன். நமது பிள்ளைகளும் நம்மைப் போலவே வளருகின்றார்கள் என்று. உதவுவதற்காகத் தான் மனிதன் படைக்கப் பட்டிருக்கின்றான்.

வள்ளுவப் பேராசான். நீ எவ்வளவு உதவி செய்திருக்கின்றாய் என்பது பெரிதல்ல. நான் இத்தனை இலட்சம் கொடுத்தேன் என்று அளவு பார்ப்பதல்ல. அதனை ஒரு ஊழல் செய்யும் அரசியல்வாதிக்குக் கொடுத்தால் நீ ஏதோ எதிர்பார்ப்பில் கொடுப்பது. ஒரு நல்லவனுக்கு உண்மயானவனுக்கு அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் இத்தனையும் இல்லாத வாழ்க்கை வாழ்கின்ற ஒரு சான்றோனுக்குச் செய்தால் தான் அது வெறும் ஒரு ரூபாயாக இருந்தாலும் போற்றுதலுக்குரியது என்கின்றார்.



குறள்

உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

அவ்வைப் பெருமாட்டி மலைப்பகுதிக்குப் போகின்றார். சரியான மழை. நனைந்து போகின்றார். மழைக்கு அந்தத் தமிழ்ப் பெருமாட்டியைத் தழுவினால் தனக்கு இன்னும் இனிமை சேரும் என்ற ஆவல். முற்றிலும் நனைந்த அவ்வை யாதவ குலத்தைச் சார்ந்த அங்கவை சங்கவை என்ற இளம்பெண்கள் இல்லம் செல்லுகின்றார்.

குளிரில் நனைந்து வந்திருக்கும் அவ்வைப் பெருமாட்டிக்கு தலை துவட்ட துணி தந்து தங்களிடம் இருக்கின்ற காய்ந்த தாங்கள் கட்டிக் கொள்கின்ற சிற்றாடையை அவ்வைப் பெருமாட்டிக்கு உடுத்திக் கொள்ள அளிக்கின்றனர்.

வயது முதிர்ந்த அவ்வைப் பெருமாட்டி குளிரில் இருந்து விடுபட அவர்கள் தந்த அந்தச் சிற்றாடை அவ்வையை ஒரு செய்யுளைப் பாட வைத்து விட்டது. ஆமாம் எப்படிச் செய்யுள் அதில் இரண்டு குறு நில மன்னர்களும் ஒரு வேந்தனும் வருகின்றனர். அவர்களோடு இந்தப் பெண்களை வைத்துப் பாடுகின்றார். இவர்களே அவர்களை விடப் பெரியவர்கள் என்று வேறு சொல்லுகின்றார்.

பாரியுடன் சில நாட்கள் இருந்த அவ்வை கிளம்புகின்றார். பாரியோ இன்னும் கொஞ்ச நாள் இருந்து விட்டுப் போக பெருமாட்டி யிடம் விண்ணப்பிக்கின்றான். அவ்வை மீண்டும் தான் வருவேனே என்று கிளம்புகின்றார்.

பொன்னும் பொருளும் கொடுத்து அனுப்புகின்றான் ஏக்கத்தோடு. விடை பெற்ற அவ்வை கானகத்தின் வழியாக நடந்து செல்லும் போது யாரோ ஒரு வீரன் குதிரையில் வந்து அவ்வை கையிலிருந்த பையைப் பிடுங்கிச் செல்கின்றான். அவ்வையால் நம்ப முடியவில்லை. பசிப்பணியும் வேறு பிணிகளும் தம் மக்களை தீண்டாமல் ஆட்சி நடத்துகின்ற பாரி நாட்டில் கொள்ளையா. மனம் பதை பதைக்கின்றது. அவ்வைப்பிராட்டி வேகம் வேகமாக பாரியின் அரண்மனைக்குத் திரும்புகின்றார்.

பாரியின் முன்னால் வந்து நிற்கின்றார். மூச்சு இரைக்கின்றது. பாரி என்ன என்னவென்கின்றான். உன் நாட்டில் வறுமை வந்து விட்டதா. திருட்டு நடக்கின்றதே என்கின்றார்.

வறுமையா என் நாட்டிலா. இல்லவே இல்லையே பெருமாட்டி.

பின் எப்படி என்னிடமே ஒருவன் வந்து திருடுகின்றானே.

அவனுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம் என்று சொல்லுங்கள் கொடுத்து விடுவோம் என்கின்றான்.

திருடனைக் கண்டு பிடி என்கின்றார். பிறகு சொல்லுகின்றேன் தண்டனையை என்கின்றார் அவ்வை.

திருடன் இங்கே தான் இருக்கின்றான். தண்டனையைச் சொல்லுங்கள் பெருமாட்டி என்கின்றான் பாரி. எங்கே நீயும் நானும் மட்டும் தானே இங்கே இருக்கின்றோம்.

ஏன் நான் திருட மாட்டேனா.

பாரி என்ன சொல்லுகின்றாய். உனக்கு என்ன வந்தது. நீ ஏன் திருட வேண்டும்.

இதோ நான் திருடியதனால் தானே நீர் திரும்பி வந்தீர். இன்னும் ஒரு நாளோ இரண்டு நாளோ என்னோடு நீரிருக்க வேண்டும் என்ற ஆவலில் நானேதான் திருடினேன் என்கின்றான் பாரி மன்னன்.

அவன் தமிழ் ஆர்வத்தைக் கண்டு அவ்வைப் பெருமாட்டி அவனை வாழ்த்தி நிற்கின்றாள்.

இரண்டு நாள் அங்கே இருந்து விட்டுப் பிரியா விடை பெற்றுத் திரும்புகின்ற வழியில் பழையனூர் செல்கின்றாள். அங்கே வேளாண்குல மன்னனான காரியைப் பார்க்கச் செல்கின்றார்.

காரியோ கழனியில் களை பிடுங்கும் கருவியைக் கொண்டு களைகளைப் பிடுங்கிக் கொண்டிருக்கின்றான்.

அவ்வைப் பிராட்டி பயணம் செல்ல முற்படுகின்றார்.

காரியோ உழவின் பெருமையைப் பாடிக்கொண்டே இருக்கின்ற தாங்கள் ஒரு நாள் உழவராய் மாறுங்களேன் என்று சொல்லிக் கொண்டே அவர் கையிலும் ஒரு களை பிடுங்கும் கருவியைக் கொடுக்கின்றான். அவ்வைப் பெருமாட்டியிடம் அருஞ்சுவைத் தமிழைக் கேட்டுக் கொண்டே களை பிடுங்கும் நேரம் கழிகின்றது. மாலையில் இருவரும் அரண்மனை வருகின்றனர்.

அவ்வைப் பிராட்டி காரியிடம் நான் இன்று சென்றிருக்க வேண்டும். நீ என்னடாவென்றால் என்னை களை பிடுங்கச் சொல்லி விட்டாய். என்ன காரணம் என்றார்.

தாயே அதனால் தானே இன்று முழுவதும் என்னோடு இருந்தீர்கள். இப்போது பாருங்கள் இரவு என்னோடு தங்கியிருக்கின்றீர்கள். அந்த அருந்தமிழை நான் பருக வேண்டுமென்ற ஆவலினால் தான் இவ்வாறு செய்தேன் என்றான்.

பின்னர் அவனிடம் இருந்து சேரன் அரண்மனைக்கு பல நாட்கள் நடைக்குப் பிறகு வந்து சேருகின்றார் அவ்வைப் பிராட்டி.

சில தினங்கள் இருந்து விட்டு அங்கிருந்து கிளம்புகின்ற அன்று சேரன் அரண்மனையில் பெரிய விருந்தொன்று. உணவருந்தி விட்டுத் தான் போகவேண்டும் என்று சேரனின் அன்பு வேண்டுகோள். சரி என்ற அவ்வை ஒத்துக் கொள்கின்றாள். எந்தப் பந்தியில் அவர் போய் உட்கார்ந்தாலும் சேரன் என்ன செய்கின்றானாம், அடுத்த பந்தியில் சாப்பிடலாம் என்று அவ்வைப் பிராட்டியை எழுப்பி விடுகின்றானாம். அமைச்சர் மன்னனிடம் பந்தியில் உட்கார்ந்தவரை எழுப்புவது பண்பல்லவே என வினவிய போது சேரன் சொன்னானாம் அவ்வைப் பிராட்டி அதுவரை என்னோடு இருந்து தமிழ் அமுதம் தருவாரே என்றானாம். அருகில் இருந்து கேட்ட அவ்வை பூரித்துப் போனாராம்.

இந்த மூன்று செய்திகளையும் கூறுகின்ற அவ்வை இந்த மூன்று மன்னர்களின் அன்பு அனைத்தும் இந்த மலைக்குல யாதவ மகளிர் தந்த நீலச் சிற்றாடைக்கு சமம் என்கின்றார். மழையில் நனைந்தவருக்கு அந்தச் சிற்றாடை தந்த கதகதப்பு செய்யுளாக வருகின்றது.

செய்யுள்

பாரி பறித்த பறியும் பழையனூர்க்
காரி கொடுத்த களைக் கொட்டும் - சேரமான்
வாராயெனவழைத்த வாய்மையும் இம்மூன்றும்
நீலச் சிற் றாடைக்கு நேர்

அண்ணாச்சி பலவேசம் வந்திருக்கான்.

என்ன விஷயமாம்.

சரி உட்காரச் சொல்லு.வாரேன்.

ஏய் பலவேசம் பம்பாய்லே இருந்து எப்பம் வந்தே.

பத்து நாளாச்சு அண்ணாச்சி.

அங்கே எல்லாரும் நல்லாருக்காங்களா?

ஆமாண்ணாச்சி பயலுவ ரெண்டு பேரும் எஞ்சீனியருக்குப் படிச்சிட்டு வெளிநாட்டுல வேல செய்தானுவ. பொம்பளப் புள்ளய இங்கன தான கட்டிக் குடுத்திருக்கேன். அவளயும் பேரப் புள்ளகளயும் பாக்க வருஷத்தில் ரெண்டு தடவ வருவம்ல்லா. அதாம் வந்தேன். அப்பிடியே திருச்செந்தூர்ல போயி சஷ்டி விரதமும் இருந்திட்டு சாமியக் கும்பிட்டிட்டு வந்தேன் அண்ணாச்சி.

வருஷம் தவறினாலும் நீதாம் சரியா வந்திருவேல்லாடே. மக நல்லா இருக்காள்லா. பேரப் புள்ளக எப்பிடி இருக்காங்க. மருமகன் தொழில் எப்பிடி இருக்கு.

எல்லாரும் நல்ல இருக்காங்கண்ணாச்சி. அவாள் தொழிலும் நல்லா இருக்கு. நம்ம யாருக்குக் கெடுதி நெனச்சிருக்கோம்.

அது சரி வேற என்ன சமாச்சாரம் சொல்லு.

இல்ல அண்ணாச்சி ஊரப் பாத்தா ஒண்ணும் புரிய மாட்டேங்குது.

என்னது புரியல சொல்லு.

பரமசிவப் பய போடு போடுன்னு போடுதாம். காரு வண்டின்னு. அவம் வீட்டுக்காரியக் கோயில்ல பாத்தேன்.. அண்ணாச்சி. இருநூறு பவுனுக்கு மேல போட்டிருக்கா. பயலுவ ஊட்டில படிக்கானுவளாம். அவாள் ஜமீந்தார் வீட்ட வாங்கிட்டானாமே.

பாடகலிங்கமா அவன் இவனத் தாண்டிருவாம் போல. வெளிநாட்டுக்கு போயிட்டு போயிட்டு வாரேங்காம். எப்பப் பாரு. ஏரோப்பிளேன் தாங்கானுவ ஊருல. கோயிலுக்கு வாராம். பாக்கறவன் கையிலேல்லாம் புது ஐம்பது ரூபா நோட்டாக் கொடுக்காம். பட்டரு எல்லாரும் அவனப் பாத்தவுடனே மாமா வாங்கோ வாங்கோங்கானுவ.

மேரி டீச்சர் மவம் அவன் என்னமோ மருந்து தயார் பண்ணுதானாம். அவம் பவுசப் பாக்க முடியல.

நெனச்சேம். நீ ஆரம்பிக்கலயேண்ணு. எல நீ பம்பாய்க்கு எப்பம் போனே. ஒங்க அய்யா வச்ச சொத்தையெல்லாம் கொழுப்பெடுத்து அழிச்சிட்டு பத்து வட்டிக்கும் பதினஞ்சு வட்டிக்கும் வாங்கி ஒழிச்சிட்டு கடேசிலதானல பொழப்புக்கு வழியில்லாம பாம்பே போன. இப்பம் செல்வமாச் செழிப்பா வாழுதேல்லா. அப்பிடி ஒவ்வொருத்தனுக்கு ஒரு வாழ்க்கய கடவுள் கொடுக்காம். அந்தப் பயலுவ ஒன்னயப் பத்தி ஒரு நாளாவது இப்பிடில்லாம் பேசினதில்லடே. சந்தோசமாத் தான் பேசுவானுவ. அண்ணாச்சி பலவேசம் பட்ட் தும்பத்துக்கு இன்னிக்கு எவ்வளவு நல்லா இருக்காம்ன்னு. எப்பம் பாத்தாலும் அடுத்தவம் வாழ்க்கையப் பாத்துப் பொறுமாதே நிறுத்தில.

ஒங்க மாமனா அதாம் என் கூடப் படிச்சானே. அவம் வேற எல்லா எடத்திலும் எவனப் பாத்தாலும் அதும் எனக்கு வேண்டியவனப் பாத்தா எல அவம் பெரிய வீட்டுக் காரப் பய அவம்தாம்ல கண்ணன் எங்கூடப் படிச்ச பய பத்தாம் கிளாஸ் பாஸ் பண்ணுனதே பெரிசு. அவ்னுக்கு பாத்தியால உலகம் பூராம் மரியாத. நான் எம்.ஏ. படிச்சிருக்கேன் தெரியும்லா. நான் எங்கே இருக்கேன் பாத்தேல்லா ங்கானாம்.

எல எனக்கே புரியலதாம். காந்திமதியும் நெல்லையப்பனும் என்னய அவங்க புள்ளையா வச்சிருக்காங்க. அதாம் எத படிச்சாலும் மனசில ஆயிருது. பல பேர் ஒங்க மாமன மாரி ஆளுங்கள்ளாம் நாம் உருப் போடுதேம்ங்கானுவளாம். இல்லல ஒரு செய்யுளையோ பாட்டையோ

படிச்சேன்னு வை. நல்லா இருந்தா அப்பிடியே ஒரு தடவ படிச்சாலே மனசுக்குள்ள நின்னுக்கிடுது. இப்பம் படிச்சாக் கூடத் தாம். என்னல செய்ய.

எல பொறாமப் படுறத நிறுத்துங்கல. அரசியல்ல எவ்வளவு ஒசரத்தில இருந்தேம். நாம் பாக்க வளந்தவங்கல்லாம் மந்திரியா இருக்கானுவ. அது அவனுகளுக்கு கடவுளாப் பாத்துக் கொடுத்தது.

எல அய்யா எல்லாக் குத்தத்தையும் செஞ்சவனைத் தாம் பேராசான் வள்ளுவரு குத்தவாளின்னு சொல்லுதாரு.

பொறாமைய மட்டும்தாம்ல அதையே குத்தவாளிங்காரு. ஆமடா பொறாமையே குத்தாவாளின்னா. பொறாமையில புழுங்கிக்கிட்டு அலயுதவனுவள. ஒன்னய ஒம் மாமனப் போல ஆளையெல்லாம் பெரும் குத்தவாளி மன்னிக்க முடியாத குத்தவாளிங்காருடே. இந்த சென்மத்தில் செல்வத்த இழந்திருவாம். தொடர்ந்து தீய வழியிலத்தாம் அவம் வாழ்க்க போகும்ங்காரு டே. தெரியாதா. ஒன்னயும் தாம் கடவுள் நல்லா வச்சிருக்காருலாலே. இந்த லட்சணத்தில கந்த சஷ்டி விரதம் இருந்தானாம். நெஞ்சுக்குள்ள இருக்குற சூரன ஒழிங்கல. பொறகு போயி முருகப் பெருமான கும்பிடுங்க.

குறள்

அழுக்காறு எனஒருபாவி திருச்செற்று
தீயுழி உய்த்து விடும்.

காளமேகத்தின் சந்தேகம்

சில மருத்துவர்களைப் பார்க்கப் போனால் சில அதிர்ச்சிகளைச் சந்திக்க நேரும். ஆமாம் அவருக்கிருக்கின்ற நோய்களை பட்டியல் தான் போட வேண்டி வரும்.

பிறகு அவர் குடும்பத்தாரைப் பார்த்தால் சொல்லொணாத் துயரம். ஆமாம் அவர்களும் நோயைப் பட்டியலிட வேண்டியவர்களாகத் தான் இருப்பர்.

மருத்துவமனையில் பாதி படுக்கைகள் அவரது உறவினர்களுக்காக ஒதுக்கப் பட்டிருக்கும்.

மற்ற மருத்துவர்கள் பொறாமை கொள்ளும் அளவிற்கு அவரது உறவினர்கள் குடும்பத்தார் மூலமே ஆங்கிலத்தில் கேட்பார்களே டாக்டர் ப்ராக்டீஸ் எப்படி இருக்கு என்று அந்த ப்ராக்டீஸ் அவருக்குக் கிடைத்து விடும்.

இது நான் வாழ்க்கையில் காண்பது.

காளமேகப் புலவரும் இப்பிடி ஒரு வித்தியாசமான சூழலில் சிக்கிக் கொள்கின்றார்.

ஆமாம் வேளுருக்குப் போய் சிவனை வழிபடப் போனால் எல்லாரும் அவரிடம் வேளூர் சிவ பெருமான் எல்லா நோய்களையும் வினைகளையும் தீர்த்து விடுவார் என்கின்றார்கள்.

காள்மேகம் கேட்கின்றார் இவரா சிவ பெருமானா. அட போங்காணும். இவருக்கே வாதக்கால். ஒன்றுமில்லை காற்றுத் தான் அவருக்குத் திருவடி. இன்னொன்று ஆடல் வல்லான் ஆடும் நேரம் கால் வளைந்திருக்குமே, அதைச் சொல்லுகின்றார்.

இவர் மைத்துனர் உமையம்மையின் அண்ணன் திருமால் இருக்கின்றாரே அவருக்கோ நீரிழிவு என்கின்றார். ஒன்றுமில்லை பாற்கடலிலே படுத்திருக்கின்றாரே தண்ணீர் சூழப் படுத்திருப்பதனாலே நீரிழிவு என்கின்றார்.

இவர் மூத்த மகன் பிள்ளையார் இருக்கின்றாரே வயிறு வீங்கிக் கிடக்கிறது. அதை இன்னும் குணப்படுத்தவில்லை.

இப்படி இவர் குடும்பத்தின் உறுப்பினர்கள் மட்டுமில்லை. அவருமே நோய்வாய்ப் பட்டிருக்கின்றார்.

இவர் நோயைத் தீர்ப்பாராம். வினையைத் தீர்ப்பாராம்.

செய்யுள்

வாதக் காலாந்தம்க்கு மைத்துனர்க்கு நீரிழிவாம்
பேதப் பெரு வயிறாம் பிள்ளைக்கு---ஓதக்கேள்
வந்த வினை தீர்க்க வகையறியார் வேளூரர்
எந்த வினை தீர்ப்பா ரிவர்

ஒரு பெண் மிக மகிழ்ச்சியாக இருக்கின்றாள்.

காதலனைக் கண்டு நாட்களாயிற்று. கவலை தான். அழுது கொண்டுதான் இருக்கின்றாள். ஆனாலும் அவளுக்கு மகிழ்ச்சியும் இருக்கின்றது.

கவியரசு கண்ணதாசன் பாவமன்னிப்பு திரைப்படத்திலே எழுதுவார்.

சிலர் சிரிப்பார் சிலர் அழுவார். நான் சிரித்துக் கொண்டே அழுகின்றேன். சிலர் அழுவார் சிலர் சிரிப்பார் நான் அழுது கொண்டே சிரிக்கின்றேன்.

பேராசான் காட்டும் இந்தப் பெண்ணைப் பார்த்துத்தான் அதனை எழுதியிருப்பாரோ .

ஆமாம் கண்களில் இருந்து கண்ணீர் ஆறாய்ப் பெருகுகின்றது. ஆனால் அவளோ கண்ணைப் பார்த்து ஆமாம் அவள் கண்களைப் பார்த்தே உனக்கு நல்ல வேண்டும் வேண்டும் என்று குற்றஞ்சாட்டுகின்றாள்.

ஒருவருக்குத் துன்பம் செய்கின்றவர்களுக்கு அந்தத் துன்பம் தண்டனை வழங்கும் என நம்பிய அவளுக்கு மிக மிக நிம்மதி.

ஆமாம் இந்தக் கண் தானே நான் சொல்லச் சொல்லக் கேட்காமல் அவனை அந்தப் படுபாவியைப் பார்த்தது. அதன் விளைவாகத் தானே எனது உடம்பு மெலிந்து விட்டது. எனது உறக்கம் போய் விட்டது. தனியாகவெல்லாம் பேச ஆரம்பித்து விட்டேன். அவன் என்று வருவான் என்று தெரியவில்லையே. இந்தத் துன்பத்தைத் தந்த இந்தக் கண்கள் நன்கு அழட்டும். அழுது அழுது ஓயட்டும்.

இந்த நோயைத் எனக்குத் தந்த கண்கள் அவையும் மாட்டிக் கொண்டு தவிப்பதைப் பார்க்கும் போது இனிமையாக இருக்கின்றது என்கின்றாள்.

குறள்

ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்த கண்
தாஅம் இதற் பட்டது.

ஏய் எசக்கி நல்லா இருக்கியால. எத்தனை நாள் ஆச்சு ஒன்னப் பாத்து. இந்தப் பயலுவ ரெண்டு பேரும் நல்லப் படிக்கானுவளா.

ஒங்க புண்ணியத்தில அதிலேலாம் ஒரு கொற கிடையாது அண்ணாச்சி.

கருங்குளத்துக்காரி எப்பிடி இருக்காடே.

அவளுக்கு என்னா. எதுக்கெடுத்தாலும் அத்தான் கிட்ட சொல்லிருவேம்ன்னு மெரட்டுதா. டிவி யில ஒங்க நிகழ்ச்சின்னா சாப்பாடு கொஞ்சம் முன்ன பின்னத்தான். அத்தான் எப்பம் இதையெல்லாம் படிச்சாருன்னு வேற கேள்வி.

அப்பிடியாடே.

பயலுவ ரெண்டு பேரும் அதுக்கு மேல. பெரியப்பா நிகழ்ச்சி பத்து மணிக்குன்னு வெடியக்காலம் எந்திரிச்சிதலே இருந்து சொல்லிக் கிட்டே இருப்பானுவ.

எல நீ சொல்லுததப் பாத்தா ஒனக்கு என் நிகழ்ச்சி பிடிக்காத மாரித் தெரியுதே.

பாத்தேளா அண்ணாச்சி. வாயப் புடுங்கி பாக்கறத நிறுத்துங்க அண்ணாச்சி.

எல நானால வாயப் புடுங்குனேன். நீயா எல்லாம் சொல்லிட்டு எம் மேல ஏம்ல பழி போடுத.

கொழுந்தியாளும் புள்ளைகளும் பெரியப்பா மேல எம்புட்டு பிரியமா இருக்காங்கன்னு சொல்லுததுக்காக சொன்னேன் அண்ணாச்சி.

அது நீரு சொல்லித்தாம் எங்களுக்குத் தெரியணுமோ.

அண்ணாச்சி இந்தப் புட்டாரத்திப் பய ரொம்ப துன்பப் படுத்துதாம் அண்ணாச்சி.

எல அவனப் போயி குத்தம் சொல்லுத. அவம் தங்கமான பய ஆச்சே. அனேகமா அவன எல்லாத்துக்கும் பிடிக்குமேல. அவம் என்ன பண்ணுனான்னு அவனக் குத்தம் சொல்லுத.

அண்ணாச்சி நல்ல பயதாம். யாரு இல்லேங்கா.

பொறவு என்னடே.

பட படன்னு பேசுதாம். என்ன பேசுதோம்ன்னு தெரியாமப் பேசிப் போடுதாம் அண்ணாச்சி.

எப்பமுமால பேசுதாம்.

அப்பிடி யாரு சொன்னா. சில நேரம் தாங்க முடியல அண்ணாச்சி.

அதுக்கப்புறம் உங்கிட்ட பேசுதானா இல்லையா.

சாயங்காலமே வந்து எசக்கி விஞ்சை விலாஸில போயிச் சாப்பிடுவோமான்னு கூப்பிடுதாம் அண்ணாச்சி.

அப்பம் அதுக்கு என்ன அர்த்தம்ன்னு நீயே சொல்லுடே.

அவம் முட்டாத் தனமாப் பேசுதாம்ன்னு நெனக்கியா. இல்லல நம்ம எசக்கிதானேன்னு உரிமையோட பேசுதாம்ன்னு நெனயேன்.

அவாள் ஒன்னோட நண்பனாம். அதுனால நம்ம என்ன பேசுனாலும் எசக்கி ஒண்ணும் நெனக்க மாட்டாம்ங்கிற நெனப்புல பேசுதாம் புரிஞ்சிக்கிட்டியா.

வள்ளுவர் அய்யா சொல்லுதாங்க இத இப்பிடி நெனைக்கணும்ன்னு.

குறள்

பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயல்.

அண்ணாச்சி நல்லா இருக்கேளா.

ஏய் இது யாரு நாறும்பூ நாதனா. ஏய் அண்ணாச்சியை நெனவில வச்சிருக்கியாடே. அண்ணாச்சி இங்கனயே கெடந்து அம்மே கையிலயும் பொறவு மதினி கையிலேயும் தின்னு வளந்த ஒங்க தம்பியப் பாத்தா இந்த கேள்வியக் கேக்கியோ. இப்பிடிக் கேலியக் கேட்டு எம்புட்டு நாளாச்சு.

சரி நல்லா இருக்கியா. கடயநல்லூருக்காரி எப்படி இருக்கா. ஒரேயடியா மலயாளத்து மாப்பிள்ளையாவே மாறிட்டியாடே.

என்னண்ணாச்சி இங்கன வேல கெடைக்கலைல்லா. நீங்க முயற்சி பண்ணியும் வேல கெடைக்காத ஒரே பய நாந்தானே அண்ணாச்சி. ஏதோ கேரளா போனேன். இன்னிக்கு நீங்க சந்தோஷப்படுத மாரி நல்லாத்தனே இருக்கேன்.

புள்ளைக படிக்கானுவல்லாடே.

ஆமண்ணாச்சி.

ஏய் மலயாளத்தப் படிச்சிட்டு தமிழ விட்டுட்டானுவளா. இல்ல தமிழும் படிக்கானுவள்ளா.

என்னண்ணாச்சி எங்க தின்னு வளந்திருக்கேன். அதுல அண்ணாச்சி பள்ளிக்கூடம் நடத்துதது நம்ம செங்கோட்டைக்காரர். அவாள் பையனுக்கே பேர் பாரதில்லா. தமிழ் சொல்லிக்குடுக்க அங்கன ஒரு பிள்ளை அண்ணாச்சி காருகுறிச்சி ஊரு. நாதஸ்வரம் மாதிரில்ல தமிழ் பேசும்.

அதுல்லாம் சரியாத்தான் இருக்கு அண்ணாச்சி.

அமெரிக்கா அங்கன இங்கன இருக்கற சில பயவுள்ளய ஏம் பிள்ளைகளுக் கெல்லாம் தமிழே தெரியாதுன்னு பீத்துதாளுவ. நம்ம என்ன செய்ய அவ வீட்டுக்காரனும், ஆமண்ணாச்சி அவ சொல்லுதது தாம் அண்ணாச்சி சரிங்கானே.

விடுங்கண்ணாச்சி பெத்த தாய மதிக்காத எந்தப் பயலும் வாழப் போறதில்லன்னு நீங்க சொல்லி எத்தன பயலுவள நாங்களும் பாத்திட்டோம்.

நம்ம தெருவில நம்ம மார்வாடிப் புள்ளக இருக்கானுவளே. அவனுவ என்னமா தமிழ் பேசுதானுவ தெரியுமாடே. அதிலேயும் நம்ம கெட்ட வார்த்தையெல்லாம் என்னமா பேசுதானுவ.

அண்ணாச்சி இன்னொன்னு பாத்திருக்கேளா. எந்தப் பெரிய ஆளப் பாத்தாலும் மார்வாடிப் புள்ளய கால்ல விழுந்து கும்பிடுவானுங்க அண்ணாச்சி. நம்ம பயலுவ சிகரெட்ட பத்த வச்சிக்கிட்டு என்ன சித்தப்பா சொகமா இருக்கேளாங்கானுவ. என்னத்தப் பண்ண.

நேத்து ஒரு கூத்து அண்ணாச்சி. ஒங்க கொழுந்தியாளோட சித்தப்பா வீட்டுக்குப் போனேன்.

இன்னும் அப்படியே தான் இருக்கானா. இல்ல ஏதும் மாறி இருக்கானாடே.

எங்க மாற. அப்படியேதாம் இருக்கா அவாள். காலேல போக முடியல. சின்ன மத்தியானம்ன்னு அம்மை சொல்லுவாள்ளா. அப்படி ஒரு பன்னண்டு மணிக்குப் போனேன். அவாளுக்கு சங்கடத்தக் குடுத்திரக் கூடாதுன்னுதான்.

அவாள் வழக்கம் போல ஆரம்பிச்சா. என்ன மருமகன ரெண்டும் கெட்டான் நேரத்தில வந்திருக்கியோ. எப்பவும் இப்பிடித் தானே பண்ணுதீயோ. பொறவு எங்க சின்ன மாமனாரு வீட்டுக்குப் போனேன்.வழக்கம் போலச் சாப்பிடச் சொல்லலம்பீயோ.

ஊர்ல இருக்க பயலுவளும் அந்தக் கஞ்சப் பிசுநாறிப் பய வீட்டுக்கு ஏம் போனீயோம் பானுவ ன்னு ஒரு அடி அடிச்சா. அப்பிடி ஒண்ணும் இல்ல மாமா. இன்னிக்குச் சாயங்காலம் ஊருக்குப் போணும். நேரம் வாய்க்கல. அடுத்த தடவ ஒங்க மக பேரப் புள்ளகளோட வருவேம். அப்ப

எல்லாருமா சாப்பிடுதோம்ன்னு சொன்னேன். அவாளுக்கு ரொமப சந்தோஷம்.

இவ்வளவும் முடிஞ்சவுடனே எங்க சின்ன மாமியா வெளில வாரா. எப்பம் வந்தீய. இருந்து சாப்பிட்டுட்டுத் தாம் போகணும்ங்கா. இவாள் சொல்லுதா அவாள் ஊருக்குக் கௌம்புதாளாம். நானும் கெஞ்சி பாத்திட்டேம். சாப்பிட மாட்டேன்னுட்டா.

எல என்ன செய்ய ஒவ்வொருத்தன ஒவ்வொரு மாரி இறைவன் படைச்சிருக்காரு.

வள்ளுவப் பேராசான் சொல்லுதாரு. வௌச்சலத் தர்ற வயக்காடு இருக்குல்லாடா. அது என்ன பண்ணுமாம். தன்னில வௌஞ்சு அறுத்து எடுத்து வீட்டில கொண்டு வச்சுச் சாப்பிடுத குடும்பம் வீட்டிற்கு வருகின்ற விருந்தாளிக் கெல்லாம் மகிழ்ச்சியா சோறு போட்டாம்ன்னா. அந்த வயக்காடு இவம் வெதைக்காட்டாக் கூட வௌஞ்சுருமாம்.

என்ன சொல்லுதாரு தெரியுதா வெதைக்காம வயக்காடு வௌயுமா டே. ஆனா எப்பிடிச் சொல்லுதாரு பாத்தியா பேராசான். அந்த வயக்காடு இறைவன் படைப்பில்லாடே. அதனாலே அது தானா வௌஞ்சிடும்ங்காரு. எப்படியாவது இவனுவள திருத்திடணும்ன்னு அவர் கெடந்து பாடாப் பட்டிருக்காரு.

ஆனா இவனுவ திருந்தின மாறித் தெரியல்லயே அண்ணாச்சி.

அதுக்கு இவனுவ மனுஷனா இருக்கணும்ல்லாடே.



குறள்

வித்தும் இடல் வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்.

ஒரு பெண் தன்னந்தனியாக உட்கார்ந்து யாரோடோ பேசிக் கொண்டிருக்கின்றாள். தன்னந்தனியாக என்றால் என்ன காதல் வயப்பட்டிருக்கின்றாள்.

சரி தன்னந்தனியாக என்றால் யாருடன்.

அருகில் சென்றால் தான் தெரிகின்றது. நாம் அவள் அருகில் சென்று நிற்பது கூட அவளுக்குத் தெரியாது. ஆனால் அவள் பேச்சு தொடர்கின்றது.

உனக்கு கொஞ்சமாவது நன்றி இருக்கின்றதா. நன்றி என்றால் என்னவென்றாவது தெரியுமா. சொல்லு. ஏதாவது பேசுகின்றாயா. நான் தான் பேசிப்பேசித் தோற்றுக் கொண்டிருக்கின்றேனே உன்னிடம்.

இந்த ஆணவம் ஆகாது. என்றாவது ஒரு நாள் நீ பதில் சொல்லி விடுவாய் என்கின்ற நம்பிக்கையில் தான் நான் உன்னிடம் பேசிக் கொண்டிருக்கின்றேன். சொல் இன்றாவது சொல்.

உண்மையிலேயே நன்றிக்கு உனக்கு அர்த்தம் தெரியாதா. ஒருவர் செய்த நன்மையை மறப்பதும் அவர்களைக் குறித்தே சிந்திக்காமல் இருப்பதும். ஆனால் அவர்கள் நமக்குச் செய்த நன்மையை மட்டும் நாம் அனுபவித்துக் கொண்டிருப்பதும் எந்த வகையில் நியாயம். சொல்.

என்னுயிரும் உடலும் எல்லாத் துன்பங்களையும் அனுபவித்து இரண்டும் பிரிகின்ற வரை சொல்ல மாட்டாயா. சொல் சொல். மன்றாடுகின்றாள் பெண். யாரிடம் மன்றாடுகின்றாள். வேறு வழி இன்றி அவளிடம் கேட்கத் தலைப்படுகின்றாள் தோழி.

யாரிடம் பேசிக் கொண்டிருக்கின்றாய். என்று அவள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கின்றாள். தோழி ரொம்ப மெதுவாகத் தோழியிடம் என்ன என்கின்றாள்.

ஒரு வாரத்திற்கும் மேலாக உன்னைப் பார்த்துக் கொண்டிருக் கின்றேன். மொட்டை மாடியில் வந்து உட்கார்ந்து கொள்கின்றாய்.

பார்வை எங்கோ இருக்கின்றது. ஆனால் பேசிக் கொண்டேயிருக் கின்றாய். சொல்லேன் யாரிடம் பேசுகின்றாய். அது யார் எனக்குத் தெரியாத ஆள்.

நீ கேலி செய்வாய்.

என்ன நீ நான் செய்து கொள்ளாத கேலியா.

இல்லை இதற்கு நீ ரொம்பக் கேலி செய்வாய்.

உன் காதலின் மீது சத்தியம் நான் கேலி செய்ய மாட்டேன். சொல்.

இந்த நெஞ்சிடம் தான் பேசிக் கொண்டிருந்தேன்.

நெஞ்சோடா.

பார்த்தாயா. கேலிக்குத் தயாராகின்றாய்.

அய்யோ என்ன பெண் நீ.உன் நெஞ்சோடா.

ஆமாம்.

என்ன வழக்கு.

இல்லை. இந்த நெஞ்சு எப்போது பார்த்தாலும் அவனயே நினைத்து நினைத்து அலைகின்றது. ஆனாலும் இதற்கு ஒரு பெரிய வாய்ப்பினை இறைவன் தந்து விட்டான் இல்லையா.

என்ன வாய்ப்பினை இறைவன் தந்து விட்டான். சொல்லேன். நானும் தெரிந்து கொள்ளுகின்றேன்.

இதான் எனக்குப் பிடிக்காது. ஏதோ உனக்குத் தெரியாது போலக் கேட்கின்றாய்.

உனக்குத் தெரிந்த எல்லாம் எனக்கும் தெரிந்திருக்க வேண்டும் என்பது உன் பெருந்தன்மையைக் காட்டுகின்றது. ஆனால் அப்படி எதுவும் எனக்குத் தெரியவில்லையே.

இந்த நெஞ்சு அவன் எங்கே போனாலும் எத்தனை தொலைவு போனாலும் அவன் பின்னாலேயே போய் விடுகின்றது. அதனால் தான் இந்த நெஞ்சுக்கு நன்றி இல்லை என்கின்றேன்.



புரியவில்லையே.

நீயே சொல் எனது கண்கள் அவனைப் பார்த்திருக்கா விடில். இந்த நெஞ்சுக்கு அவனைத் தெரிந்திருக்குமா. அப்படி இருக்கையில் இந்த நெஞ்சு அவன் பின்னாலேயே போகின்றதே. அந்தக் கண்ணிற்கு இது நன்றியாக இல்லையே. போகும் போதெல்லாம் இந்தக் கண்களையும் அழைத்துச் சென்றால் அவையும் அவனைக் கண்டு ஒளி பெறும் உற்சாகம் பெறும் ஊக்கம் பெறும் அல்லவா. ஏன் இந்த நெஞ்சுக்கு இது தெரிய மாட்டேனென்கின்றது. நன்றியில்லாத நெஞ்சு. நான் எப்படி மெலிந்து விட்டேன் பார்த்தாயா. அவனைப் பார்க்க முடியாததால் இந்தக் கண்கள் தம் தொழிலை மாற்றிக் கொண்டு விட்டன. என்னைத் தினந்தோறும் தின்னத் தொடங்கி விட்டன. அவை என்ன செய்யும் அவனைப் பார்த்தே பலநாட்கள் ஆகி விட்டதனால். பார்க்க முடியாத கண்கள் உண்ணும்தொழிலுக்கு மாறி விட்டன.

கண் எப்படித் தனியாகச் செல்ல முடியும். பெண்ணின் சூது புரிகின்றதா. மொத்த உடம்பும் அவனிடம் சென்றால் தானே கண்கள் போக முடியும். அவனைச் சென்று சேர அவள் நடத்தும் நாடகம் பார்த்தீர்களா.

குறள்

கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இது என்னைத்
தின்னும் அவர் காணலுற்று.

காதல் என்னவெல்லாம் செய்யும்.எல்லாம் செய்யும் அது எதை வேண்டுமானாலும் செய்யும் எந்த நேரம் வேண்டுமானாலும் செய்யும்.

காதல் வயப்பட்ட பெண்ணொருத்தி தோழிகளோடு உரையாடிக் கொண்டிருக்கின்றாள். அனைவரும் மகிழ்வோடு அவரவர் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு விதத்தில் அவரவர் காதலர் குறித்தும் காதலனோடு தாங்கள் கொண்ட ஊடல் குறித்தும் கூடல் குறித்தும் கலந்துரையாடுகின்றனர்.

ஒருத்தி சொன்னாள் மெல்லத்தான் தொடுவான்.ஆனால் அந்தத் தொடுதலிலேயே எனது மேனி மிக மிக வேகமாகக் குதிக்கத் தொடங்கும். தடுமாறி அவன் கையில் விழுமாறு பண்ணி விடுவான்.

மற்றொருத்தி சொன்னாள் தொடவே மாட்டான். அந்தப் பார்வையிலேயே நானாகத் துவண்டு அவன் மார்பிலே போய்ச் சாய்ந்து கொள்வேன்.

இன்னொருத்தியோ ஒற்றை விரலை வைத்துக் கொண்டு அந்தப் பாவி படுத்தும் பாடு மொத்த மேனியும் அவனிடத்தில் தஞ்சம் அடைந்தால் தான் உயிர் பிழைக்கும் என்றாள்.

திரும்பி நின்று கொள்வேன். கட்டித் தழுவுவான் என்று நிற்பேன். அவனோ செவி மடல்களில் அவனது மூச்சுக் காற்றை விடுவான். என் கைகள் தானாகவே பின்னால் போய் அவனது இரண்டு கைகளையும் தேடி இழுத்து என் இடையில் கோர்த்துக் கொள்ள இழுப்பேன். ஆனால் அவன் கைகள் மேல் நோக்கித் தாவி விடும்.

இதெல்லாம் என்ன ஏதேதோ பிதற்றுகின்றீர்கள். என் காதலனின் வேகம் யாருக்கும் வராது வரவே வராது என்கின்றாள்.

வேகமா வேகமா சொல் சொல்லடி பெண்ணே சொல் சொல் என்று அனைவரும் அவளின் முன் யாசித்து நிற்கின்றனர்.

அது சரி எடுத்தவுடன் வேகமென்றால் சுவைக்காதே அது என்கின்றாள் ஒருத்தி.

அப்படியெல்லாம் இல்லை. இது எல்லாம் முடிந்த பின்னர் காட்டுகின்ற வேகம்..

அப்போது என்ன வேகம்

கூடி மகிழ்ந்து மகிழ்வின் உச்சத்தில் எனது மூங்கில் தோள்களில் சாய்ந்து கொள்வான். அப்படியே என் கழுத்தில் முகம் புதைத்துக் கொள்வான். அப்போது தான் நான் திடீரென்று விழித்துக் கொள்வேன். அட அட என்ன வேகம் என்ன வேகம். அது அவனால் தான் முடியும் என்கின்றாள் பெண்.

தோழிகள் சொல் என்று கெஞ்சுகின்றனர்.

சொல்லுகின்றாள் பெண்ணாள் அவன் அவள் தோளிலே சாய்ந்திருந்தது அவள் கண்ட கனவிலேயாம். கனவு கலைந்து இவள் கண் விழித்தவுடனே இவள் தோளிலேயிருந்து நொடியின் நூறு பங்கிற்குள் அவள் நெஞ்சிற்குள்ளே போய் விடுவானாம். எத்தனை வேகம் எத்தனை வேகம். என்று பாராட்டுகின்றாள். தோழிகள் சிரித்த சிரிப்போ அப்பப்பா.

குறள்

துஞ்சுங்கால் தோள் மேலராகி விழிக்குங்கால்
நெஞ்சத்தராவர் விரைந்து.



காளமேகம்

சமையற்காரனாகவும் சிறந்த புலவனாகவும் இருந்த காளமேகம் திடீரென்று கணக்கிடுவதிலே தன் கவனத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டார்.

நமது நாட்டிற்கே உண்டான கேடு. எதிலாவது ஒருவர் பெரியவர் ஆகி விட்டால் அவர் உடனே மற்ற துறைகளைப் பற்றியும் நிரம்ப அறிந்தது போல் பேச ஆரம்பிப்பார். ஊடகங்களும் அவரிடம் போய் நேர்காணல் நடத்தும்.

ஒரு தலைசிறந்த சிற்பி அவர் ஒரு மன்னரின் சிலையை வடித்துக் கொண்டிருந்தார். அங்கே ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளி போனார். அந்தச் சிற்பி மன்னரின் காலணிகளைச் செதுக்கிக் கொண்டிருந்தார். அந்தத் தொழிலாளி செருப்புக் குறித்து சில உத்தி களைச் சொன்னார். சிற்பி அவர் சொன்னதைக் கேட்டு காலணிகளை அப்படியே செதுக்கினார்.

சிலைப் பணி நடந்து கொண்டேயிருந்தது. மீண்டும் ஒருநாள் அந்த செருப்பு தைக்கும் தொழிலாளி அங்கே வந்தார். சிற்பி ஒரு புன்முறுவலோடு அவரை வரவேற்றார்.

அன்று சிற்பி மன்னரின் கழுத்து மாலைகளைச் செதுக்கிக் கொண்டிருந்தார். அந்தத் தொழிலாளி மாலைகள் குறித்து தனது கருத்துகளைச் சொன்னார். சிற்பி சிரித்துக் கொண்டே அவர் விரும்புகிற மாதிரியே மாலைகளைச் செதுக்கிக் கொண்டேயிருந்தார். தொழிலாளி வருத்தம் கொண்டார்.

சிற்பி சொன்னார். அய்யா அன்று நீங்கள் சொன்னது உங்கள் தொழில் சார்ந்தது. அதன்படியே செய்தேன். நீங்கள் ஒரு நகைத் தொழிலாளியாக இருந்தால் இன்று கேட்டிருப்பேன். என்னை இடையூறு இல்லாமல் விட்டு விடுங்கள் என்று அவரை வெளியேற்றினார்.

அதே கதை தானோ காளமேகம் கதை என்று நான் நினைத்தேன். தமிழ் கற்றவனாயிற்றே. அதுவும் சுவைத்துக் கற்றவனாயிற்றே..



சுவைபடச் சமைப்பவன் அல்லவா. அவன் ஒரு கணக்குச் சொல்லுகின்றான்.

சிவ பெருமானுக்கு நெற்றிக் கண்ணோடு சேர்ந்து மூன்று கண்கள் தானே. அதில்தான் காளமேகப் புலவர் ஒரு கணக்குப் போட்டு நம் முன்னர் காட்டுகின்றார்.

என்ன செய்ய பெருந்தமிழ்ப் புலவர். அவர் கணக்கில் எப்படிப் பிழை வரும். சரியான கணக்குத் தான். வியந்து நிற்பதைத் தவிர வேறு என்ன செய்ய இயலும்.

அவர் கணக்கைப் பார்ப்போமா. சிவபெருமானை முக்கண்ணன் என்று சொல்லிக் கொண்டேயிருக்கிற பெரியவர்களே . அது தவறல்லவா. தமிழர்கள் தவறு செய்யலாமா. பதில் சொல்லுங்கள் என்கின்றார் .

அவர் உடம்பில் பாதி உமையம்மைக்குக் கொடுத்திருக்கின்றார் அல்லவா. அப்படியெனில் அந்த மூன்று கண்ணில் ஒன்றரைக் கண் உமையம்மையின் கண். இடப்பாகம் தானே உமைக்கு? பின்? அன்பிலே அவருக்குப் பூசனை செய்ய வந்த திண்ணனிடம் வலக் கண்ணை வாங்கினார் தானே. அது ஒன்று எனில் கணக்குப் போட்டுப் பாருங்கள்.

உமையம்மை கண் ஒன்றரை. ஒரு கண்ணைக் கொடுத்து கண்ணப்பன் ஆன திண்ணன் கண் ஒன்று எனில். ஒன்றரையும் ஒன்றையும் கூட்டுங்கள். மொத்தம் இரண்டரைக் கண் ஆகின்றது. அப்படியெனில் மீதம் அரைக் கண் தானே சிவபெருமானுக்கு இருக்கின்றது. பிறகு எப்படி நீங்கள் முக்கண்ணன் என்று சொல்லலாம் என்கின்றார்.

செய்யுள்

முக்கண்ணன் என்று அரனை முன்னோர் மொழிந்திடுவர்
அக்கண்ணற்குள்ளது அரைக் கண்ணே – மிக்க
உமையாள் கண் ஒன்றரை ஊன் வேடன் கண்ணொன்று
அமையுமிதனால் என்று அறி

மீண்டும் காளமேகம்

காளமேகம் திருவரங்கப் பெருமாளின் திருக்கோயில் மடையன் அதாவது சமையல்காரன். அவர் காதல் கொண்டதோ திருவானைக் காவல் தேவ தாசியின் மீது.

மார்கழி மாதக் குளிரில் புலவருக்கு வருகின்றது ஒரு பெரிய இடையூறு. என்ன செய்வார் புலவர். துடித்துப் போனார். ஆமாம். ஒரு மார்கழி மாத இரவிலே புலவர் போகின்றார் காதலியின் வீட்டிற்கு பெருமாள் கோயிலின் அக்காரவடிசில் அதிரசம் புளிச் சாதம் என்று எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு. காதலி கதவு திறக்க மறுக்கின்றார். காளமேகம் அதிர்ந்து போகின்றார். மார்கழி மாதக் குளிர் அவரை வருத்துகின்றது.

காரணம் கேட்கின்றார். அந்தப் பெண்ணோ. கதவைத் திறக்க முடியாது என்கின்றார். காளமேகம் கெஞ்சுகின்றார். அந்தத் திருவானைக்காவல் கோயில் தேவதாசிப் பெண் சொல்லுகின்றார். மார்கழி பிறந்து இந்த மூன்று நாளும் எனது தோழியர்கள் செய்யும் கேலியை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை மாணிக்கவாசகப் பெருமானுடைய திருவெம்பாவையைக் கோயிலில் பாடும் போதெல்லாம் நான் நாணப்பட்டு கேவலப்பட்டு நிற்கின்றேன்.

ஆமாம் எம் கொங்கை நின்னரன்பர் அல்லாதார் தோள் சேரற்க என்ற திரு வரிகளை என்னால் பாட முடியவில்லை. எனது மார்பகங்கள் சேர்வது உமது திருத் தோளினைத்தானே. காளமேகம் புரிந்து கொள்கின்றார். இவரோ வைணவர். அவ்வளவுதானே என்று வெளியில் இருந்து தனது காதலிக்கு உறுதிமொழி தருகின்றார். இந்தக் கணத்திலிருந்து நான் சைவ சமயத்தை சார்ந்தவன் என்று. கதவு திறந்தது.

மறு நாள் நீராடி சிவச் சின்னங்களோடு காளமேகம் திருவரங்கத்திற்குள் நுழைகின்றார். அங்குள்ள வைணவர்களில் சிலர்

பிள்ளையாருக்கு திருமண்ணைக் குழைத்து நாமம் இட்டு காளமேகத்திடம் அவர் தும்பிக்கையாழ்வார் எனக் கேலி செய்கின்றனர்.

அங்கே தான் காளமேகத்தின் பதில் அவரது அறிவின் பெருமையைக் காட்டுகின்றது.

ஆமாம் காளமேகம் சொல்லுகின்றார். உண்மைதான் இவரது தந்தை சிவபெருமானுக்கு பிறப்பும் கிடையாது இறப்பும் கிடையாது.

இவரது தாய் மாமனான பெருமாளோ பத்துப் பிறப்பெடுக்கின்றவராக இருப்பதனால் அவரது சொத்தை இடைவெளியில் யாரும் எடுத்துக் கொண்டு போகாமல் இருப்பதற்காக இவர் தாய்மாமனின் சின்னமான திருமண்ணை நாமமாகத் தரித்து இங்கே காட்சி தருகின்றார். அதுவுமல்லாமல் திருமாலின் மகனான காமனை அதாவது மன்மதனை வேறு சிவபெருமான் எரித்துத் தொலைத்து விட்டதால் வாரிசும் இல்லாமல் இருக்கின்றது என்பதானாலே தான் தும்பிக்கையாழ்வார் இல்லை மாமனுக்கு நம்பிக்கையாழ்வாராக இருக்கின்றார் என்னும் பொருள் தரும் பாடலைத் தருகின்றார்.

செய்யுள்

தந்தை பிறந்திறவாத் தன்மையினால் தன்மாமன்
வந்து பிறந்திருக்கும் வண்மையினால் - முன்னொரு நாள்
வீண் இக்கு வேளை எரித்தான் மகன் மாமன்
காணிக்கு வந்திருந்தான் காண்

அவ்வை ஏழைகளின் சொத்து

பாரதிப் புலவன் சொல்லுகின்றான். தமிழர்களே வள்ளுவனைக் கூடத் தொலைத்து விடலாம். அவ்வைக் கிழவியை நாம் தொலைத்து விடலாகாது. எளிய பதம் எளிய மெட்டு. எளியவர்களுக்காக பாடியவள் என்று.

சோழ வள நாட்டிற்குள் அவ்வை வருகின்றார். வனப்பகுதியில் வருகின்ற போது ஒரு குறப்பெண் அழுது கொண்டிருப்பதனைப் பார்த்து இன்னொரு குறப் பெண் சிரித்துக் கொண்டிருக்கின்றாள்.

அவ்வை அருகில் வந்தவுடன் கேட்கின்றார். அந்த வயதில் பெரியவளான குறப்பெண் இவள் எனது கணவனின் இரண்டாவது மனைவி. என் கணவன் வெளியூர் போகும் போது அவன் ஆசை ஆசையாக வளர்க்கும் இந்தப் பலா மரத்தை பத்திரமாகப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டுப் போனான். எனது சக்களத்தி இந்த மரத்தை வெட்டி விட்டு இந்தப் பழியை என் மீது போடப் பார்க்கிறாள் என்று அழுவதைப் பார்த்து அந்தப் பலா மரம் தழைப்பதற்குப் பாடுகின்றார் அவ்வை. பலாமரம் தழைக்கின்றது.

அந்த பெரிய குறத்தி மனம் மகிழ்ந்து அவ்வைப் பெருமாட்டிக்கு நாலு உழக்குத் தினையைத் தருகின்றார். அக்காலத்தில் வழிப் பயணத்தில் பொருட்களை சீலையில் முடிச்சு முடிச்சாகக் கட்டிக் கொண்டுதான் வழி நடப்பார்கள். பெருமாட்டியும் சோழனைப் பார்க்க அரண்மனைக்குப் போகின்றாள். அந்தக் காலத்திலெல்லாம் ஆட்சியாளர்கள் தமிழறிந்தவர்கள் தங்களை எந்த நேரத்திலும் சந்திக்க அனுமதி அளித்திருந்தனர். கேட்காமலே அறிஞர்கள் மட்டும் எப்போதும் ஆட்சியாளனைச் சந்திக்கலாம்.

அவ்வையை பல பட வரவேற்ற சோழனோடு கம்பரும் இருந்தார். சோழன் அவ்வையின் தோளில் தொங்கிய துணி மூட்டையைப் பார்த்து

அது என்ன என்று கேட்டான். பொன்னுக்குப் பாடும் கம்பரைப் பார்த்தவுடன் அவ்வைப் பெருமாட்டி சோழனுக்குச் சொல்லும் போதே கம்பனுக்குப் படுகின்றாற் போலச் சொல்லுகின்றார்.

சோழ மன்னா உன்னைப் பாடிப் பரிசில் பெற்று வாழப் பல புலவர்கள் உள்ளனர். ஏழைகளைப் பாடுவதில் எனக்கு ஒரு பெரும் இன்பம் உண்டு.

நான் வருகின்ற வழியில் இரண்டு குறப் பெண்களுக்கிடையில் சக்களத்திச் சண்டையில் இளையவள் அவள் கணவன் ஆசை ஆசையாக வளர்த்த பலா மரத்தை வெட்டி பழியை மூத்தாள் மேல் போட நினைத்தாள். அந்தப் பெண்ணைக் காப்பதற்காக அந்தப் பலா மரம் தழைக்கப் பாடினேன். அவளுக்கு எனக்கு ஏதாவது தர வேண்டுமென்று விருப்பம். அவளால் பொன்னா கொடுக்க முடியும். அவளிடமிருந்த தினையை நான்கு உழக்குகள் தந்தாள். அதைத்தான் முடிந்து வைத்திருக்கின்றேன். தினைக்கு மட்டுமல்ல சில ஏழைகள் என் பாட்டிற்கு உப்பு தந்திருக்கின்றார்கள். சிலர் புளி தந்திருக்கின்றார்கள். மாளாத தூய அன்பினால் அவர்கள் தருகின்ற பரிசுப் பொருட்கள் அல்லவா அவை. பொன்னை விடப் பெரியது என்கின்றார் பெருமாட்டி.

செய்யுள்

கூழைப் பலாத் தழைக்கப் பாடக் குறமகளும்
மூழாக்குழக்குத் தினை தந்தாள் - சோழாகேள்
உப்புக்கும் பாடி புளிக்கும் ஒரு கவிதை
ஒப்பிக்கும் எந்தன் உளம்

என்ன அண்ணாச்சி திடீர்ன்னு, சொன்னாத்தாம் வந்திருப்பேம்ல்லா.

வாங்க அத்தான் இப்பிடித்தான் என்னத்தையாவது கோட்டிக்காரத் தனமா ஒளறும்.

ஏட்டி ஒனக்கு எம்புட்டுக் கொழுப்பிருந்தா ஏம் முன்னாலய எந்தம்பிய கோட்டிக்காரன்னு சொல்லுவ. இதத் தெரிஞ்சுக்கிடத்தாம்ல இங்கன வந்தேம்.

ஒங்க முன்னாலய இப்பிடிப் பேசுதாளே. மத்த நேரம்ல்லாம் என் நெலமய நெனச்சுப் பாருங்க அண்ணாச்சி.

மொதல்ல நாக்காலிய எடுத்துப் போடுவேளா. அண்ணாச்சிட்ட புகார் பண்ணுததப் பாரேன். நல்ல அண்ணாச்சி நல்ல தம்பி.

எல்லாம் பொட்டப் புள்ளகள அவமானப் படுத்தக் கூடாது தப்பாப் பேசக் கூடாதுன்னு ஊர் ஊராப் பேசிட்டு அலயுதேள்ளா. அதாம் இம்புட்டுத் திமிராப் பேசுதா. நீங்கதாம் காரணம்.

எல இப்பம் அவ என்னத்த பேசிட்டான்னு ஆடுத. ஒன்னயக் கோட்டிக்காரன்னு சொன்னதுக்கா. அட முட்டாப் பயல. ஒங்க மதினி என்னய இப்பிடிக் கூப்பிட மாட்டுக்காளேன்னு எனக்கு எத்தன வருத்தம் தெரியுமா. ஒம் மேல அவளுக்கு எம்புட்டு இஷ்டம்ங்கதே இதில்தானல தெரியுது.

ஆரம்பிச்சாச்சா. இங்க ஒருத்தரும் ஒங்க தம்பிக்காக அலயல.

எல இதும் அதாம். புரிஞ்சுக்கிடுங்கல.

யம்மா நாம் வாயே தொறக்கலய்யா.

இதும் அதாம்ல.

அது சரி ஒங்க அளவுக்கு நாங்க படிச்சிருந்தா. இந்த அடுக்களையில கெடந்து எதுக்கு வேகுதோம்.

அடுத்த வீட்டில யாருல தேங்காக் கடக்காரனா இருக்காம். புள்ள அழுதுக்கிட்டிருக்கு. அவம் பொண்டாட்டியில்லயா. புள்ள அழுகய நிறுத்தக் காணோம்.

அந்தக் கூத்த எதுக்கு அண்ணாச்சி கேக்கையோ. புள்ளயா வளக்காம் எப்பப் பாரு அழுக. மூக்க வடிச்சுக்கிட்டு. சாப்பிட்டுக்கிட்டிருந்தா தட்டில வந்து ஒழப்பிரும்ண்ணாச்சி.

என்னத்த சொல்ல, தாயா புள்ளயாப் பழகியாச்சு.

இது யாருல உள்ளயிருந்து அம்மணக்குண்டியா வந்த சின்னப் பயலப் பாத்துக் கேக்கேம். அப்பம்தாம் எந்திரிச்சு வாராம் மூக்குச் சளி ஒழுகுது. என்னல புள்ளைக்கு ஒடம்பு சரியில்லையா.

ஆமண்ணாச்சி ஒரு வாரமா புள்ளைக்கு சளி அண்ணாச்சி.

அவம் வேட்டியிலய தொடைக்காம். என்ன விஷயமா வந்தீங்கண்ணு சொல்ல மாட்டிங்களா அண்ணாச்சி.

அவம் வீட்டுக்காரி புள்ளயக் கூட்டிட்டுப் போயி மொகத்தை யெல்லாம் கழுவி பல்லத் தேச்சு விட்டுக் கூட்டிட்டு வந்தா.

சரி நாம் வரட்டால. சும்ம இந்தப் பக்கம் வந்தேம். வேற ஒண்ணும் இல்ல.

அவாள் என்ன வேவு பாக்க வந்திருப்பா.

ஏட்டி ஒனக்கு வாய்க் கொழுப்புக் கூடித்தாம் போச்சு. அண்ணாச்சி ஒன்ன வேவு பாக்க வந்தாளா. அண்ணாச்சி நீங்க பொட்டச்சிகளுக்கு குடுக்கற எடம். எப்பிடி பேசுதா பாத்தீகள்ள.

ஆமா ஏட்டி வீட்டுக்கு வந்தவனுக்கு. ஒரு டீயோ காப்பியோ குடின்னு சொல்ல மாட்டியோ.

யாத்தாடி யத்தான் என்னய கொன்னுட்டேள. ஒங்க தம்பியோட வாழ்ந்து வாழ்ந்து நானும் கோட்டிக்கார நாயா ஆயிட்டேன்.

ஏட்டி அப்பவும் அந்தப் பயல இழுக்கிய. ஒன்னையெல்லாம்.

அண்ணாச்சி நாம் சாப்பிடப் போறேன் ரெண்டு இட்லி சாப்பிடுங்களேன்.

எல நீ கட தொறக்கப் போகணும்ன்னு எம் மர மண்டைக்குப் பொலப்படல.

யத்தான் ஒரு நிமிஷம். நீங்க தட்டில இட்லி வச்சிட்டேம். சாப்பிடுங்க. நாம் அத்தானுக்கு டீயப் போடுதேன்.

அவம் மகன் சின்னப் பய அவம் மடியில் ஒக்காந்துக் கிட்டு இட்லியப் புட்டு அவங்க அப்பம் வாயில வெக்காம். எங்க அய்யால்ல. இப்பிடித்தாம் அண்ணாச்சி எனக்கு ஊட்டி விடுவாம்ங்காம். அவம் ஊட்டி விட்டாம்ன்னா அதுல ஒரு ருசி இருக்கு அண்ணாச்சி. அப்பவும் அந்தப் பயலுக்கு மூக்கு ஒழுகுது. வெளுத்த வேட்டிய வச்சுத் தொடைக்காம்.

வள்ளுவப் பேராசான நெனச்சுக்கிட்டேம்.

அவர் குழந்தைகளப் பத்திப் பேசறப்பல்லாம். தம் மக்கள் தம் மக்கள்ன்னு பேசுதத நெனச்சேம். எப்பேர்ப்பட்ட உளவியல் அறிஞர். அடுத்த வீட்டுப் புள்ளய மூக்கு வடிச்சுக் கிட்டு வரும்ங்காம். சாப்பாட்டுத் தட்டில கையப் போட்டு ஒழப்பிரும்ங்காம். அதே காரியத்தையெல்லாம் அவம் புள்ள செஞ்சா. எங்க அய்யால்லங்காம். கொஞ்சுதாம்.

குறள்

அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்.

இரட்டைப் புலவர்கள்

இரண்டு தமிழறிந்த புலவர்கள். ஒருவருக்கு இரு விழியும் பழுது. இன்னொருவருக்கு இரண்டு கால்களும் இல்லை. இன்றைய மனித சமூகத்தின் சிறந்த வழிகாட்டிகள். தமிழர்கள் பின்பற்ற வேண்டியவர்கள்.

ஆமாம் அவர்கள் இருவரும் ஊர் ஊராகச் சென்று பாடுகிறவர்கள். எப்படித் தெரியுமா. கண்ணில்லாத புலவர் தோளில் காலில்லாத் தோழர் அமர்ந்து கொள்ள பயணம் தொடங்கும். தமிழர்களே படியுங்கள். வருத்தத்தோடு இதனை சொல்ல வேண்டியிருக்கின்றது விழி இழந்த பாடகர்கள் வேன்களில் வந்து பாடுகின்றார்கள். அவர்களுக்கு வருகின்ற பணத்தை நல்லவர்கள் போல் காலிகள் சிலர் பறித்து செல்கின்றனர். இது இன்றைய தமிழினம்.

ஒருவருக்கொருவர் உதவி வாழ்ந்த தமிழினம் இன்று எப்படிச் செயல் படுகின்றது. ஏதாவது ஊரில் இரவு நேரம் வந்து விட்டால் அந்த ஊரில் உள்ள கோயில்களில் இருவரும் தங்கிக் கொள்வர். உணவிற்கு என்ன கவலை. இப்படிக் கோயில்களில் வந்து தங்குகின்றவர்களுக்கு இரவு நேர உணவு அந்தக் கோயில் பிரசாதம். இறைவனுக்கு உணவு படைப்பதே இப்படி வருகின்றவர்களுக்கு உணவு தரத்தான். இதற்காகத் தான் நமது முன்னோர்கள் கோயில்களுக்கு நிலத்தை எழுதி வைத்தனர். ஒரு பெரிய அழிவு மழைச் சீற்றத்தால் காற்றின் சீற்றத்தால் வந்தால். கோயிலில் மக்கள் தங்க வைக்கப் படுவார்கள். கோயில் பண்டாரங்களில் சேமித்து வைக்கப் பட்ட அரிசி அவர்களின் பசியை ஆற்றும். ஆனால் அன்றைக்குச் சோறு போட்ட நிலங்கள் இன்றைக்கு எந்த அரசியல் வாதி நிலமாக மாற்றப் பட்டிருக்கின்றதோ.கோயில் ஒரு சமூக நலக் கூடமாகத்தான் பயன் பட்டுவந்து உள்ளது.

ஆங்கூர் என்கின்ற ஊரில் உள்ள சிவன் கோயிலுக்கு வந்து இரட்டைப் புலவர்களும் தங்கியுள்ளனர்.

பூசனை துவங்குகின்றது. ஓதுவா மூர்த்திகள் படைக்கலம் உன் திருநாமத்து அஞ்செழுத்து என் நாவில் கொண்டேன். இடைக்கல

மல்லேன் எழு பிறப்பும் உமக்கே ஆட் செய்கின்றேன் துடைக்கினும் போகேன் தூ நீறணிந்து அடைக்கலமாவது கண்டாய் அணி தில்லை வாழ் அம்பலத்தரசே என்று பாடுகின்றார். சிவாச்சாரியார் கோயில் நடையைச் சாத்துகின்றார். யார்க்கும் முன் மண்டபத்தில் தங்கியிருந்த எவருக்கும் உணவு வழங்கப் படவில்லை. சிவாச்சரியார் வீட்டிற்குச் சென்று விட்டார். இன்றைய நண்பர்களுக்கு முன்னோடியாக அவர் இருந்திருக்கின்றார்.

இரட்டை புலவர்களிடம் ஒரு சிறப்பு.முதல் இரண்டு அடியை ஒருவர்பாட அடுத்த இரண்டு அடியை இன்னொருவர் பாடுவது வழக்கம்.

முதற் புலவர் ஆங்கூர்ச் சிவபெருமானிடம் கேள்வி கேட்கின்றாற் போல் முதல் இரண்டு அடியில் கேட்கின்றார்.

அய்யனே உன் கோயில் உணவை நம்பித்தானே நாங்கள் இங்கு வந்து தங்கினோம். நாங்கள் இரண்டுபேரும் பசியாயிருக்கின்றோமே இது உனக்கே நியாயம்தானா. அவர் கேள்வி சிவன் சாப்பிட்டு விட்டார் என்பதாக.

இரண்டாவது புலவர் சிவபெருமான் பதில் சொல்வதாக ஒரு அருமையான செய்தியை பெருமானே சொல்வது போல் சொல்கின்றார். ஆமாம் மகனே இது என்ன கேள்வி அல்லது கேலி நான் கேட்டது எல்லாம் சங்கின் ஒசையைக் கேட்டேன். முரசின் ஓசையைக் கேட்டேன். கொட்டோசையையும் கேட்டேன் சோற்றை நான் எங்கேயப்பா பார்த்தேன் என்பதாகப் பாடுகின்றார். அதற்கு ஒரு சிறப்பான ஈற்றடி பா எப்படி முடிகின்றது பாருங்கள் சிவ பெருமான் கேட்கின்றான்.

பாடல்

தேங்கு புகழாங்கூர்ச் சிவனே வில்லாளியப்பா
நாங்கள் பசித்திருக்க நியாயமோ - போங்காணும்
கூறுசங்கு தோல் முரசு கொட்டோசை அல்லாமல்
சோறு கொண்ட மூளி யார் சொல்

காட்டில் ஒரு ஆற்றின் கரையில் ஒரு பெரிய ஆலமரம். அதன் கீழே ஒரு மனிதன் நடுங்கிக் கொண்டு அமர்ந்திருக்கின்றான். அவன் எதிரிலே ஒரு புலி அமர்ந்திருக்கின்றது. பின்னாலே ஒரு கூண்டு இருக்கின்றது. அந்த வழியாக ஒரு நரி வருகின்றது.

என்ன நடக்கிறது என்று நரிக்குப் புரியவில்லை. அந்த மனிதனிடம் கேட்கிறது. என்ன நீ உட்கார்ந்திருக்கின்றாய். எதிரிலே புலி அண்ணனும் உட்கார்ந்திருக்கின்றார். என்ன செய்கிறீர்கள் இருவரும் என்று கேட்கின்றது.

மனிதன் சொன்னான். நான் இந்தக் காட்டுக்கு மரம் வெட்ட வருவேன். இன்று வந்து விட்டு இந்த வழியாகத் திரும்பும் நேரம் இதோ இந்தக் கூட்டுக்குள் இந்தப் புலி அடைபட்டுக் கிடந்தது.

என்னிடம் என்னைத் திறந்து விடு. திறந்து விட்டால் உனக்கு மிக நன்றியாக இருப்பேன் என்றது. நான் சொன்னேன். என்னைத் தின்று விடுவாய் மாட்டேன் என்றேன். புலி சொன்னது இரண்டு மாதமாக இந்தச் சிறைக்குள் அடைபட்டுக் கிடப்பது எனக்கு அவமானமாக இருக்கின்றது. என்னை விடுவித்து என் அவமானத்தைத் தீர்த்து வைப்பாய் எனில் நான் எப்படி உன்னைத் தின்பேன். மிக மிக நன்றியுடையவனாயிருப்பேன் என்றது. நான் திறந்து விட்டேன். திறந்து விட்டவுடன் உட்கார்ந்து பிரார்த்தனை செய்யத் துவங்கியது. நான் மகிழ்ந்தேன். நல்ல புலி என்று நினைத்தேன். கடவுள் உன்னை விடுவித்ததற்காக நன்றி சொல்லுகின்றாய என்றேன். அது சொன்னது இரண்டு மாதங்கள் உள்ளேயே கிடந்ததால் பசி உயிர்போகின்றது. அதனால்தான் வெளியிலே வந்தவுடன் என் பசிதீர்ப்பதற்கென்றே உன்னை இங்கு அனுப்பி வைத்த கடவுளுக்குநன்றி சொல்கின்றேன் என்று பிரார்த்தனையில் உட்கார்ந்துள்ளது என்றான்.

நரி தீர யோசித்தது. புலியிடம் பணிவாகப் பேசியது. அய்யா இவர் சொல்வது உண்மைதானா என்றது. புலி மறுக்காமல் ஒத்துக் கொண்டது. நரி சொன்னது இந்த மனிதர்களையே நம்பக் கூடாது. ஆனால் புலி

அண்ணா இவனின் வழக்கை நாம் விசாரிக்காமல் கொல்வது சரியாக இருக்காது. தங்களின் புயல் வேகத்திற்கும் ஆற்றலுக்கும் இழுக்கு வந்து விடும் என்றது.

புலி நரியிடம் கேட்டது சொல் என்ன செய்ய வேண்டும் என்று. நரி சொன்னது அய்யா இந்த மனிதன் எந்தத் திசையில் இருந்து வந்தான் என்று கேட்க புலி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தான் என்றது. அப்போது தாங்கள் எங்கே இருந்தீர்கள் என்றது. நரி கேட்டது அய்யா தாங்கள் கூண்டுக்குள் உறங்கிக் கொண்டிருந்தீர்களா. விழித்துக் கொண்டிருந்தீர்களா. நான் விழித்துக் கொண்டிருந்தேன். நின்று கொண்டிருந்தீர்களா. உட்கார்ந்து கொண்டிருந்தீர்களா என்றது நரி. உட்கார்ந்து கொண்டிருந்தேன். நின்றாலும் உட்கார்ந்தாலும் தங்களின் கம்பீரம் யாருக்கு வரும். அய்யா இந்த வழக்கிற்காக தாங்கள் அந்தக் கூண்டிற்குள் சென்று நீங்கள் உட்கார்ந்திருந்த அதே அழகோடு உட்கார்ந்து காட்டுங்களேன் என்றது. புலி உள்ளே சென்று உட்கார்ந்தது. கூண்டு திறந்திருந்ததா பூட்டியிருந்ததா என்று நரி கேட்டது. புலி பூட்டியிருந்தது என்றது. அப்படியென்றால் எப்படி பூட்டியிருந்தது என்று பார்க்க வேண்டுமல்லவா என்று மனிதனை அழைத்து அய்யா எங்கே எப்படிப் பூட்டியிருந்தது என்று பூட்டிக் காட்டுங்கள் என்றது நரி. மனிதன் பூட்டினான். நரி சொன்னது அட முட்டாளே புலியைத் திறந்து விடலாமா. அது உன்னைத் தின்னத் தானே செய்யும் ஊருக்குப் போ ஓடு என்றது.

ஆமாம் வள்ளுவப் பேராசான் சொல்லுகின்றார் நல்லது செய்வதிலும் கூட தவறு ஏற்பட வாய்ப்புகள் உண்டு யாருக்குச் செய்கின்றீர்களோ அவர்கள் பண்பறிந்து செய்ய வேண்டும் என்று.

குறள்

நன்றாற்றல் உள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பறிந்து ஆற்றாக் கடை.

எல என்ன காலேல வந்திருக்க.

வராம என்ன செய்ய. இந்தப்பேதில போவாளோட வாழுதத்துக்கு பதில் செத்துத் தொலைச்சிரலாம்ல்லா அண்ணாச்சி. என்ன பாடு படுத்துதா. எனக்கு என்னத்தயாவது வாங்கிக் கொடுங்க அண்ணாச்சி. குடிச்சிட்டுச் செத்துப் போறேன்.

எல நாங்க இங்க தமிழ்க் கூடம் வச்சிருக்கோமா. இல்ல தற்கொலைக் கூடம் வச்சிருக்கோமா. அழாம விஷயத்தச் சொல்லுல.

தீபாவளிக்கு ஒரு கொறயும் வைக்கல அண்ணாச்சி. அப்பிடியும் நல்ல நாளும் அதுவுமா படுத்தி எடுத்திட்டா அண்ணாச்சி.

எல நீயும் அவகிட்ட அன்பா இருக்கணும்ல்லால.

அண்ணாச்சி ஒங்களுக்குத் தெரியும். நாம் நல்ல பயன்னு. எவ்வளவு அன்பா இருந்தாலும் அவ என்னத்தயாவது சொல்லிட்டே இருக்காள. நாம என்னத்தச் செய்ய. சினிமால வருத மாரி பாட்டுல்லாம் பாடிக்கிட்டு ரெண்டு தட்டு வீட்டுல வாழ முடியுமா அண்ணாச்சி. அவனுவளும் அவளுவளும் கோடிக்கணக்கில வாங்கிட்டுல்லா நடிக்காங்க. நாம் எங்க போயிச் சொல்லி அழ. அதாம் வந்தேம்.

எல அப்பம் அழத்தாம் எல்லாரும் இங்க வாரானுவளா. நேத்து ராத்திரி படுக்கலாம்ன்னு மேல போறேன். அந்தப் பிள்ள அவம் ராமன் பொண்டாட்டி யத்தான்னு வந்து ஒரே அழுக. அந்தப் பய மனுசனேயில்லங்குது.

எல அன்பா இருங்க இருங்கன்னு நானும் எத்தன தடவதாம்ல ஒங்களுக்குச் சொல்லுதது. எந்தப் பயலாவது கேக்கேளால. அந்தப் பய அவம்தாம்ல பேங்க் மணி கேக்காம் எதுக்கு அண்ணாச்சி எல்லார் மேலயும் இம்புட்டுப் பாசம் காட்டுதீய. உங்க அன்பை என்னாலெல்லாம் வாங்கிக் கிட சக்தியில்லங்காம்.

அதுக்குத்தாம் எல்லாரும் இங்க ஒடியாறோம். கொஞ்சம் கோபப் படுவியோ. அது அந்த பாசத்தால தாம்ன்னு எல்லோரும் தெரிஞ்சிருக்கப் போயிதான இங்கன ஒடியாரோம்.

ஒரு வாரம் ஊருக்குப் போயிட்டு வந்தேன்னு வச்சுக்க இந்த மூணு நாய்க்குட்டியும் அதாம்ல ராஜா அப்புறம் இந்த சின்னப் பய சிவா அந்தப் பொட்ட்ப் புள்ள சக்தி என்ன உள்ள விடுதால. வாயிருந்தா பேசிரும் அவங்க வார வரத்திலேயே தெரியும்ல்லா. அதுகளக் கொஞ்சாம வீட்டுக்குள்ள போக முடியுமா. எல்லா உயிரும் அன்புக்குத் தானல ஏங்கிட்டு இருக்கு. எல பொண்டாட்டிய எல்லார் முன்னாலயும் கொஞ்சுன்னா சொல்லுதேம். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் கொஞ்சுங்கல. தோள்ல சாச்சிக்கிட்டு எங்கம்மேல்லான்னு சொல்லிப் பாருல. ஏம் தலையெழுத்தப் பாத்தியா. இதெல்லாம் கூட சொல்லிக் கொடுக்க வேண்டியிருக்கு. எல எல்லா ஆம்பிளைக்குள்ளேயும் ஒரு பொம்பள இருக்கால. அதே மாரித்தான் எல்லா பொம்பளக்குள்ளேயும் ஒரு ஆம்பிள இருக்காம். மனசுக்குச் சங்கடமா இருந்தா அந்தப்புள்ள மடியில விழுந்து என்னைக்காவது ஒன்னு அழுதியிருக்கியால. ஒன்ன விட்டா என்க்கு யாருல இருக்கான்னு. கொஞ்சிருவால கொஞ்சி.. அன்பா இருக்கதக் காட்ட பல வழியிருக்கு ஒரு நாய்க்கும் தெரிய மாட்டேங்கு. ஒடன இங்க வந்து அழுதது. இதயே அவட்ட ஏளா நாம் என்னல பண்ணுவேம். எதையாவது நாம் ஏடாகூடமாப் பண்ணுனேம்ன்னு வச்சிக்க கொஞ்சம் யோசிச்சு செய்ய வேண்டியது தான லூசுத்தனமா எதையாவது செஞ்சுக்கிட்டே இருக்கேளேன்னு இந்தப் பொட்டப் புள்ளகளாவது சும்மாக் கட்டிப் புடிச்சுக்கிட்டுச் சொல்லித் தொலயுதுவளால. அங்கனய எல்லாம் சரியாயிரும். உடம்பும் ஒருமொழின்னு தெரியாமத்தான் நெறயப் பேர் வாழ்ந்துக்கிட்டு இருக்காம். எல அவளக் கொஞ்சப் போறேன்னு சாடமாடையா அவட்டச்

சொல்லிப் பாரு. அந்தக் கண்ணு சிரிக்கும் பாருல. அவ நடையே மாறிரும். அன்னிக்குப் பூராம் அவ நடக்கதும் அத்தன பேர் மத்தியில் யாருக்கும் தெரியாம ஒன்னய மட்டும் ஒரு பார்வையாப் பாக்கும்ல அதயெல்லாம் அனுபவிங்கல. இந்த எழவெல்லாம் தெரியலன்னு வச்சுக்கோ .வள்ளுவப் பேராசான் திட்டுதாரு.

என்ன சொல்லுதாரு தெரியுமா உயிரோடு ஒருத்தனோ ஒருத்தியோ இருக்கான்னா அதுக்கு அடையாள்மே அவங்க எல்லா உயிர்கள் மேலயும் அன்பு காட்டுனாத் தான். இல்லேன்னா அதுக்குள்ள உயிர் இருந்தாலும் நான் அத வெறும் ஒடம்புன்னு மட்டும் தான் ஒத்துக்குவேம்ங்காருல. என்ன அர்த்தம் புரியுதா. சவம்ங்காரு. சவமா இருக்கப் போறேளா இல்ல மனுசனா இருக்கப் போறேளாங்கத நீங்க முடிவு பண்ணிக்கிடுங்கல. போங்கல போயி அன்பா மனுசனா வாழுங்கல.

குறள்

அன்பின் வழியது உயிர் நிலை மற்றெவ்வுயிர்க்கும்
என்பு தோல் போர்த்த உடம்பு.

அண்ணாச்சி நல்லா இருக்கேளா.

யாரு சிவனடியானா. எல எங்கேருந்து பேசுதே.

டில்லியிலிருந்துதான் அண்ணாச்சி.

நல்லாயிருக்கியா அவ எப்பிடி இருக்கா செங்கோட்டைக்காரி.

அவளுக்கு என்ன அண்ணாச்சி. சவுரியமா இருக்கா.

எல என்ன சடவாச் சொல்லுத மாரி இருக்கு.

பொறவு என்ன அண்ணாச்சி. பொழுதன்னிக்கும் ஒங்க குறுந்தகட்டப் பூராம் கேட்டுக்கிட்டு அவ பண்ணுத ராஜாங்கம் இருக்கே. தாங்க முடியல.

எல அப்பம் அவ என் பேச்சைக் கேட்கது உனக்குப் புடிக்கலயா.

பாத்தேளா கொழுந்தியாளுக்குச் சளைச்ச ஆளா நீங்க. நான் வேலைக்குப் போயிருதேம். ஞாயித்துக் கெழம மட்டும்தான எனக்கு வாய்ப்பு. அன்னிக்கு புள்ளைகள எங்கேயாவது வெளிய கூட்டிட்டுப் போக வேண்டியிருக்கு. அவளுக்கென்ன மத்த நாளெல்லாம் அவளுக்கு யோகம் தான அண்ணாச்சி.

சரி பொங்கலுக்கும் வரல. எப்படா வருவ. வயசாக வயசாக எல்லாத்தையும் தேடுதுல.

வயசா ஒங்களுக்கா யத்தான். ஒங்கள என்ன செய்யலாம். இன்னும் முடி நரைக்கல. மூளையா நரைக்கவே நரைக்காது. எப்பப் பாரு காமத்துப் பால் எழுதும் போது மட்டும் அதுக்குன்னு ஒரு எழுத்து. உங்களுக்கா வயசாச்சு. எனக்கு என்னமா வருது.

எல என்ன அவ அண்ணன் தம்பிக்கு இடையில நுழயுதா.

எப்பம் நான் ஒங்ககிட்டப் பேசினாலும் அவ இன்னொரு தொலை பேசியில் கேட்டுக் கிட்டு இருப்பா.

எல இது பெரிய சேட்டைல்லா. நம்ம அண்ணன் தம்பிக்குள்ள ஆயிரம் பேசுவோம்.

ஆரம்பிச்சிட்டேளா. நான் ஒண்ணும் ஒட்டுக் கேட்கல்ல. என்னத்தையாவது நல்லதா ஒங்க தம்பி கிட்ட சொல்லுவீய. ஒங்க தம்பிக்கு அத நெனவு வச்சுச் சொல்ல முடியாம எதயாவது ஒளறுவாக. அத நம்மளே நேரக் கேட்டுக் கிடுவோமேன்னு தாம்யா கேக்கோம். என்னமோ ரெண்டு பேரும் பேசுதத ஒட்டுக் கேக்கோமாம். அப்பம் அந்தக் கூத்து வேற நடக்கோ.

சரிடே பொறுத்துக்கோ என்னமா பாயுதா.

இப்பம் நான் ஒண்ணு சொல்லுதேன். யத்தான் சில பேரு பெரிய பணக்காரனா இருப்பாம். அவனையெல்லாம் நீங்க என்ன சொல்லுவீய. இவன் இல்லாமல்லா இருக்காம்ன்னு சொல்லுவேளா இல்லியா. இங்கன ஒரு பெரிய பணக்காரம் இவாளுக்கு சிநேகிதமாயிட்டாம். அவம் வீட்டுக்குப் போகணும்ன்னு நெலயா நின்னுட்டாக ஒங்க தம்பி. அவம் எவ்வளவு பெரிய ஆளு தெரியுமா அப்பிடி இப்பிடின்னு ஒரே ஆட்டம்.

சரின்னு ரெண்டு பிள்ளைகளையும் கூட்டிக் கிட்டுப் போனா. பெரிய வீடுதாம்.ஆனா நீங்க சொன்ன மாதிரி அந்த ஆளு வறுமையில தான் இருக்கான். அதச் சொன்னா இவாளுக்குக் கோபம் வருது.

இல்ல அத்தான் ஒங்க வீட்டுக்கு வந்தோம்ன்னா சின்னப் புள்ளைகளுக்குன்னு எல்லாம் வச்சிருப்பீய. மிட்டாய் என்ன பிஸ்கட் என்ன சாக்லெட் என்ன. ஒரு திருக்குறள் . என்னல்லாம் குடுப்பிய சாப்பிடாம யாரையாவது அனுப்புவேளா. யாராவது சாப்பிடக் கூச்சப்பட்டா. எல நாயையெல்லாம் அவுத்து விட்டிருவேன். சாப்பிட்டிட்டுத்தான் போகணும்ன்னு நெலயா நின்னு சாப்பிட வைப்பேளே. ஒங்களயும் அக்காவயும் பாத்ததுக்கப்புறம் தான் எனக்கு இதெல்லாம் புரியுது அத்தான்.

அப்பந் தான் திருநெல்வேலியில அந்தத் துணிக்கடைக் காரனப் பத்திப் பேச்சு வரும் போது அவன் பெரிய பணக்காரன்னு சொன்ன போது அவன் வறுமையிலேல்லா வாழுதாம்ன்னு சொன்னீங்க. நெனவிருக்கா அத்தான்.

அது இருக்கட்டும் எல எம்மா அத இவ்வளவு நெனவு வச்சிருக்கீய நல்லா இரும்மா. நல்லா இரும்மா.

அது யாரு சொன்னதுன்னு சொன்னேன். சொல்லு பாப்போம்.

பாத்தேள்ளா. சின்னப் புள்ளேல இருந்து ஒங்களக் கேட்டு கேட்டு வளந்த கொழுந்தியாளாக்கும். வள்ளுவப் பேராசான் தான்.

அந்தக் குறளச் சொல்லும்மா பார்ப்போம்.

எத்தனை சரியாக அந்தக் குறளைச் சொன்னாள் தெரியுமா என் தம்பி மனைவி. பயமாயிருக்கு. இதுக்கும் அவள் கோபப் படுவாள். என் தம்பி மனைவி. எங்கொழுந்தியான்னு சொன்னா கொறஞ்சா போயிருவிய. தம்பி மனைவியாம் தம்பி மனைவி.

குறள்

உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.

அண்ணாச்சி பனி இந்த வருஷம் ரொம்ப ரொம்ப ஆட்டிடுத்து அண்ணாச்சி. காட்டுக்குள்ள இருக்கவங்க பாடுல்லாம் ரொம்ப மோசமாயிருந்திருக்கும்ல்லா அண்ணாச்சி.

எய்யா எல்லாத்துக்கும் கடவுள் வழி வச்சிருக்கார்ல்லாடே. அவங்க சுள்ளியெல்லாம் போட்டு தீக் காஞ்சிருவாங்கடே.

தீ இல்லைன்னா மனுசங்க பாடு சங்கடம்தான் என்ன அண்ணாச்சி.

பொறவு என்னடே.

ஆனா ஒனக்கு ஒன்னு தெரியுமா. தீன்னா பக்கத்தில போனா சுடும். அப்பிடித்தானே நமக்குத் தெரியும். தீய விட்டு விலகினாத் தான குளிரும்டே.

இது என்ன அண்ணாச்சி கேலி பண்ணுதேளே. விலக முடியுமா. போட்டு ஆட்டிராது.

அப்பிடிப் போடு. ஆனா விலகினாச் சுடுத தீ ஒண்ணு இருக்குங்கார் நம்ம அய்யா வள்ளுவரு.

இது என்ன புதுக் கூத்தாயிருக்கு.

இல்லல அவரு சொன்னா அதுக்கு மறுப்பு எங்கடே இருக்க முடியும்.

ஒரு காதலன் சொல்லுதான் அவன் காதலிய விட்டுப் பிரிஞ்சா பயங்கரமாச் சுடுதாம்.

அண்ணாச்சி நெசந்தான. கலியாணம் ஆன புதுசிலேல்லாம் நானே அத அனுபவிச்சிருக்கேன்ல்லா.

எல அண்ணாச்சியும் தாம் அனுபவிச்சிருக்கேன். அண்ணாச்சி பொறக்கும் போதே கெழவனாப் பொறந்தேன்னு எல்லாப் பயலுவளும் நெனைக்கேளோ.

அண்ணாச்சி எங்களுக்குள்ள அதெல்லாம் பேசிக்கிடுவோம். இதிலே சங்கடப் பட்ட எத்தன பய வாழ்க்கையை நீங்க சீராக்கிருக்கிய. அப்பமல்லாம் நாங்க ஒங்கள ரசிப்போம் அண்ணாச்சி.

சரி ஒடனே ஆரம்பிச்சிட்டியே

அவகிட்டப் போயி கட்டிப்பிடிச்சிக்கிட்டான்னா குளிரோ குளிருங்காம் அவன்.

நம்ம சொல்லல அவஞ் சொல்லிருக்கான் என்ன அண்ணாச்சி.

எல நம்ம எல்லாத்தையும் உணர்ந்த பேராசான் சொல்லுதாருல்ல.

என்னமாச் சொல்லுதாரு தெரியுமா இறைவன் படைச்ச தீக்கு மாறா இவளுக்கு மட்டும் இந்த தீ எங்கேயிருந்து கெடச்சதுன்னு புலம்புதாம்ங்காரு. அவருக்குத் தெரியாதா. அதையும் இறைவன் தான் பொம்பளப் புள்ளகளுக்குக் கொடுத்திருக்காருன்னு

இல்லடா. ஆனா ஒரு தீ விலகினாத்தான் சுடும். ஆனா இந்தப் பொண்ணுகிட்ட இருக்க தீ மட்டும் விலகினாச்சுடுது கிட்டப் போனா குளிருதுங்காம் ங்கார்.

குறள்

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்.



அண்ணாச்சி தமிழர் திருநாள் அன்னைக்கு ஒங்களக் கும்பிடுத பாக்கியம் எங்களுக்கு நிரந்தரமா இருக்கதுக்கு நாங்கல்லாம் என்ன தவம் பண்ணியிருக்கோம்.

எல அய்யா ஒங்களப் போல நல்ல பிள்ளைகளா எனக்குக் குடுத்திருக்கால்லா எங்க அம்மை வடிவுடை நாயகி அவளேல்லால கும்பிடணும்.

நீங்க இல்லேன்னு வச்சுக்கோங்க அண்ணாச்சி அம்மைய எல்லாரும் காந்திமதின்னு தாம் கூப்பிட்டுக்கிட்டு கெடப்போம்

சில பெரிய சாஸ்திர விற்பன்னர்கள் வட மொழியில தேர்ந்தவர்கள் தாய்த் தெய்வ வழிபாட்டை பரம்பரையாக் கொண்டவர்கள் பண்ணின வேலை இது. எல்லா ஊர்லயும் பாருங்கடே சாமி பேரு தமிழ்ல தான் இருக்கும் அம்மே பேருதான் வடமொழியில இருக்கும்.

மதுரையில அப்பன் சொக்கந்தான் அம்மையத்தான் அங்கயற்கண்ணின்னு கூப்பிடாம மீனாட்சிம்பானுவ. நம்ம ஊர்லயே பாரேன் அம்மயைக் காந்திமதிம்பானுவ சாமிய நெல்லையப்பர்ம்பானுவ. அறம்வளர்த்த நாயகிய தர்மசம்வர்த்தனிம் பானுவ மலையரசிய பர்வத வர்த்தினிம் பானுவ. இப்பிடி சொல்லிக்கிட்ட போகலாம்.

நீங்க இருக்கப் போயி இத எல்லாம் சொல்லித் தாரிய. இல்லேன்னா இது இங்க எந்தப் பயலுக்குத் தெரியும். எல எனக்கும் ஒங்க தாத்தா அதாம் எங்க அப்பா சொல்லித் தரல்லேன்னு வச்சுக்க. எனக்கு என்ன தெரியும்.

அண்ணாச்சி சுப்பையா பிள்ளை தாத்தாவும் பள்ளிக் கூடம் போனதில்லைங்காங்களே. நெசந்தானா அண்ணாச்சி.

எல அதாம் பழமொழி இருக்குல்லா பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவாதும்பாங்க பெரியவங்க.

ரசிகமணி டி.கே.சி. இருந்தாகள்ளா. அவாள்ட்ட போயி பிள்ளைகள்ளாம் நல்ல அறிவாளியாகணும்ன்னா என்ன செய்யணும்ன்னு கேட்டானுவ. அவாள் பளிச்சின்னு என்ன சொன்னா தெரியுமா. பள்ளிக்கூடத்தையெல்லாம் தீ வச்சுக் கொளுத்துங்கவேன்னு.

அண்ணாச்சி நேத்து ஒங்க கூட படிச்சாகளாமே அவாள் எங்க கிட்ட ஒரே ஆவலாதி.

யாருல.

பலசரக்குக் கடை சிவராமன்.

ஆமா எங்கூடத்தாம் படிச்சாம். அதுதான் அஞ்சாங்கிளாசோட கடைக்கு அவாள் அவ அப்பா களக்காட்டுப் பிள்ளை கூட்டிட்டுப் போயிட்டாகளே. என்னவாம் ஆவலாதி.

அவாள நீங்க ஒங்க கிட்ட அண்டவே விட மாட்டுக்கீங்கங்கார்.

எதுக்கு அவன அண்ட விடணும். என்னால அவனுக்கு ஒரு பயனும் கெடயாது அவனால எனக்கு ஒரு பயனும் கெடயாதுங்கறத விட அவனால எனக்குத் தும்பம்தாம்ல. என்ன இப்பம் இந்த வயசுல என்ன கூட்டாளின்னு வாராம்.

ஒண்ணும் இல்லண்ணாச்சி. நீங்க பெரிய ஆளாயிட்டேளாம். அந்தத் தோரணையில தாம் அவரையெல்லாம் கிட்ட விட மாட்டேங்களாம்.

எல அவம் என்னிக்கு என்கிட்ட வந்தாம். இன்னொரு முட்டாத் தனத்தைப் பாரு நான் என்ன பெரிய ஆளு. வயசில கூட நானும் அவனும் ஒண்ணுதாம். எதுக்கு இப்பிடியெல்லாம் பேசிக்கிட்டு அலயுதானுவ. எல அவனுக்கு மண்டையே வேல செய்யாதுல. இன்னிக்கு இல்ல சின்னப் புள்ளைலய அப்பிடித்தாம். நான் என்னிக்காவது அப்பிடி ஆட்களோட பழகிருக்கேனாடே.

பேராசான் சொல்லிட்டுப் போயிட்டார் இந்த மாதிரி அறிவில்லாதவருடைய நட்பையெல்லாம் கை விடுதல் பெரிய பேறுங்காருடே.

நான் என்ன செய்ய

குறள்

ஊதியம் என்பது ஒருவற்கு பேதையார் கேண்மை ஒரீஇ விடல்

அளபெடை வேற போட்டுட்டாருல்லா வள்ளுவப் பேராசான்.

அண்ணாச்சி நீங்க எத்தன தடவ சொன்னாலும் அம்மை மாற மாட்டுக்காளே அண்ணாச்சி.

என்னல பேசுதாளால. என்னத்தச் சொல்ல நானும் நிதானமா எத்தன தடவ சொல்லிட்டேன். என்ன செய்ய என்னையே பேசிருதா.

அண்ணாச்சி நீங்க என்கிட்ட சொல்லவேயில்லை அண்ணாச்சி.

எல நானும் உங்களுக்குச் சரி சமமா அவளக் குத்தம் சொன்னேன்னா வெளங்கிரும்ல்லா. அவ பொறப்பு அப்பிடி.

நம்மட்ட பேசட்டும் அண்ணாச்சி. வெளியில தெருவில பேசினா சரிப் படுமா.

எல அவ மட்டுமா எத்தன பேரு இந்தக் குறைபாட்டோட அலயுதானுவ தெரியுமா. சடார்ன்னு வார்த்தைய விடுதானுவ. அதுக்குத்தான் அவ்வைப் பெருமாட்டி கீழோராயினும் தாழ உரைன்னு சொல்லுதா. என்ன செய்ய.

எல இது அடுத்தவங்கள எவ்வளவு துன்பப் படுத்தும்ன்னு சிந்திக்க மாட்டேங்காங்களே.

எல வள்ளுவப் பேராசான் சொல்லுதாரு எல பழமிருக்கும் போது காய எவனாவது திம்பானாங்கார். திங்கானுவள.

எங்க அண்ணன் ஒருத்தரு இருக்காரு. அவாளுக்கு இப்பிடி அடுத்தவங்களக் காயப் படுத்திப் பாக்கதில எவ்வளவு சந்தோஷம் தெரியுமாடே.

பேராசான் சொல்லுதாக.

தீய விடக் கொடுமையானது இந்தத் தீய சொற்கள்ங்காரு.

எல அய்யா தீயைக் கொண்டு சுட்டேன்னு வச்சுக்க. அது நாளாக நாளாக தானாவும் மருந்து போட்டும் ஆறும். என்ன அந்த இடம் ஒரு வடுவாத் தெரியும். எப்ப பாத்தாலும் அந்தச் சம்பவம் நினைவுக்கு வரும்.

அது புண்ணாகி ஆறி பொறவுதான் வடுவாகும்ங்காரு.

ஆனா தீய சொல் எப்படியாம் உள்ள கெடந்து கொஞ்சம் கொஞ்சமா ஆறி பொறகு வடுவாகாதாம். ஆறி வடுவானாத்தான வலியிருக்காது. ஏன்னா உள்ள புண் இல்லைல்லா.

ஆனா தீய சொல் உடனே வடுவாகிரும்ங்காரு. புரியுதா உடனே வடுவாகிரும்ன்னா என்ன அர்த்தம் தெரியுதால. மனசுக்குள்ள உள்ள தீய சொல் சுட்ட புண் ஆறாதாம். வடு மட்டும் உள்ளத்தில தோன்றிருமாம். அப்பம் காலத்துக்கும் புண் ஆறாது. தீப்புண் ஆறும். வடுவாகும்.

தீய சொல்லால் சுட்ட புண் ஆறாமலே வடுவாகும்ங்கார். புண்ணும் வலியும் என்னிக்கும் இருக்கும்ங்காரு.

சொன்னாக் கேக்கானுவளா பொசுக் பொசுக்குன்னு வார்த்தய விட்டிருதானுவ.

இல்லண்ணாச்சி. இவளால சொந்தக் காரனுவ மட்டுமில்லை வெளிய தெருவில யாரும் என்கிட்டயும் ஒங்க கொழுந்தியா கிட்டயும் பேச மாட்டுங்கானுவ. என் புள்ளக கூட பக்கத்து வீட்டுப் புள்ளய வௌயாடப் பயப்படுது அண்ணாச்சி.

குறள்

தீயினாற் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்டவடு.

பணம் பணம் பணம். அலைகின்றார்கள். எந்த வகையிலும் பணம் சேர்க்க வேண்டும் என்று. அதனாலத் தான் படித்து உயர் பதவிகளில் இருந்த பெரியவர்கள் கூட அதிக வட்டி தருவதாக அறிவிக்கின்ற ஏமாற்றுக்காரர்களிடம் பணத்தைக் கொடுத்து பிறகு ஏமாந்தவர்களின் சங்கத்துக்கு தலைமைப் பொறுப்பேற்று வழக்கு மன்றத்திற்கு நடையாய் நடக்கின்றார்கள்.

விடுதிகளில் அறை எடுத்துத் தங்கி பணத்தை இரட்டிப்பாக்கித் தருகிறோமென்பவர்களிடம் பணத்தைக் கொடுத்து பின்னர் அலறித் துடிக்கின்றனர்.

போ(பொலி)லிச் சாமியார்களிடம் தங்கம் எடுத்துத் தருவார்கள் என்று இருக்கின்ற தங்கத்தைத் தந்து உடலையும் இழந்து நிற்கின்றனர் பெண்கள்.

நம்மை வேறு கடிந்து கொள்கின்றனர். என்ன அண்ணாச்சி பணத்தை மதிக்கவே மாட்டேன் என்கின்றீர்களே. அந்தத் தீய எண்ணம் இல்லாததனால் நான் மக்களால் மதிக்கப்படுகின்றேன் என்று தெரிந்தும் மீண்டும் மீண்டும் என்னிடம் கேட்டுக் கொண்டே இருக்கின்றார்கள்.

பணம் வாழ்க்கைக்குத் தேவை என்பதனை நானும் உணர்ந்திருக்கின்றேன். ஆனால் அதற்கான வழி முறைகள் விதி முறைகள் எதையும் மீறிப் பொருள் சேர்த்தவர்கள் அவர்கள் தலைமுறையோடு அதனை இழந்து நிற்பதனை எனது வாழ்க்கையில் வரிசையாகப் பார்த்துக் கொண்டேயிருக்கின்றேன்.

பெற்ற பிள்ளைகளிடம் ஏன் வாழ்க்கைத் துணையிடம் கூடக் கணக்குப் பார்க்கின்ற மனிதர்கள்.

எனது அன்பு மனைவியை புற்று நோயில் இருந்து காப்பாற்ற நான் முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது ஒரு பெரிய அரசியல் தலைவர் என்னிடம் கேட்டார். இந்த நோயையெல்லாம் குணப்படுத்த



முடியாது. ஏன் வீணாகச் செலவழிக்கின்றீர்கள் என்றார். அன்றுதான் அவரின் மனைவியை நினைத்து நான் வேதனையுற்றேன்.

சொந்த மகன் வலிப்பு நோயினால் மரணப் படுக்கையில் கிடக்கும் நேரம் மருந்து வாங்கித் தராமல் அவன் மரணமடைந்ததைப் பார்த்த தந்தையினைப் பார்த்து துடித்திருக்கின்றேன். இறந்தவனின் மகனுக்கு தலைவலி வந்து துடிக்கும் போதெல்லாம் அவனுக்கும் சிகிச்சை கொடுக்காத அவரிடம் இருந்த பணமோ கோடிகள்.

ஊரில் நடக்கின்ற எந்த நல்ல காரியங்களிலும் கலந்து கொள்ளாத அந்தப் பணக்காரர்கள் குறித்துப் பலமுறை சிந்தித்திருக்கின்றேன்.

பெற்ற பிள்ளைகளுக்கு தராத செல்வத்தையா இவர்கள் வறியவர்களுக்குத் தந்து விடப் போகின்றார்கள்.

பேராசான் சொல்லுகின்றார். இப்படிப் பணம் சேர்த்து அவன் நல்ல உணவைச் சாப்பிட மாட்டான். இது எப்படியெனில் மிகச் சிறந்த அழகுள்ள பெண்கள் சிலர் திருமணமே செய்து கொள்ளாமல் அந்த அழகை வீணடித்து முதிர்ந்து போவது போன்றது என்கின்றார். இப்போதும் நான் நெல்லையிலேயே பார்க்கின்றேன். தாங்கள் மிக அழகாக இருப்பதனாலேயே பல பெண்கள் மாப்பிள்ளைகள் யார் வரினும் புறக்கணித்து பின்னர் இப்போது வருந்துவதனைப் பார்க்கின்றேன். பேராசானின் அனுபவம் அல்லவா நமக்குச் சொல்லியிருக்கின்றது.



குறள்

அற்றார்க்கு ஒன்று ஆற்றாதான் செல்வம் மிகுநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று.

போங்க அண்ணாச்சி எப்பம் பாரு நல்லவனா இரு எல்லார்ட்ட்யும் அன்பா இரு இருன்னு சொல்லுதீய. உண்மைதான் அது நல்லாத் தான் இருக்கு எல்லாரும் நம்மளப் பாத்தவுடன் கும்பிடுததும் மரியாதை செய்யுறதும் மனசுக்கு இதமா இருக்கு அண்ணாச்சி.

வள்ளுவர் சொன்னாருன்னு எல்லாப் பயலுவளுக்கும் நல்லது தான்சொல்லுதீய. ஆனாலும் சில பேரு உங்க மேல மரியாதை இருந்தாலும் வருத்தப்படுதானுவ.

ஆமா அண்ணாச்சி எல அவாள் வசதியான குடும்பத்தில பொறந்திருக்காக. நம்ம அப்படியால. நாலு காசு சம்பாதிச்சாத்தான் நாலு பேரு மதிக்க மாதிரி வாழ முடியும்ங்கானே. அவனுவ சொல்லுததும் சரியாத் தான இருக்கு அண்ணாச்சி.

எல அத யாரு இல்லன்னு சொன்னா.

எல நாமளே எத்தன பேரப் பாத்திருக்கோம். இந்த சுப்பிரமணிப் பய எவ்வளவு சங்கடப் பட்டான். இன்னிக்கு அவனுக்கு என்ன குறை சொல்லு. ஆனா எந்தச் சூழலிலையிலும் தப்புப் பண்ணல நேர் வழியில செல்வம் வந்திட்டுல்லால. நேர் வழியில வந்தா அதுக்குப் பேரு செல்வம். தப்புப் பண்ணி வந்துதுன்னா அது பணம்.

ஆமாண்ணாசி அத கருப்புப் பணம்ன்னுல்லா சொல்லுதானுவ.

எல பணமால கருப்பு. அதச் சம்பாதிச்ச மனுசப் பயலுவ மனம் கருப்பு. வழி கள்ளத்தனமானது. ஆனா நீ ஒழுங்காச் சம்பாதிச்ச பணம் வாங்கற எல்லாப் பொருளையும் அதுவும் வாங்குதுல்லாடா.

எல அய்யா சுப்பிரமணிப் பய சுடலமுத்து ஏன் உன்னய எடுத்துக்கோ எல்லாப் பயலுவளும் நேர் வழியில சம்பாதிச்சிய. எல்லாரும் ஒங்களப் பாத்து எவ்வளவு பிரியமா இருக்காங்க. என் கிட்ட வந்து அண்ணாச்சி நீங்க வளத்து விட்டவனுவல்லாம் புகழோடு இருக்கானுவன்னு சொல்லும்போது எனக்கு எத்தனை மகிழ்ச்சி தெரியுமால.

எல அய்யா வசதி இல்லாதவன் ஒரு நாள் சம்பாதிக்க வாய்ப்பிருக்கு. செல்வம் வந்திரும்டா.

ஆனா அன்பில்லாம அருளில்லாம வாழ்ந்தாம்னு வச்சுக்க. ஒரு காலமும் அவன் மேல வர முடியாதில்ல. அழிஞ்சுதாம் போவாம். நாஞ்சொல்லலடா. நம்ம அப்பன் வள்ளுவர்தான் சொல்லுதாரு. பொருள் இல்லாதவன் அவனது நற்குணங்களால் பொருள் ஈட்டும் வாய்ப்பு வந்திரும். அதையும் எப்பிடிச் சொல்லுதாரு பாருல பூத்திருவானுவன்னு சொல்லுதாரு. என்ன பூத்துச் செழிச்சிருவானுவங்காரு. அருள் இல்லாதவன் அழிஞ்சு போறதத் தவிர வேற வழியேயில்லைங்கார்.

குறள்

பொருள் அற்றார் பூப்பர் ஒருகால் அருள் அற்றார்
அற்றார் மற்றுஆதல் அரிது.



ஏழ்மை என்பதும் வறுமை என்பதும் யாருக்கு முறையாக கற்காதவர்களுக்குத் தான்.

முறையாகக் கற்றவர்கள் எல்லாம் உணர்வார்கள். புரியும் என்று கருதுகின்றேன். இப்போது உள்ள கல்விக் கூடங்களையும் இந்தக் கல்வி முறையையும் நான் ஏற்றுக் கொளவதில்லை. நல்லவர்கள் பெரியவர்கள் குழந்தைகளைக் காதலிப்பவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

மனிதனாக வாழ்வதற்கான கல்வி முறையை காணோமே. பணம் சம்பாதிப்பதற்கான வழிமுறைகளைச் சொல்லித் தருகின்ற கல்விமுறைகள்.

பெரியவர் பெரியசாமித் தூரன் அவர்களை தமிழ்க் கலைக் களஞ்சியம் உருவாக்கித் தர அரசு கேட்டுக் கொண்ட போது அரசு தந்த ஊதியத்தையும் பெரியவர் அவினாசிலிங்கம் செட்டியார் தந்த ஊதியத்தையும் பாதியாகக் குறைத்துக் கொண்டார். காரணம் சொன்னார். தமிழுக்குத் தொண்டு செய்வதற்கு இவ்வளவு ஊதியம் வேண்டாம் என்று. உலகத் தமிழ் மாநாடு கோவையில் நடந்த போது அவரது கலைக் களஞ்சியங்களை தமிழர்களுக்கு குறைந்த விலையில் அச்சிட்டுத் தர வேண்டும் என்று அன்றைய தமிழக முதல்வருக்கு வெளிப்படையான வேண்டுகோள் விடுத்தேன். தமிழ் தங்களைக் காத்துக் கொள்ளவும் வளர்க்கவும் என்ற கருத்து உடையவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

கல்வி தூரன் அய்யா அவர்களை எத்தனை தூரம் பக்குவப்படுத்தி யிருந்தது. ஆமாம் நல்ல கல்வியாளர்களுக்கு வறுமை என்ற எண்ணமே வராது. அவர்களின் வறுமை கூட மக்களுக்கு அவர்களைத் தொண்டு செய்யத் தூண்டுமே தவிர தீமை செய்யத் தூண்டாது.

ஆமாம் நல்லவர்களுக்கு வருகின்ற வறுமை நாட்டிற்கு நன்மையே தரும்.

சரி கல்வியறிவே இல்லாதவர்களிடம் செல்வம் சேர்ந்தால் என்ன நடக்கும் நாட்டில் கொடுமைகளே அரங்கேறும். அவர்கள் பணத்தை ஏதேனும் நல்ல காரியங்களுக்குத் தருவார்களா. ஒரு போதும் நடக்காது. குடி என்றும் ஏழைப் பெண்களை வறுமையை பசியை வைத்து விலைக்கு வாங்குகின்ற பெருங்கொடுமைகளே அரங்கேறும். அது மட்டுமல்ல நல்லது செய்கின்றவர்களை நல்லவர்களை அவமானப் படுத்த முயற்சிக்கின்ற அவலங்கள் நிறைவேறும், ஆசைகளோடு வாழும் அரசு அதிகாரிகளை தங்கள் கைப் பாவைகளாக மாற்றி விளையாடும் அசிங்கங்கள் அரங்கேறும். காவற்றுறை அவர்களின் கள்ளச்சாராய ஊறல்களுக்கு பாதுகாப்புத் தருகின்ற துறையாக மாறும். நானா சொல்லுகின்றேன். தமிழர்களின் தந்தை வள்ளுவப் பேராசான் சொல்லுகின்றார்.

குறள்

நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார் கட் பட்ட திரு.

வார்த்தைகளைப் பாருங்கள் நல்லவர்களிடம் மாட்டிக் கொண்ட வறுமை படுகின்ற அவமானத்தை விட கல்லாதவர்களிடம் மாட்டிக் கொண்ட செல்வம் மிகக் கேவலமாக அவமானத்திற்குள்ளாகும் என்கின்றார்.

எதற்காக அறத்தாற்றின் இல் வாழ்க்கை ஆற்றின் என வள்ளுவப் பேராசானும் இல்லறமல்லது நல்லறம் அன்று என அவ்வைப் பெருமாட்டியும் சொன்னார்கள்.

நோயற்ற வாழ்விற்கு வழி வகுப்பதே ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்கின்ற இல்லறம் என்று உணர்ந்துதான் சொல்லியுள்ளனர்.

மனிதர்கள் உணராததனால் தான் நோய்களால் அல்லலுறுவது நன்கு உணர்ந்து இல் வாழ்வைச் சுவைக்காததனால்தான். சுவைப்ப தெனில் ஆணும் பெண்ணும் இணையாக இன்பம் துய்ப்பது. ஆம் இணையாக. யாரேனும் ஒருவர் இன்பம் துய்ப்பதற்கு மட்டும் அல்ல வாழ்வு.

பெண்ணென்றால் வாயே திறந்து விடக் கூடாது என்று பயிற்றுவிக்கப்பட்டிருக்கின்ற கொடுமை.

அதனையும் வள்ளுவப் பேராசன் சொல்லுகின்றார் ஒரு பெண் சொல்வதாகவே. ஆமாம்.

எனது வாழ்க்கைத் துணை மட்டும் எனது உடலை எனது உடலின் உணர்ச்சி நிறைந்த பாகங்களைப் புரிந்து கொண்டு அவற்றின் மூலமாக எனது உணர்ச்சிகளைத் தூண்டி எனக்கு இன்பம் தருவாரெனில் பிறகு எனக்கு என்னென்ன தேவையென நானே அவரிடம் கேட்டுப் பெறுவேன் என்கின்றாள்.

நாண்என ஒன்றோ அறியலம் காமத்தால்
பேணியார் பெட்பச்செயின்

ஆமாம் இவளைத் தழுவுகின்ற நேரமெல்லாம் எனது உயிர் தளிர்க்கின்றது. உணர்கின்றேன். ஆமாம் இவளின் தோள்கள் அமுதால் செய்யப் பட்டவை என உணர்கின்றேன். எனது உயிர் மட்டுமல்ல அவளின் உயிரும் தளிர்க்கின்றது என்கின்றான் காளை. காமம் தான்

உயிர்களைத் துளிர்க்க வைக்கும் முறையாகவும் சரியாகவும். அதனை உணர்ந்து வாழ்ந்தால் காம வாழ்க்கை சரியாக இருக்கும். இல்லங்களில் நோய் இருக்காது துன்பங்கள் இருக்காது நிம்மதி இருக்கும்.

குறள்

உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின்இயன்றன தோள்.

காதலினால் மானிடர்க்கு கலவி உண்டாம்
காதலினால் மானிடர்க்குக் கவலை தீரும்
ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே
அதுவன்றோ இவ்வுலகத் தலைமையின்ப

என்கின்றான் எங்கள் பாரதி

அவ்வைப் பெருமாட்டி

எல்லா நோய்களுக்கும் காரணமாய் எல்லா உறவுகளையும் நம்மிடம் இருந்து அகலச் செய்கின்ற சினம் எத்தனை அசிங்கமானது அநாகரீகமானது என்று நாம் உணர்ந்தால் நோயும் கிடையாது பகையும் கிடையாது. அது இந்த மனிதர்களிடம் எப்படி இருக்கின்றது என்பதனை அவ்வைப் பெருமாட்டி நமக்கு உணர்த்துகின்றார். சினத்தின் வயப் படுபவர்களை மூன்று வகையாக அறிமுகம் செய்கின்றார்.

முதல் வகையினர் வந்த கோபத்தை விட்டு விடாமல் தொடர்ந்து அதனை வளர்த்து மிக அநாகரீகமாகப் பிரிவினை உறுதி செய்து விடுவர். அவர்கள் எப்படியெனில் கல் பிளந்தது போலே. பிளந்த கல்லைச் சேர்க்க முடியாதது போலே.

அதற்கு அடுத்துச் சில பேர். அவர்களை நல்லவர்களும் பெரியவர்களும் நண்பர்களும் சேர்ந்து பேசி உணர வைத்துச் சேர்த்து வைத்து விடலாம். அவர்கள் பொன் பிளந்தது போலே. அதை ஊதிச் சேர்த்து வைத்து விடலாம்.

சான்றோர்கள் சின வயப் பட மாட்டார்கள். அப்படிப் பட்டாலும் அந்தச் சினம் எப்படியெனில். வில்லில் பூட்டிய அம்பை நீரில் செலுத்தினால் அந்த அம்பு நீரைக் கிழித்துக் கொண்டு செல்லும் போதே நீர் சேர்ந்து கொள்வது போலே, அவர்கள் சினம் மறைந்து விடும் என்கின்றார் அவ்வை பெருமாட்டி.

செய்யுள்

கற்பிளவோடு ஒப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிள வோடு ஒப்பாரும் போல்வரே == விற் பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்

அண்ணாச்சி வணக்கம்

எல சுடலமுத்து நல்லா இருக்கியா. எம்புட்டு நாளாச்சு ஒன்னயப் பாத்து.

என்னண்ணாச்சி பண்ண பிழைப்புக்காக ஊரு விட்டு ஊரு போயாச்சு. எப்பவாவது தான் வர முடியுது. ஒங்க நெனப்பாவே தான் அங்கன கெடக்கேம். இன்னும் ரெண்டு வருசம்தாம் அண்ணாச்சி. இங்கனய வந்திருவேம்.

அது சரி நெறய பணம் சேத்திட்டேன்னு சொல்லுதானுவளே. நெசம்மா.

ஆமா அண்ணாச்சி. அதும் நீங்க சொன்ன மாதிரித் தானே செஞ்சுக்கிட்டு வாரேம்.

தெரியும்டே. அதுவும் தான் எல்லாரும் சொல்லுதானுவள்ளா. அண்ணாச்சி அவம் படிச்ச பள்ளிக்கூடத்துக்கு வேண்டியது எல்லாம் வாங்கிக் குடுத்திருதாம்ங்கானுவ. ஏழைப் பொம்பளப் புள்ளகள் பிரசவத்துக்குன்னா ஒடனே உதவி செய்தாம்ன்னுல்லாம் சொல்லுதானுவள்ளா. மகிழ்ச்சியா இருக்குடே. நெறயப் புள்ளகள படிக்க வைக்கேங்கானுவ. நல்லா இரில. நல்லா இரி.

அண்ணாச்சி ஒரு தடவ நீங்க செண்பகம் பிள்ளை மகன்கிட்ட அந்தப் பய அருணாசலத்து கிட்ட சொல்லிட்டிருந்தீய. வந்ததையெல்லாம் தாறுமாறா அழிச்சுப் பொட்டு வந்து நின்னான், வரும் போது வந்து கேட்டியால. நல்லது செய்யச் சொல்லியிருப்பேன். பணம் வரும் போது கண் மண்ணு தெரியாம அலஞ்ச.

எல செல்வம் நிரந்தரமாத் தங்காதுடா. அதக் கடவுள் குடுக்கும் போது நிறைய நல்லது செஞ்சிரணும். நீ செய்யலய. அது என்னவோ ஒங்கிட்டத்தாம் நிரந்தரமா இருக்கப் போதுங்கற மாரில்லா நெனச்ச. இப்பம் பாரு நல்லதும் செய்யல. இப்ப சாப்பாட்டுக்கு வழியில்ல. ஊர்ல

ஒருத்தன் ஒன்னய மதிக்கானா. சாப்பிடு சாப்பிடு. நான் இருக்கேன்னு சொன்னீங்க. அன்னிக்கே முடிவெடுத்தேம். அதுக்கு நீங்கதான் பொறுப்பு அண்ணாச்சி.

எல எய்யா அது நாஞ்சொன்னதில்ல. எங்கப்பன் வள்ளுவப் பேராசான் சொன்னது.

குறள்

அற்கா இயல்பிற்றுச்செல்வம் அதுபெற்றால்
அங்குப ஆங்கே செயல்.



அண்ணாச்சி இந்தப் பய இராமன் தான் ஒண்ணுமே புரியல. எங்கேருந்துதான் பணம்வருதோ தெரியல.என்ன தொழில் செய்தான்னும் தெரியல வீடா வாங்கிப் போட்டிட்டே இருக்காம். தோட்டம் துரவுன்னு.

ஆமா எல்லாரும் என்கிட்ட சொல்லுதானுவ. யாரையும் பாக்கறதில்ல யார்ட்டயும் பேச மாட்டங்கானுவ. எனக்குந்தாம் புரியல. ஒண்ணு தெரியுது. ஏதோ தப்புப் பண்ணுதாம். எல அய்யா நல்லத விட தப்பு சீக்கிரம் வெளிய வந்திரும். பொறுங்க பாப்போம். அவம் வீட்டுக்காரி நல்ல குடும்பத்தில பொறந்த புள்ளயாச்ச. அது இவன விடாதல.

அண்ணாச்சி அவ கடையநல்லூருக்குப் போயி ஆறு மாசமாச்சு. புள்ளைக ரெண்டையும் கூட்டிக் கிட்டுப் போயிட்டா. அங்க வீட்டுப் படிக்கு வந்திரக் கூடாதுன்னு இவம்கிட்ட சொல்லிட்டுப் போயிட்டா.

அதான கேட்டேன். இதப் பாத்துக் கிட்டு அந்தப் புள்ள இருக்கதது சரியா இருக்காதுல்லால போயிட்டாளா. சரி சரி. படிச்சிருக்குல்லால. ஏதாவது வேல பாத்துப் புள்ளகள காப்பாத்திரும்.

இந்தப் பணம் வருதது எப்படின்னு ஒரு பயலுக்கும் புரிய மாட்டேங்கு. இப்பம் ஒரு கலை நிகழ்ச்சியோ நாடகமோ இசைக் கச்சேரியோ நடக்குன்னு வச்சுக்க நம்ம சந்தி பிள்ளையார் முக்குல என்ன கூட்டம் கூடும். அந்த நிகழ்ச்சி முடிஞ்சவுடன கூட்டம் எப்பிடி காணாமப் போயிருதோ. அப்பிடித்தாம்டா இந்தப் பணம்ல்லாம். ஒரு நிமிடத்தில காணாமப் போயிரும். அப்பிடி எத்தன பயலுகளுக்கு ஆகியும் இவனுவளுக்குப் புத்தி வர மாட்டேங்குத. என்ன செய்ய.

அண்ணாச்சி பேராசான் என்ன சொல்லுதாக.

எல அதத் தான சொன்னேன். பேராசான். கூத்து கூட்டம் கலையுறதப் போலங்கா்.

குறள்

கூத்தாட்டு அவைக் குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.

அண்ணாச்சி வீட்ல இருக்கேளா.

எல மாக்கான் போன்ல பேசிக் கேட்டுக் கிட்டுத்தான் வரணும்ங்க வெளிநாட்டுக்காரன் பண்பு ஒனக்கு எப்பமல வந்துது. அது நமக்கு எதுக்குல. வர வேண்டியது தானே. இல்லேன்னா போக வேண்டியது தான.

இல்ல ஒங்க செல்லப் புள்ள இருக்காள்ளா புளியரைக்காரி அவதாம் கேட்டுக் கிட்டு போங்கன்னா.

எல அவ தலைமையாசிரியையில்லா அதாம் டிசிப்ளின் சொல்லிக் குடுக்கா. என்னல வா.

வாரேம் அண்ணாச்சி.

என்னல தீடிர்ன்னு.

ஒண்ணும் இல்ல அண்ணாச்சி. தேர்தல் வருது எவனாவது கூப்பிட்டானா.

ஒனக்கு கோட்டியால புடிச்சிருக்கு. எவம் கூப்பிட்டாலும் நாம் போவேனால. நல்ல மாட்டுக்கு ஒரு சூடுன்னு அம்மே சொல்லுவா.

இல்லண்ணாச்சி. நீங்க ஒரு சீட்டு கேக்க வேண்டியது தான.

எல இதுக்குத் தாம் வாரேம்ன்னு சொல்லிருந்தா வராதேனு சொல்லியிருப்பேன்.

எல நாடே குழம்பிக் கிடக்கு. ஒனக்கு கிருத்துருவம் போக மாட்டேங்கு.

இல்லண்ணாச்சி அநேகமா எல்லாரும் படிச்சவங்களாத் தாம் இருக்காங்க. அப்பிடியும் இவ்வளவு சம்பாதிக்காணுவளே. வெக்கமே பட மாட்டானுவளா.

எல அதுல்லாம் காந்தி காலத்தோட காமராசர் கக்கன் காலத்தோட போயிட்டுடே. இப்பம் ஒழுங்கீனத்தையே ஒழுக்கமா ஆக்கிட்டாங்களடா. என்ன பண்ண.



எல்லா தப்புக்குப் பின்னாலயும் அரசியல்வாதிதான் இருக்கான்.

இல்ல அப்பிடி எல்லாரும் கிடையாது. முக்கியக் காரணம் அரசுத்துறையில பணியில இருந்துக்கிட்டு வேலய செய்யாம இருக்கணும்ன்னு சில பேர் இருப்பாம் அவந்தாம் சாதி சொல்லிக் கிட்டு மதம் இனம் சொல்லிக்கிட்டு அரசியல்வாதிக்கு திருட்டுத் தனத்த சொல்லித் தந்து அவம் கூடய இருந்துக் கிட்டு நல்ல நேர்மையான அரசு அதிகாரிகளையெல்லாம் மிரட்டிக் கிட்டு சம்பாதிப்பாம் பெரும்பான்மை இப்பிடி.

ஒரு தடவ படிச்சிட்டான்னா. பொறகு அவனே எல்லாம் செய்தாம்.

அண்ணாச்சி எம்.ஏ. படிச்சிருக்கானுவ வக்கீலுக்குப் படிச்சிருக்கானுவ. என்னல்லாமோ படிச்சவனுக தான் இவனுவ. படிச்ச படிப்பு இவனுகள ஒண்ணும் செய்யாதா.

எல அதுல்லாம் வாங்கின பட்டம்டா. படிச்சிருந்தாம்ன்னா கொஞ்சமாவது அறிவு சங்கடப்படுத்தும். இவனுகளுக்கு பட்டம் விக்கதுக்கே சில பல்கலைக் கழகம் இருக்கு. என்ன செய்யச் சொல்லுத.

எல இன்னொரு வழியிருக்கு. பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் புவி பேணி வளர்த்திடும் ஈசன்ன்னு சொன்னாரு பாரதியார்.

எல்லா அரசியல்வாதி வீட்டுப் பெண்களும் அரசு ஊழியர் வீட்டுப் பெண்களும் தங்கள் கணவர்கள் கிட்ட எந்த விதத்திலயும் தப்பா சம்பாதிச்சீங்கண்ணா நான் வீட்ட விட்டுப் போயிருவேம்ன்னு சொல்லட்டும். ஒரு பெரிய நாட்டில எத்தன ஏழைகள் இருப்பாங்க அவங்களும் வரிப் பணம் குடுக்கிறாங்களே அதில திருடலாமா. பணத்துக்காக எல்லாஞ் செய்வீங்கண்ணா ஏதேனும் ஒரு சூழல்ல என்னக் கூட எநத்க் காரியத்திற்கும் பயன்படுத்தப் பாப்பீங்களே. நீங்கள்ளாம் ஒரு ஆம்பளையான்னு கேட்டா. சரியா வரும்ன்னு நெனக்கேம்.

அண்ணாச்சி இவனுவ அந்தப் பொம்பளயோ இப்பிடிப் பேசீருவானுவன்னு தான சின்ன வீடு வச்சுக் கிடுதானுவ.

எல்லாரும் அப்பிடி இல்லேலா ஒருத்தன் ரெண்டு பேரு அப்பிடி இருப்பாம்.

இன்னொண்ணு அவனுக்கு பொறந்த புள்ளக அப்பா என்க்கு வெளிய போகவே வெக்கமா இருக்கு. என் நண்பர்கள்ளாம் என்னய கேவலமாப் பாக்காங்கன்னு சொல்லித் திருத்தட்டும். இது ஒரு முயற்சி.

பேராசான் சொல்லுதாரு எத்தனை சிறப்புள்ள செலவங்களைப் பெறுவதனாலும் மற்றவர்க்கு தீங்கு செய்து பொருளீட்டுவது மனதில மாசில்லாதவர்களின் செயல்ங்கார்.

இதையெல்லாம் படிச்சு பின்பற்றலேன்னா அவன் வாழ்க்கை கேவலமானது தான்.

குறள்

சிறப்பு ஈனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

எல்லோரையும் அய்யா என்று அழைப்பது எனது வழக்கம். எனது தந்தையும் தாயும் எனக்களித்த பயிற்சி.

பல இளைஞர்கள் என்னிடம் அய்யா நான் வயதில் மிகச் சிறியவன் என்னைப் போய் அய்யா என்று அழைக்கின்றீர்களே என்கின்றனர்.

அப்படி அழைப்பது நமது பண்பாட்டுக் கூறு.

இன்னொன்று நான் சிலரைக் கண்டு அதிர்ந்து போவேன். நாம் அவர்களை வணங்க வேண்டும் என்பது போல் அவர்கள் எதிர்பார்த்து நிற்பார்கள். நாம் வணங்கவில்லை என்றவுடன் அவர்கள் முகத்தை ஏதோ போல் வைத்துக் கொண்டு விலகிப் போவார்கள்.

நாம் நமது உண்மையான நடவடிக்கைகளாலும் அன்பினாலும் நம் மீது எல்லோரும் எப்போதும் அன்பு செலுத்தும் வகையில் நடந்ததால் அனைவரும் வணங்குவர்.

ஒரு முறை மதுரை மாநகரில் ஒரு பெரிய உணவு விடுதியின் உள்ளே நான் நண்பர்களோடும் அன்பர்களோடும் உரையாடிக் கொண்டிருந்தேன். ஒரு பல்கலைக் கழகத்தின் பதிவாளராக இருந்த பேராசிரியர் ஒருவர் உணவு விடுதியில் இருந்து வெளியில் வந்தவர் என்ன ஒரே கூட்டம் என்றார். உடனே எனது நண்பர் ஒருவர் சொன்னார் அய்யா வந்தாலே அவரை சுற்றிக் கூட்டம் இருக்கும் தானே. உடன் அந்தப் பேராசிரியர் எனக்குக் கூட்டம் கூடாதா என்று கோபப் பட்டார். ஆனால் நான் இன்றும் அவரைக் கண்டால் அன்போடும் பாசத்தோடும் தான் பேசிக் கொண்டிருக்கின்றேன்.

தங்களைத் தாங்களே மிகப் பெரியவர் என்று கருதுகின்ற பண்பு பரிதாபத்திற்குரியது. நகைப்பிற்குரியதும் கூட. சிலர் மேடைகளில் என்னை வைத்துக் கொண்டு என்னை அதிகமாகப் புகழுகின்ற போதெல்லாம் நான் நாணத்தால் சாம்பிப் போவேன்.

இஸ்லாம் தான் நினைவுக்கு வரும், எல்லாப் புகழும் இறைவனுக்கே என்று. அத்தனை பெரிய ஆஸ்கர் விருது வாங்கிய கையோடு ஏ.ஆர். ரெஹ்மான் சொன்னாரே எல்லாப் புகழும் இறைவனுக்கே. எனக்குக்



கிடைக்கின்ற புகழுக்கும் பெருமைக்கும் என் அன்னை காந்திமதியின் அருள் தான் காரணம் என்பதனால் அவள் மனதில் இருக்கின்ற பெருமையில் இருப்பேன்.

ஒரு நண்பர் என்னைப் பார்க்க என் வீட்டிற்கு வந்த போது ஒரு கேள்வி கேட்டார். என்ன உள்ளே வந்தவுடன் உங்களைப் பார்க்க அனுமதித்து விட்டார்களே. ஒரு பாதுகாப்பும் நெருக்கடியும் இல்லையே.

அவரிடம் சிரித்துக் கொண்டே சொன்னேன். எல்லாப் பாதுகாப்பு களோடும் இருந்த அன்னை இந்திராவை அவரது வீட்டிற்குள்ளேயே கொன்று விட்டார்களே. இறைவனின் கட்டளைக்கு மேற்பட்ட பாதுகாப்பு கிடையாது என்றேன்.

பெரியவர்கள் என்று தங்களைக் கருதிக் கொள்பவர்கள் செய்கின்ற தவறுகளை நம்மிடமும் எதிர்பார்க்கின்றனர்.

எப்போதும் எங்கேயும் எல்லோரிடமும் எந்த நேரமும் எந்தச் சூழலிலும் பணிவோடு இருத்தல் தான் பெருமை என்கின்றார் வள்ளுவப் பேராசான். பெரியவர்களாக இருப்பின் பணிதலே அவர்களுக்கு அழகு என்கின்றார்.

கொஞ்சம் செல்வ வளங்களிலே குறைவு ஏற்பட்டாலோ சூழல் மாறினாலோ அநத நேரம் கொஞ்சம் நிமிர்ந்தாற் போல நடப்பது அவசியம் என்கின்றார். செல்வ வளத்தில் ஏற்பட்ட குறைவை வைத்துக் கொண்டு நம்மைக் குறைவாக பார்க்க முற்படுகின்ற நடிப்பு நண்பர்கள் முன்னரும் நய வஞ்சகர்கள் முன்னிலையிலும். அவர்கள் முன்னர் நிமிர்ந்து நட என்கின்றார் நமது தந்தை.

ஏனெனில் பெரியவர்கள் பண்பாடு குறைய மாட்டார்கள். அவர்கள் செல்வ வளம் குறித்துச் சிந்திப்பதில்லை.



குறள்

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு.



திருமூலர்

கோயிலகள்தோறும் கூட்டங்கள். எந்தக் கோயிலுக்குள்ளேயும் போகவோ வரவோ முடியவில்லை.

எல்லாக் கோயிலிலும் மாதப் பிறப்பு அன்று விளக்கு பூசனை. எல்லா மதினியும் அரிகிரி நந்தினி பாடுகின்றார்கள். மாதா ஜெய ஹோம் லலிதாம்பிகையே பாடுகின்றார்கள்.

சில பெரிய கோயில் தெய்வங்களை ஆன்லைனில் கரெக்ட் செய்கின்றார்கள்.

சிவன் கோயில்களில் குட முழுக்கு. பெருமாள் கோயில்களில் நீர் தெளித்தல் (சம்ப்ரோட்சணம்) நடந்து கொண்டேயிருக்கின்றது.

இருக்கின்ற கற்றளிகளைத் தவிர கோயில்கள் புதிது புதிதாகக் கட்டப்படுகின்றன.

தமிழ்நாட்டிற்குள் புதிதாக எல்லா இடங்களிலும் ஷீரடி சாய் பாபா கோயில்கள் நாற்கரச்சாலைகளில் தோன்றுகின்றன. வீரமணி அது குறித்து வருத்தம் கொள்ளவில்லை.

ஐயப்பனுக்கு மாலை ஆதி பராசக்திக்கு மாலை அறுபடை முருகனுக்கு மாலை. பூண்டி மாதாவிற்கு மாலை.

தெருத் தோறும் உச்சினி மாகாளிக்குக் கொடை. சுடலைமாடனுக்கு கொடை.

கொடிமாடனுக்குக் கொடை அடுக்குச் சுடலைக்குக் கொடை.

பேருந்துப் பிள்ளையார் டாக்ஸி பிள்ளையார் மில் பிள்ளையார் கல்லூரிப் பிள்ளையார் கோயில்களில் குட முழுக்கு விநாயகர் சதுர்த்தி.

விழாக்கள் விழாக்கள். விழாக்கள்.

பேச்சுக்கு பேசுவார்களே ஒழிய இவர்களுக்கு இறைவன் எல்லா இடங்களிலும் இருக்கின்றார் என்ற நம்பிக்கை உள்ளதா. இருந்தால்

நாட்டில் இத்தனை தவறுகள் நடக்குமா. இத்தனை கொலைகள் கொள்ளைகள் சிறு பெண்களைக் கூட பாலியல் கொடுமைகளுக்கு ஆளாக்குவது. கர்ப்பிணிப் பெண்களைக் கற்பழிப்பது. எப்படி நடக்கின்றன.

திருமூலர் சொல்லுகின்றார். கண்காணிக்க ஒருவருமே இல்லை என்கின்ற அறியாமையில் இந்த மனிதர்கள் மேலும் மேலும் கொடுமைகளைச் செய்கின்றார்களே.

கண்காணிக்க கடவுள் எங்கேயும் இருக்கின்றார். நீக்கமற நிறைந்திருக்கின்றார்.

அதை உணர்ந்த உத்தமர்கள் அவன் எல்லா இடங்களிலும் இருக்கின்றான் என்று உணர்ந்தவர்கள் மட்டுமே நாணயமான ஒழுக்கமான வாழ்வை வாழுகின்றனர். எந்தத் தீமையும் அவர்களிடத்தில் இல்லை.

மற்றவர்கள். நாம் எதற்குச் சொல்ல வேண்டும்.

செய்யுள்

கண்காணி இல்லையென்று கள்ளம் பல செய்வார்
கண்காணி இல்லா இடமில்லை காணுங்கால்
கண்காணி யாகக் கலந்தெங்கும் நின்றானை
கண்காணி கண்டார் கள்வொழிந்தாரே

பஞ்ச பூதங்களால் ஆனது உலகு என்பதோடு நமது உடலும் பஞ்ச பூதங்களால் ஆனது.

இந்த உயிர் வாழ்க்கையை எத்தனை விதமாக அனுபவிக்கின்றனர் மனிதர்கள்.

எனது நண்பர் ஒருவர் எதிர்பாரா நேரத்தில் புறப்பட்டு வருவார். உடனே புறப்படுங்கள் அய்யா என்பார். மாஞ்சோலைக்குப் புறப்பட்டுப் போய விடுவோம். இயற்கை அன்னையின் எத்தனையோ காட்சிகளை அவரது புகைப்படக் கருவிக்குள் அடக்கிக் கொள்வார்.

எத்தனை வண்ணங்கள் எத்தனை பறவைகள் மிருகங்கள் எனக் காணக் காண புல்லரித்து நிற்பார். நானும் தான். பச்சைக் கனகாம்பரப் பூவை அங்கேதான் கண்டோம். கண் கொள்ளாக் காட்சிகள்.

இன்னொருவரோ அருமையான இசைக் குறுந்தகடுகளோடு வருவார்.

ஒ.எஸ். அருணின் ஆசை முகம் மறந்து போச்சே என்ற பாரதியின் பாடலை எத்தனை முறை கேட்டிருப்போம் எண்ண முடியாது. பாம்பே ஜெயஸ்ரீயின் நின்னைச் சரணடைந்தேன் இளையராஜாவும் பாடக் கேட்டுக் கொண்டிருப்போம். பீம்சென் ஜோஷி கேட்போம் சௌரசியாவின் குழல் கேட்போம். ராஜரத்தினம் பிள்ளையில் ஆரம்பித்து காருகுறிச்சி நாமகிரிப் பேட்டை என்று கேட்டுக் கொண்டேயிருப்போம்.

வலையப்பட்டி ஏ.கேபழனிவேல் ஜாஹிர் உசேன் என்று தாள வாத்திய மேதைகளைக் கேட்டுக் கொண்டிருப்போம்.

லால்குடி சாமிநாதன் தருமபுரத்தார் என்று திருமறைகள் கேட்டுக் கொண்டிருப்போம்.

ஜி.இராமநாதன் அவர்களின் இசையில் அமைந்த பழைய திரைப்படப்பாடல்களைக் கேட்டுக் கொண்டிருப்போம்.

மெய்ம்மறந்து தமிழிசைத் தலைவர் எம்.கே.தியாகராஜ பாகவதரைக் கேட்டு மகிழ்வோம். பி.யு.சின்னப்பாவைக் கேட்டு மகிழ்வோம். எஸ்.ஜி.கிட்டப்பாவைக் கேட்கும் போதே கொடுமுடி அன்னை கே.பி.சுந்தராம்பாளையும் கேட்டு மகிழ்வோம். இசை வல்லுநர்கள் என்னோடு எனது மகிழுந்தில் பயணம் செய்து கொண்டேயிருப்பார்கள்.

சில நண்பர்களோடு விஞ்சை விலாஸில் இட்லி சாப்பிட்டு மகிழ்வோம். பாளை சேது மெஸ்ஸில் சொதி சாப்பிட்டு மகிழ்வோம். சேலம் போனால் சரவணபவன் சரவணபவன் கிளாஸிக் என்று அதன் தொடர் நிறுவனங்களில் உண்டு மகிழ்வோம்.சென்னையில் முருகன் இட்லிக் கடை. உண்டு மகிழுதல் ஒரு பெருஞ்சிறப்பு.

குற்றாலம் மலைக்குப் போனால் மூலிகைகளின் மணம் மூக்குக்கு பேருவகை தரும் என்றால் செண்பகப்பூவின் மணம் நம்மை எங்கோ கொண்டு போய் விடும். மேலே ஏற ஏற எத்தனை நறுமணங்கள். மூக்குக்குக் கொண்டாட்டம் தான். மேனியைத் தழுவும் இனிய காற்றில் மேனி மகிழும். இப்படி எத்தனை எத்தனை சுகங்களும் மகிழ்ச்சியும் எப்படி அனுபவிப்போம்.

வள்ளுவப் பேராசானிடம் இதனை ஒரு முறை நான் சொன்ன போது அவர் சொன்னார். சிறப்புத்தான் சிறப்புத்தான் என்றார்.

ஆனால் இவற்றையெல்லாம் அனுபவிக்க பல கல் தொலைவு பயணம் செய்வீர்கள் இல்லையா என்றார்.

ஆனால் உங்களுக்காகவே எல்லாவற்றையும் ஒரே இடத்தில் அலையாமல் அனுபவிக்க ஒரு வசதியை இயற்கை தந்திருக்கின்றதே. அது உங்களுக்கு ஏன் தெரியவில்லை என்றார்.

அவர் சொன்ன பிறகு அதிலே நம்மால் என்ன சொல்ல முடியும்.

அய்யனே என்று வணங்கி நின்றேன்.

உன் துணைவியாக வந்திருக்கின்றாளே ஒரு பெண். அவளை நன்றாக் கவனி. இந்த அத்தனை சுகங்களும் அவளிடம் மட்டுமே

நிறைந்திருக்கின்றது என்கின்றார். ஆமாம் அத்தனையையும் கண்டு மகிழவும் கேட்டு மகிழவும் உண்டு மகிழவும் உனர்ந்து மகிழவும் என்று இவை அத்தனையும் உலகத்திலே ஒரே இடத்தில் தான் கிடைக்கும். ஆமாம் பெண் பெண் பெண்ணொருத்தியிடம் தான் இவை அத்தனையையும் பெற முடியும் என்கின்றார் பேராசான். அனுபவித்தவன் நன்கு உணர்வான்.



குறள்

கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணேஉள.



கம்பனின் மண்டோதரி

வீழ்ந்து கிடக்கின்றான் இலங்கை வேந்தன். மண்டோதரி அருகில் சென்று பார்க்கின்றாள்.

சுடுகாட்டிற்குரிய வெள்ளெருக்கம் பூவை சூடுகின்ற சுடலையாடும் பெருமாளான சிவனின் கைலாய மலையைத் தூக்கிய திருமேனி என்கின்றாள்.

கைலாய மலையைத் தூக்கியதனாலேயே அவன் மேனி திருமேனியாகி விட்ட செய்தியைச் சொல்லுகின்றாள்.

அவளுக்கு இராமனைப் பார்த்து பரிதாபமாக இருக்கின்றது. ஆமாம் சொல்லுகின்றாள்.

ஆமாம் இராமனின் அம்பு இலங்கை வேந்தனின் உடம்பிற்குள் எள் ளிருக்கின்ற இடம் அல்ல அவனது உயிர் இருக்கின்ற இடத்தைத் தேடியல்லவாம் கள் நிரம்பியிருக்கின்ற மலர்களைச் சூடி வாழ்ந்த ஜானகியின் மீது கொண்டிருந்த காதல் உள்ளே எங்கேயிருக்கின்றது என்று உடல் அனைத்தையும் உள்ளே இழைத்து இழைத்துத் தேடிப் பார்த்து ஏமாந்து போனது என்கின்றாள்.

ஆமாம் மேகநாதன் என்ற இந்திரஜித்து இறந்து அவன் உடலைப் பார்த்து சீதையெனும் அமுதால் செய்த நஞ்சினால் இலங்கை வேந்தன் நாளை இத்தகையனன்றோ என்று தான் அழுத அன்றே இராவணன் நெஞ்சில் இருந்து ஜானகி விடுதலை செய்யப் பட்டு விட்டாள் என்பது மண்டோதரியைத் தவிர யாருக்குத் தெரியும்.

ஆகவே ஒரு சுத்த வீரனின் உடம்பிற்குள்ளே போய் சீதையைத் தேடி இராமன் அம்பு ஏமாந்து போயிருக்கின்றது என்கின்றாள்.

வெள்ளெருக்கஞ் சடைமுடியான்வெற்பெடுத்த திருமேனி மேலும் கீழும்
எள்ளிருக்கும் இடமின்றி உயிர் இருக்கும் இடம்நாடி இழைத்தவாறே
கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை மனச்சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல் புகுந்து தடவியதோ ஒருவன் வாளி

அன்பிற் சிறந்த லேனா தமிழ்வாணன் அவர்கள் அறுபதாவது அகவையை எட்டியிருக்கின்றார். வாழ்த்துகின்றேன். அவர் எனது பொழிவின் பொன் விழா மலரில் என்னைப் பற்றி எழுதும் போது.

பெரியாருக்குப் பிறகு அய்யா நெல்லை கண்ணன் அவர்கள் தான் எல்லோரையும் அய்யா என அழைக்கின்ற பண்பைப் பெற்றிருக்கின்றார் என்று எழுதியிருந்தார்.

பணிவாகவும் இனிமையாகவும் பேச இந்தச் சமூகத்தில் பெரும் பாடு பட வேண்டியிருக்கின்றது. அதற்காக நான் பெரும் பயிற்சி எடுத்துக் கொண்டேன். ஏனெனில் சில நொடிகளில் சினத்தை ஏற்படுத்தும் முயற்சியில்தான் பலர் இருக்கின்றனர். அழுக்காற்றினால் தான் அவை அத்தனையும் நிகழ்கின்றன.

சிலர் நம்மை விரும்பாதவர்கள் நம்மைப் பற்றி என்னவெல்லாம் வெளியில் தெருவில் பேசுகின்றனர் என்பதனை நம்மிடம் சொல்வதற்கென்றே நம்மைத் தேடி வருவார்கள். சொன்னவரை விட அதனை நம்மிடம் சொல்லுகின்றவர் கொள்ளுகின்ற மகிழ்ச்சி பல மடங்கு. அவர் சொன்ன தீய வார்த்தைகளை ஒரு நாலைந்து முறையாவது நம்மிடம் சொன்னால் தான் இவருடைய மனது அமைதியுறும். ஒரு நாளில் எத்தனை முறை வேண்டுமானாலும் சொல்வர். என்ன செய்ய. யாரேனும் ஒருவர் எப்படியேனும் நம்மை வந்து சந்தித்து விடுவர்.

பணிவும் இன்சொல்லும் ஒருவற்கு அணி என்று சொல்லுகின்றார் பேராசான்.

பல இளைஞர்கள் என்னிடம் உரையாடும் போதும் இல்லை எழுதும் போதும் முக நூலிலும் நான் மிக மிகச் சின்னவனய்யா என்னைப் போய் அய்யா என்று அழைக்கின்றீர்களே எனக் கேட்கின்றனர். அது பண்பின் அன்பின் வெளிப்பாடு.

எனது மகன்களையும் பேரப் புள்ளைகளையும் அப்படித்தான் அழைக்கின்றேன்.

பணிவினாலும் இன்சொல்லினாலும் எத்தனை உயிர்கள் நம் மீது அன்பு கொள்ளும் என்பதனை அனுபவித்துப் பாருங்கள். அந்தச் சுகம் புரியும்.

இயக்குநர் கரு. பழநியப்பன் கட்டுரையில் எழுதியிருந்தார். அய்யா தொலைபேசி உரையாடலை நிறைவு செய்யம் போது அனைவரையும் நல்லா இருங்கய்யா நல்லா இருங்கய்யா என்று நீங்கள் சொல்வீர்கள். அதைப் போல இந்தக் கட்டுரையை நான் நீங்க நல்லா இருங்கய்யா நீங்க நல்லாருங்கய்யா என்று முடித்திருந்தார்.

மிகப் பெரிய செல்வந்தர்களுக்கு இந்த இரண்டு பண்புகளும் மிகப்பெருமளவில் பேசப் படும் செல்வமாக விளங்கும் என்கின்றார் வள்ளுவப் பேராசான். எல்லோரிடமும் என்பதில் மனைவியும் மக்களும் முதலிடம் பெறுவது சிறப்பு.

குறள்

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

ஒரு ஆட்சியாளனுக்குரிய இலக்கணம் என்ன என்று பேராசானிடம் கேட்டேன். அவர் சொன்னார்.

முதலில் குற்றம் வராமல் தன்னைக் காத்துக் கொள்ளுதல் ஆட்சியாளனின் கடமை என்கின்றார். அப்படி ஏதேனும் குற்றம் தன்னிடம் இருப்பின் அதனைக் களைய வேண்டும் எனக் கூறுகின்றார் பேராசான்.

தன்னிடம் குறையிருப்பதனை நண்பர்களோ அமைச்சர்களோ தன்னிடம் சொல்லுவதற்குத் தகுந்த பண்புடையவனாக ஆட்சியாளன் இருக்க வேண்டும். பக்கத்திலே யாரும் வருவதற்கே அஞ்சுகிறாற் போல இருக்கின்ற தலைவன் பக்கம் யார் போக முடியும். ஆக முதலிலேயே யாரும் தன்னிடம் நெருங்க வாய்ப்பளிப்பவனாக ஆட்சியாளன் இருந்தால் தானே அவன் தவறை அவனிடம் சொல முடியும். அப்படி உணர்த்தப் பட்ட குற்றத்தை தன்னிடம் இருந்து முழுமையாக அகற்றினால் தான் ஆட்சியாளனால் அடுத்தவர் குற்றங்களைக் களைய முடியும் என்கின்றார். அமைச்சர்களைக் கூட அடிமைகளாக நடத்தும் நமது அரசியல் தலைவர்கள் உணர்வார்களா.

அப்படி எளிமையானவனாக உணர்பவனாக ஆட்சியாளன் இருந்தால் அவன் மீது குற்றச்சாட்டு எப்படிச் சேரும். என்கின்றார்.

அடுத்துத் தன்னை தானே புகழ்ந்து கொள்வது இல்லை ஆள் வைத்துப் புகழ்வது அது ஒரு நோய் போன்றது. அது தானே நாடெங்கும் கட்சி பேதம் இன்றி நடக்கின்றது. மறந்தும் கூட மக்களுக்கு நன்மை தராத செயல்களை செய்யலாகாது. அதுவும் தானே நடக்கின்றது.

தேர்தல் நேரம் நமது அரசியலாளர்களுக்கு இந்தக் குறட்பாக்களை படிக்க நேரமிருக்குமா. ஆனால் குறட்பாக்களைப் படித்தவர்கள் தானே என்று ஒரு கேள்வி எழும்.



என்ன செய்வது. எனது மைத்துனர் ஒருவர் விளையாட்டாகச் சொன்னார். வள்ளுவப் பேராசான் வழி காட்டுதலில் எல்லாரும் நடந்து விட்டால் குறட்பாக்களை பிறகு யாரும் படிக்க மாட்டார்களே என்று தான். நமது தமிழ்த் தலைவர்கள் எழுதவும் பேசவும் மட்டுமே குறட்பாக்களை பயன்படுத்துகின்றனர் என்றார்.

குறள்

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு.

வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

எல என்ன விடியக்காலத்திலேயே ஒன்னயக் கூப்பிட்டுட்டேன். இப்பம் வந்து நிக்கே. பெரிய ஆளா ஆயிட்டே போல. நாந்தாம் வெபரம் தெரியாம ஒன்னக் கூப்பிட்டு விட்டுட்டேன்.

செருப்பாலய அடிங்கண்ணாச்சி. கல்யாணம் வேண்டாம்ன்னு அழுதனே கேட்டிங்களா அண்ணாச்சி. எல அம்மை அழுதா அவ ஜீவன் அமைதியாப் பிரியணும்ல. பெரிய பாவத்தச் சேக்காதன்னு பாடாப் படுத்தி அந்த சேர்மாதேவிக்காரியக் கட்டி வச்சு கல்யாணச் செலவையும் ஏத்துக்கிட்டு என்னய நரகத்தில தள்ளிட்டீங்களே அண்ணாச்சி.

எல நல்ல குடும்பம் பாக்கும் போது பாங்கா இருந்துது. அதாம்ல ஒங்க மதினியும் நல்ல எடம்ன்னு சொன்னா. பொறுத்துக்கடா. ஒன்னோட கொணம் அந்தப் பிள்ளைக்குத் தெரிய மாட்டேங்க. நீ உயிரய வச்சிருக்க.

ஒங்களயும் தாம் அண்ணாச்சி மூச்சுக்கு மூச்சு ஏசுதா. அந்தப் பெரிய வீட்டுப் பேதில போவாரு ஏம் பாவத்தில அடிச்சு விழுந்திட்டாரேன்னு.

அவங்க அம்மை அப்பா அண்ணன் தம்பி தங்கச்சி எல்லாரும் எவ்வளவு நல்லா இருக்காங்க. இவ மட்டும் தான அண்ணாச்சி இந்த வரத்து வாரா.கல்யாணம் ஆகி மூணு வருஷம் ரெண்டு பிள்ளை பெத்தவதாம் அண்ணாச்சி. அதுக்குப் பொறவு என்னன்னு தெரியல அண்ணாச்சி. பாடாப் படுத்துதா.

மொகத்தில சிரிப்பாணியே கெடயாது. சாப்பாடுல்லாம் வெக்கிற ஸ்டைல்லய நாம் செத்திருவேம். நீங்க விட்டுக் குடு விட்டுக் குடுத்துப் போலங்கியோ. உயிரத்தாம் விட்டுக் குடுக்கணும் அண்ணாச்சி.

எல அந்தப் பிள்ளைய ரெண்டு மூஞ்சியப் பாக்க வேண்டியிருக்குல்லா டே.

அதுகளுக்காகத்தான் வாழுதேம் அண்ணாச்சி.

நாங் கூப்பிட்டு விட்டத அவதானடே சொன்னா.

ஆம அண்ணாச்சி. அதுல்லாம் பெரிய வீட்டு அத்தான் கூப்பிட்டு விட்டாகன்னு சொன்னா. அது மட்டுமில்ல நானும் வருவேன்னா.

வரட்டும்டே. அவட்டயும் பேசணும்.

அந்தா வந்திட்டா அண்ணாச்சி.

யாரு சேர்மாதேவி பண்ணையார் வீட்டு அம்மால்லா. யாத்தாடி மரகதத்தம்மாளுக்கு இங்கன ஒருத்தம் இருக்கான்னு நெனவு வந்திட்டா. அத்தான் மேல கோபமாடே. எதுக்கு. எல நல்லது தானே செஞ்சிருக்கேம்.

அது யாரு இல்லேன்னாங்க.

பொறவு பெரிய வீட்டுப் பேதில போவாருன்னு ஏசுனியாமே.

வந்த ஒடன அதத்தாம் சொல்லுவாங்கன்னு எனக்குத் தெரியும். ஏன் நாம் ஒங்கள ஏச உரிமயில்லையோ.

யாரு சொன்னா கொழுந்தியா மாரு ஏசுறதுக்கு குடுத்து வச்சிருக்கணுமே.

புரியல்ல அத்தான். இந்தக் கோபம் எனக்கு ஏந்தாம் வருதுன்னு புரியவே மாட்டேங்குது. வீட்டில ஒருத்தி இருக்காங்கதயே மறந்து ஒரு ஆம்பிளை இருந்தா கோபம் வருமா வாராதா சொல்லுங்க.

புரியுது அவந்தொழிலு அப்படி வீடு வீடாப் பேப்பர் போட காலேல் எந்திரிச்சாத்தாம் போட முடியும்.

அடுத்துச் சொல்லுங்க.

அண்ணாச்சி கடயத் தொறக்கணும்ல்லா அண்ணாச்சி.

புள்ளகளப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பிச்சிட்டு நாம் மோட்டு வளயப் பாத்துக் கிட்ட எத்தன நேரந்தாம் அத்தான் இருக்கது. டி.வி.யப் பாக்கலாம்னா நீங்க கூட்டம் கூட்டமா சீரியல் பாக்காதன்னு ஏசுதீய.

புரியுதுல. எல அவ கேக்கது நியாயம் தான. அது வாய்ப்பாற பேச் ஒன்னய விட்டா அதுக்கு வேற யாரு இருக்கா. கொஞ்சம் நேரம் ஒதுக்கணும். தினசரி தொறக்கற கடய ஞாயித்துக் கெழம அடச்சா என்னா.



அன்னிக்கு அவளயும் பிள்ளகளையும் எங்கனயாவது கூட்டிட்டுப் போனா என்னல. சம்பாதிக்கோம்ன்னுட்டு பல பய இப்பிடித்தாம் வாழுதானுவ.

எம்மா ஒனக்கு ஒண்ணு சொல்லுதேம். கேப்பியா. ஒனக்குக் கோபம் வரும்போது ஒம் மொகத்தக் கண்ணாடியில பாரு. இத்தன அழகான முகம் எவ்வளவு அசிங்கமாயிருக்குன்னு ஒனக்குத் தெரியும்.

எல ஒன்னயப் பாக்க சேர்மாதேவி வரும் போது ஒம் முகத்தில பாத்த சிரிப்பாணியும் அதில அந்த முகம் பிரகாசிக்குமே.அதையும் இல்லாமப் போக்குனது அந்தக் கோபம் தான். புரியுதா. ஊரே ஒன்னயப் பாத்து மகாலெச்சுமின்னு சொல்லுமா இல்லியா. இப்ப என்ன சொல்லுது தெரியுமா மரகதம் சிங்க மொகமும் கங்காள வேசமுமால்லா அலயுதாங்காளுவ.

வள்ளுவர் சொல்லுதாரு சிரிப்பு மகிழ்ச்சி இரண்டையும் கொல்லுத வேலையைச் சிறப்பாச் செய்யுறதுக்குத்தான் கோபம். அதனால அத விட்டுருங்கங்காரு. அது நல்ல செயலுக்குல்லாம் பகைங்காரு. திரும்ப ஒன்னய மாகாலெட்சுமியாப் பாக்கணும் என்னடே.

சரி அத்தான்.

இப்பப் பாரு ஒம் மொகத்த. கூட்டிட்டுப் போல

குறள்

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற.

கோபம் அழகுக்கு எதிரி. குடும்பத்துக்குப் பகை.

பருவம் கனிந்தது. பாவை அழகுத் தேவதையாக ஆனாள். ஆற்றில் குடைந்து நீராடப் போனவளால் ஆற்றுக்குக் கொள்ளை மகிழ்ச்சி. ஆமாம் அவளின் அழகிய மேனி தொடும் வாய்ப்பினால். மீன்களுக்கு வருத்தம் அவள் கண்கள் தங்களை விட அழகாய் இருப்பதனால். அவளின் குளிர்ந்த மேனியினால் ஆற்றுக்குக் குளிர். அவள் வாராத நாட்களில் ஆறு வருத்தம் கொள்ளும். ஆனால் அங்கே தான் அவள் அவனைப் பார்த்தாள். ஆண்டவன் செயல் அவனும் அவளைப் பார்த்தான். பிறகு இருவரும் குளிப்பதற்காக ஆற்றிற்கு வரத் தொடங்கினர். அப்படித்தான் ஊர் கருதியது. ஆற்றிற்கோ ரொம்பக் கோபம் அவன் மீது.

ஆமாம் அவனை அவள் பார்ப்பதற்கு முன்னர் ஆறு அவளிடம் இருந்துதான் குளிர்ச்சியைப் பெற்றுக் கொண்டிருந்தது என்று அவன் அவளைப் பார்த்தானோ. அதன் பின்னர் அவளின் மேனிச் சூட்டை ஆற்றால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அவன் உடம்புச் சூடோ அதற்கு மேல் காதல் செய்யும் மாற்றம் கண்டு ஆறே வியந்து போய் விட்டது.

ஊர்ப் பெரியவர்கட்கு இது எப்படித் தெரியாமல் போகும். பெரியவர்களும் இந்த வயதில் காதலித்தவர்கள்தானே.

இளையவர்கட்கு அவள் கிடைக்கவில்லை என்பதால் வருத்தம்.

கன்னியர்க்கு அவன் கிடைக்கவில்லை என்று வருத்தம்.

பிறகு ஊர் சும்மா இருக்குமா.இருந்தால் அவர்கள் தமிழர்களாக இருக்க முடியுமா.

ஊர் முழுக்க அவர்களைப் பற்றித்தான் பேச்சு.

ஆற்றில் பார்த்தேன். கோயிலில் பார்த்தேன். மலை மேல் பார்த்தேன் தென்னந்தோப்பில் பார்த்தேன் என்று.

ஊரார் சிலர் அவள் காதில் பட வேண்டும் என்றே பேசினார்கள். அவள் தாயின் தோழியரோ தினம் ஒரு செய்தி தயார் செய்து அவள் தாயிடம் சொல்லிக் கொண்டேயிருந்தனர்.

தாய் தன் பருவ காலத்தை மறந்தவளாக இல்லை தனது காதல் தோல்வியில் முடிந்த வருத்தத்தால் நாளை இவளும் அப்படி ஒரு நிலைமைக்கு ஆளாகி விடக் கூடாதே என்ற பாதுகாப்பு உணர்வில் அவளைக் கடிந்து கொண்டேயிருந்தாள்.

ஊரார் பேச்சு தாயின் ஏச்சு தளிர்க் கொடியை ஒன்றும் செய்யவில்லை. மாறாக அவளுக்கு அது உதவி செய்கின்றது என்கின்றாள் அந்தப் பெண்.

ஆமாம் அவளின் காதல் பயிர் வளர்வதற்கு இந்த ஊராரின் பேச்சுகள் எருவாக மாறி உரமாகின்றதாம்.

தாயின் ஏச்சுகளோ அந்தப் பயிருக்கு அதன் நல்ல வளர்ச்சிக்கு நீராகின்றதாம்.

காதல் நோய்தானாம். ஆனால் அந்த நோயை இவ்விரண்டும் தான் நல்ல வளர்க்கின்றதாம்

யார் சொல்ல முடியும் வள்ளுவப் பேராசானைத் தவிர.

குறள்

ஊரவர் கௌவை எரு ஆக அன்னை சொல்
நீராக நீளும் இந்நோய்.

காவடிகள் நமது நாட்டின் பக்தி வழிச் செல்வங்கள்.

தைப்பூசத் திருநாளுக்காக எல்லா முருகன் கோயிலுக்கும் பக்தர்கள் விரதம் இருந்து காவடி எடுப்பார்கள்.

பால் காவடி பன்னீர் காவடி மச்சக்காவடி சேவல் காவடி என்று விதம் விதமாகக் காவடிகள்.

சாலைப் பயணத்தின்போது இரு புறமும் மக்கள் காவடிகளைச் சுமந்து பக்திப் பரவசத்திலே செல்வதனை பார்க்கலாம்.

காவடிகள் செய்பவர்களின் கலை மணம் அந்தக் காவடிகளிலே தெரியும். பறவைக் காவடி ஒரு பக்கம்.

வாலி அவர்களின் தமிழ்க்கடவுள் வெளியிட்டு விழாவிற்காக எனது தம்பி திருச்செந்தூர் ஐந்துகோடியிடம் ஒரு சின்னக் காவடி அதற்குள்ளே ஒரு வேலோடு வேண்டும் என்று சொன்னேன். அந்தக் காவடியின் அழ்கு வாலியை மட்டும் அல்ல இசையே வடிவமாக வாழும் இளையராஜாவையும் மிகமிகக் கவர்ந்து விட்டது.

இந்தக் காவடிகளேல்லாம் மரக் கம்புகளாலேயோ மலர்களால் மட்டுமோ இருபுறமும் வெள்ளிக் குடங்களிலேயோ இல்லை பித்தளைக் குடங்களிலோ இல்லை பன்னீர் என்றால் வேறு பாத்திரங்களிலோ பிணைக்கப் பட்டிருக்கும்.

ஆனால் வள்ளுவப் பேராசான் வேறொரு காவடியை நமக்கு ஒரு பெண்ணின் வழியாக அறிமுகம் செய்கின்றார்.

ஆமாம் கண்கள் வழியாக இதயம் ஏற்றுக் கொண்ட காளை. நினைவு எனில் அவன் மட்டுமே என்று வாழும் பெண். அவன் பிரிவான் என்று கனவிலும் நினையாத பெண்ணாள். அவனைக் கண்ட பின்னர் அவளுக்கு உறவு என்று யாருமே நினைவிலில்லை.

ஆமாம் அம்மா அப்பா அண்ணன் தம்பி அக்காள் தங்கை மாமன் மாமி தாத்தா பாட்டி அவள் வளர்த்த கன்றுக்குட்டி. அவளாலே பயிற்றுவிக்கப்

பட்டு அவள் காதலன் பெயரை மட்டும் கூறிக் கொண்டே இருக்கும் கிளி. எதுவும் நினைவில் இல்லை. கிளி மட்டும் அவன் பேரைக் கூறிக் கொண்டிருப்பதாலே வேறு வழியின்றி அதனை மட்டும் அது அழைக்கும் நேரம் நினைவில் கொண்டு வருகிறது. அவள் நினைவெல்லாம் அவன் இருக்கும் இடத்தை நோக்கியே இருக்கின்றது. உடல் மட்டும் இங்கே தனியாகக் கிடக்கின்றது.

வருவேன் என்று சொல்லித் தான் சென்றிருக்கின்றான். அதனால் தான் உயிர் உடம்பில் இருக்கின்றது என்று அவள் சொல்லாமலே தோழிக்குத் தெரிகின்றது.

உடம்போ பார்ப்போர் வருந்துகின்ற அளவிற்குக் களையிழந்து கிடக்கின்றது. நோய் பேய் எல்லாவற்றிற்கும் அவள் தாத்தாவும் பாட்டியும் பார்த்து விட்டார்கள். எல்லாக் குல தெய்வக் கோயில்களுக்கும் நேர்ந்தாகி விட்டது.

தோழிக்கும் அவளுக்கும் மட்டும் தான் தெரியும் நோயின் காரணம் அவன் வந்து கொண்டிருக்கின்றான் என்ற செய்தியே அவளைத் தீடீரென்று அழகாக்கிக் காட்டி விடும். தாத்தா பாட்டிக்கு அவர்கள் நேர்ந்த தெய்வங்கள்தான் காப்பாற்றியதாக மகிழ்ச்சி ஏற்படும்.

உடலை விடுங்கள் அவன் நினைவு உயிரையாவது காத்துக் கொண்டிருக்கின்றதே என்றால் அங்கேதான் பெண் துடிக்கின்றாள்.

அவளுக்கு பிறப்பிலேயே வந்த நாணம் இருக்கின்றதே. அதுதானே பெண்ணுக்குப் பாதுகாவலன். ஆனால் பருவம் வந்ததற்குப் பிறகு அந்த நாணம் மிகுந்த துன்பத்திற்கு உள்ளாகின்றதாம். பருவம் வேறு அவன் தந்த ஒன்றிரண்டு முத்தங்கள் அணைத்தல்கள் இவற்றின் விளைவாக விளைந்த காமம் இருக்கின்றதே. அது தருகின்ற துன்பம் தாங்க முடியவில்லை அந்தப் பெண்ணழகால்.

ஆமாம் அவை இரண்டும் ஆமாம் நாணமும் காமமும் காவடியின் இருபுறமும் தொங்குகின்றதாம். ஆமாம் காவடித் தண்டாக அவை

இரண்டும் எதைக் கொண்டிருக்கின்றன் தெரியுமா. அவள் உயிரை. ஆமாம் எந்த உயிரை மிக மிக பத்திரமாக காப்பாற்றிக் கொண்டிருக்கின்றாளோ. அந்த உயிரைக் காவடித் தண்டாக மாற்றி நாணமும் காமமும் இரு புறமும் தொங்கிக் கொண்டிருக்கின்றன. துடிக்கின்றாள் தாங்க முடியாமல் அந்தத் தங்க மகள்.

குறள்

காமமும் நாணும் உயிர் காவாத் தூங்கும் என்
நோனா உடம்பின் அகத்து.

அண்ணாச்சி நல்லா இருக்கேளா

எல இது என்ன எல்லாப் பயலுவளும் ஒண்ணா வந்திருக்கீய. ஏதும் விசேஷமால.

ஆனா எங்களுக்கு நீங்கதான் அண்ணாச்சி விசேடம். ஒங்களுக்குத் தெரியாம எந்த விசேடம் எங்களுக்கு வந்திரப் போகுது.

ஒண்ணு போல வந்திருக்கீங்கள்ளால. அதாம் கேட்டேம்.

அண்ணாச்சி இன்னிக்குத் தாம் எல்லாருக்கும் நேரம் வாச்சுது. அதாம் வந்தோம். அப்பிடி மதினி கையால மத்தியானம் சொதிக்குழம்பும் சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு.

எல பாத்தியா சாப்பிட்டேளால.

காலேல சாப்பிட்டிட்டுதான் வந்தோம் அண்ணாச்சி. பலவேசம் வீட்டில.

எல என்னய ஏம்ல கூப்பிடல. அவ இடியாப்பம் செஞ்சான்னா எப்பிடி இருக்கும்.

அவ சொன்னா அண்ணாச்சி பெரிய வீட்டு அத்தானயும் கூப்பிடுங்க கூப்பிடுங்கன்னு. நாந்தாம் தீடிர்ன்னு எப்பிடிக் கூப்பிடன்னு வேண்டாம்ன்னுட்டேன்.

ஒனக்கு ஏம்மேல என்னடே கோபம்.

போங்கண்ணாச்சி. ஏதோ முட்டாத் தனம் பண்ணிட்டேம்.

சரில அவ என்ன நான் கேட்டாச் செஞ்சு வீட்டுக்குக் குடுத்து விட்டிர மாட்டாளா.

வேற என்னல சேதி.

இல்ல அண்ணாச்சி தெய்வு நேத்து ஊர்ல இருந்து வந்திருந்தாம்.

ஆமா இங்கனயும் வந்திட்டுத் தான போறான்.

இங்க வந்தேம்ன்னு சொன்னான். ஒரே ஆவலாதி.

யாரப் பத்திடே.

ஒங்களப் பத்தித் தாம் அண்ணாச்சி.

எல ஏம்மேல என்ன ஆவலாதி. அந்தப் பய என்கிட்ட வாயே தொறக்கல. ஒங்க கிட்ட வாய் தொறக்கணும்ன்னா நான் ஒருத்தன் தான் லாயக்குன்னு இவனுவ எல்லாரும் பேசுதானுவ அண்ணாச்சி.

சொல்லு என்ன ஆவலாதி.

இல்ல அண்ணாச்சி அவ மாமனாரு ஊர்ல நீங்க வந்து பேசி ரொம்ப நாளாச்சாம்லா. அதாம் அவாள் மாப்பிள எம்புட்டுப் பணம் வேணாலும் குடுத்திருவோம். அவாள நம்ம ஊருக்குக் கூட்டிட்டு வரணும்ன்னாளாம். இவம் முன்னாலேயெ ஒரு தடவ ஒங்க கிட்ட கேட்டதுக்கு ஒங்க ஊருக்கால என்னய விட்டிருன்னு சொல்லிட்டேளாம்.

எல அவம் ஊருல ஒட்டு மொத்தமா ஒருத்தனும் கேக்க மாட்டானுவல. நமக்கே மனம் தும்பப்படும். மண்ணு மாரி ஒக்காந்திருப்பானுவ.

அவங்க ஊருக்கு அடுத்த கிராமத்தில கூப்பிடும் போதெல்லாம் போறிங்களாம.

அதச் சொல்லிரு எல அந்த ஊருல சின்னப் பயலுவ கூடக் கேப்பாம்ல. எட்டாவது படிக்கற பய குறள்ல விளக்கம் கேப்பாம்ல. இவனுக ஊர்ல இந்தப் பய மாமனே அப்பிடித் தான். உயிரே போயிரும்ல.

எல வள்ளுவர் என்ன சொல்லுதாருண்ணா.

அதான கேட்டேன் வள்ளுவர இன்னும் அண்ணாச்சி கூப்பிடலயன்னு பாத்தேம். கூப்பிட்டாச்சா.

எல அவரு இருக்கப் போய்தாம் நான் வாழ்ந்துக்கிட்டிருக்கேம்.

அவரு சொல்லுதாரு ஒண்ணும் தெரியாம மண்ணு மாரி இருக்கவனுக முன்னால பேசுதது. அங்கணாக் குழியில அமுதத்தக் கொட்டுறது மாதிரிங்கார்.

அப்ப அவங்க மாமனார் ஊர இனிமே அங்கணாக்குழின்னு தாம் கூப்பிடணும்ங்கேளா அண்ணாச்சி.

எல்லார் வீட்டிலயும் அடுக்களைக்குள்ள பாத்திரம் கழுவுற இடம். பொம்பளய ஒரு அவசரத்துக்குப் பயன் படுத்தற எடத்தில போயி அமுதத்தக் கொட்டக் கூடாதுங்கார். பேசும் போது கூட்டம் அசஞ்சாத் தானல பேச வரும். சிரிக்க வச்சாச் சிரிக்க மாட்டானுவ அழ வச்சா அழ மாட்டானுவ. எல பேச்சக் கேக்கப் பிடிக்கலேன்னா. எழுந்திரிச்சாவது போணும்ல்லால. போயும் தொலய மாட்டானுவ.

இந்தப் பயலுவ எல்லாரும் சொன்னனானுவ அண்ணாச்சி செஞ்சா சரியாத்தாம் இருக்கும்ன்னானுவ. சரி இப்பம் அவம் மாமனார் ஊரு பேர நாங்க மாத்தித் தான கூப்பிடுவோம்.

அங்கணாக் குழின்னால. எல திருநவேலிக் குசும்பு.

குறள்

அங்கணத்துள் உக்க அமிழ்து அற்றால் தம்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல்.

அண்ணாச்சி நேத்து கூப்பிட்டீங்களாம். வர முடியல அண்ணாச்சி. வயித்தால போய்ட்டு அண்ணாச்சி. இப்பம் தாம் பரவால்ல.

என்னத்தல செஞ்சு குடுத்தா ஒம் வீட்டுக்காரி. வயித்தால போயிட்டுதுங்க.

அவ செஞ்சத சாப்பிட்டாத்தாம் ஒண்ணும் செய்யாதுல்லா நாந்தாம் கொழுப்பெடுத்துப் போயி தேசிய உணவச் சாப்பிட்டேன்.

பரோட்டாவா நாயே ஒன்னய எத்தன தடவல சொல்லிருப்பேம். கேடுல்லால. அந்த நாக்க அறுத்தா என்னல. எல உள்ள போற சாப்பாடுதானல உடல் நலத்துக்கும் நோய்க்கும் காரணம். ஒங்களுக்கு சொல்லிச் சொல்லி அலுத்துப் போச்சுல. நான் என்ன செய்ய.

ஆமண்ணாச்சி. அங்கன போனா அவம் மீரான் பாயி வாங்க மாப்பிள்ளை பரோட்டா சாப்பிடலாம்ன்னு கூட்டிட்டுப் போயிட்டாம். இனிமே மாட்டேன் அண்ணாச்சி.

எல நம்ம நாட்டு தட்ப வெப்ப நெலைக்கு ஏத்த மாதிரி இயற்கை நமக்குன்னு காய் கனின்னு தருது. அதச் சாப்பிட்டாப் போதும்ல. அந்தந்த கால கட்டத்தில வெளயற காய் கனிய அந்த அந்த நேரத்தில சாப்பிட்டீங்கன்னா நோய வராதுல. கண்டது கழியறதச் சாப்பிடுதீய. அதாம் சங்கடப் படுதீய.

இட்லி இடியாப்பம் புட்டுன்னு நீராவில செஞ்சதா சாப்பிடுங்க ஒங்க ஆவி கெட்டுப் போகாது. கேரளாக் காரங்களப் பாரு. அது மட்டுமல்ல அவங்க சம்பா அரிசிச் சோறு இன்னும் சாப்பிடுதாங்க. நாமும் சாப்பிட்டவங்க தாம். இப்பதான எல்லாத்தையும் விட்டுத் தொலைச்சிட்டோம். சம்பா அரிசிச் சோறு ஒடம்புக்குப் பலம்லால. அதுல அவங்களக் கேலி வேற. ஆமா பரும் அரிசிச் சோறு சாப்பிடுதாங்கன்னு. அங்கன இருக்க உணவு விடுதிக் காரங்களும் நம்ம ஆளப் பாத்தவுடன பாண்டி நாடான்னு பொடி அரிசிச் சோத்ததான் பரிமாறுதாங்க. கீரை

வகை எத்தனை எல்லாத்தையும் தாம் ஒழிச்சிட்டியள்ளா. பிஸ்ஸாங்காம் பர்கர்ங்காம். என்ன புரியுது. கடல மிட்டாயக் குழந்தைகட்குக் கொடுங்க. எத்தனை சத்து தெரியுமா. கோவில்பட்டியில கடல மிட்டாய் விக்கறவரு ஒருத்தரு அன்னிக்கிச் சொல்லிருக்காரு. இதில கெமிக்கல் கலக்குறிங்களா ன்னு செய்தித்தாள்ல இருந்து கேட்டிருக்காங்க. சின்னப் புள்ளய சாப்பிடுத பண்டத்தில அத எப்படிய்யா கலப்போம்ன்னு. எல உணவு விடுதியில என்னத்த வச்சாலும் திங்கேளே.

எல துட்டுக் குடுத்துத்தான சாப்பிடுதீய. அதுக்குப் பரிமார்றவங் கிட்ட போயி ப்ளீஸ் கொஞ்சம் சட்னி குடுங்கங்கீங்க சாம்பார் குடுங்கன்னு கெஞ்சுதேள்ளா. வெக்கமா இல்லியா. அதுல பரிமார்ற புள்ளைக வேற கேக்காங்க ரா ரைஸா பாய்ல்டு ரைஸாங்காம். எல்லாம் இங்கிலாந்தில இருந்து வந்திருக்காம் பாரு. எல குழம்புதான் தமிழ் சாம்பார்ன்னா அது உருது வார்த்தை.

எல மாம்பழம் அதிகம் சாப்பிட்டிட்டன்னு வச்சுக்க. அந்த மாம்பழக் கொட்டைக்குள்ள ஒரு பருப்பு இருக்கும். அதச் சாப்பிட்டா போதும் மாந்தம்வாரது. வேர்க்கடலை மேல ஒரு சிகப்புத் தொலி இருக்குல்லாடே. அதுதான் வேர்க்கடலையில இருக்குற பித்தத்துக்கு மருந்து. அதக் கசக்கி அந்தத் தொலிய ஊதிட்டுத் தான திங்கியோ. ஒவ்வொண்ணுக்குள்ளயும் மருந்த கடவுள் வச்சிருக்காம். என்ன தெரியும் ஒங்களுக்கு. கெழவி சொன்னாள்ளா "பசித்துப் புசின்னு" எவம் அவளேல்லாம் நெனக்கிய வாயத் தொறந்தா இங்கிலீஷ்.எல சுக்குத் தண்ணி எத்தன பேரு குடிக்காம். இஞ்சி எத்தன பேரு சாப்பிடுதாம். மிளகு எத்தன பேரு சேத்துக்கிடுதாம்.பெருங்காயம் எத்தன பேரு சாப்பிடுதாம். சின்ன வெங்காயம் ரொம்ப நல்லது. அதச் சாப்பிட்டா போதும்ல எத்தன நோயத் தடுக்கும் தெரியுமா. பெரிய வெங்காயம் கேடு அதத்தான சாப்பிடுதாம். பூண்டு எவ்வளவு நல்லது. கொழுப்புச் சத்த கூட விடாது.வெங்காயம் பூண்டெல்லாம் நீங்க இல்லறத்தில இருக்கவனுவ சாப்பிட்டா இல்லறம் சுகமா இருக்கும். எங்க சாப்பிடுதிய

பொறவு விவாகரத்துன்னு அலயுதீய. ஆனா சாமியார் பூரர்ம் சாப்பிடுதான் பொறவு சிறைச்சாலைக்கு அலயுதானுவ. எடுத்த ஒடனே பெரிய பெரிய கட்டிடத்தில இருக்க மருத்துவமனைக்குத் தான போறானுவ. விடு விடு.

இன்னொரு நோயப் பத்தி வள்ளுவப் பேராசான் வருத்தப் படுதாரு. இந்த மனுஷப் பொறப்பில சில பேரப் பாத்து அவருக்கு பெரிய வருத்தம். ஆமாம் சில பேரு எதப் பத்தியும் கவலப் படாம எதையும் படிக்காம முட்டாளா இருக்காம்ல்லா. அவம் பெரியவங்க சொல்லைக் கேட்டும் நடக்க மாட்டான். அவனுக்கா ஏதாவது தெரியுமான்னா அதுவும் கெடயாது.

அது வெறும் ஒடம்புன்னா சடலம்ன்னு விட்டுட்டுப் போயிரலாம். ஆனா அவம் ஒடம்புக்குள்ள உயிர் வேற இருக்கு. அந்த உயிர் இவன் ஒடம்புக்குள்ள இருக்குல்லா. அதுனால பேராசானுக்குத் தோணுது. அவனப் பொறுத்த வரேல அந்த உயிரே நோய்ங்கார். ஆமா அது இருக்குறதுனால தான அவனால உலகத்துக்கு பல துன்பம் வருது. அதனால அந்த உயிர் போற வரைக்கும் அதே நோய்ங்கார்.

குறள்

ஏவவும் செய்கலான் தான் தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும் ஓர் நோய்.

குறட்பாக்களே சிறப்பு அதிலேயும் அளபெடையோடு வரும் குறட்பாக்கள் மிகச் சிறப்பு.

அண்ணாச்சி

ஏய் சொடல என்னல காலேலய வந்தாச்சு.

ஆமண்ணாச்சி. இன்னிக்கு பூராம் ஒங்க கூடய இருக்கணும்ன்னு ஒரு ஆசை. அதாம் அண்ணாச்சி. ஒங்க கூட இருந்தாலயும் ஆச்சு மதினி கைனால சாப்பிட்டாலயுமாச்சு.

போடு அப்பிடி.

இல்ல அண்ணாச்சி. அங்க கிராமத்தில பள்ளிக் கூடம் கட்டணும்ன ஒடன ரூபாயத் தூக்கிக் கொடுத்தாச்சு போல.

எல இருந்துது. இருந்தா ஒடன குடுக்கணும்ன்னு ஒங்க பெரியப்பா சொல்லிட்டுப் போயிருக்காள்ளாடே.

அதுக்காக இருக்கதயெல்லாம் குடுத்தா என்ன அர்த்தம்.

எல பாரதியார் அன்ன யாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்ன்னு சொல்லிருக்காரே. அத ஊர் பூராம் சொல்லிட்டு நான் குடுக்கல்லன்னா என்னல அர்த்தம்.

சொல்லுதவம் பூராம் குடுக்கானோ.

பாத்தியா ஆரம்பிச்சிட்டியே.

இல்லண்ணாச்சி தனக்குப் போகத் தாம் தானம்ன்னு பெரியவங்க சொல்லிருக்காங்கள்ளா. அதயும் நீங்க தான சொல்லிக் குடுத்தீய.

எல சாப்பாட்டுக்கு வச்சிருந்ததயால குடுத்தேம். ஒரு எடத்தில இருந்து பணம் வந்திச்சு. அதே நேரத்தில அவாள் தமிழய்யாவும் தலைமை ஆசிரியரும் வந்தாங்க. சரியா அந்த நேரத்தில வந்தா என்ன அர்த்தம் தெரியுமால. நெல்லையப்பரும் காந்திமதியும் அந்தப் பணத்த நமக்கு அனுப்பிச்சிட்டு ஒடனே அவங்களயும் அனுப்பிச்சிருக் காங்கன்னா அத ஒடனே அவங்களுக்குக் குடுன்னு அர்த்தம்.

ஒங்க கிட்ட பேசி ஜெயிக்க முடியுமா. சரி வள்ளுவர் அளவறிந்து வாழச் சொல்லிருக்கார்ன்னு நீங்கதான சொல்லிக் குடுத்தீய.

அது சரிதான் நான் எனக்குன்னு ஒண்ணும் சேத்து வைக்கல தான். எதுக்குடா செத்துத் தான போகப்போறோம்.

எவம் சாகாம இருக்கப் போறான். அந்த ஊரிலய ஒங்க சொக்காரர் நீலகண்டன் இருக்காருல்லா. அவரு குடுக்காரா அண்ணாச்சி. எவ்வளவு பணம் எத்தன கோட்டை விதைப்பாடு. இங்கன டவுண்ல எத்தன எடம் வாட்கைக்குக் குடுத்திருக்காரு. வாடகயே பல லட்சம் வரும். அவாள் குடுத்திருக்காளா. நீங்க தாம் பொசுக் பொசுக்குன்னு தூக்கிக் குடுக்கறது. சின்னப் பய எனக்கு ஒங்களுக்கு புத்தி சொல்ல தகுதிஇருக்கா. ஒங்க கொழுந்தியா பொறப்படும் போதே சொன்னா அங்கன போயி வாய்க் கொழுப்பக் காட்டாதீங்கன்னு.

எல அந்தச் சாக்கில ஒன்னய வாய்க் கொழுப்புப் புடிச்சவம்ன்னு வல்லநாட்டுக்காரி அடிச்சிருக்கா பாரு ஒரு அடி.

அவளுகளுக்கும் நீங்க தான அண்ணாச்சி சப்போர்ட். எது சொன்னாலும் பெரிய வீட்டு அத்தான் காதில போடட்டுமான்னு மெரட்டுதாளுவ.

எல இரி போன் அடிக்கு யாருன்னு கேட்டிட்டு வாரேம்.

யாரு நாம் அண்ணாச்சி தாம் பேசுதேம். நெசம்மாவா எல பொய் சொல்லப் படாது. அது சரி நம்ம பிள்ளைய எவம் பொய் சொல்லுவாம். எவ்வளவு. பத்து லட்சமால. போடு. அதான கேட்டேன். சரி வா. இங்க சொடல வந்திருக்காம். சாயங்காலம் வாரயா. சரி வாடா.

யாரு அண்ணாச்சி

காசிப் பய.

என்னமோ பத்து லட்சம்ன்னுல்லாம் பேசுனேளே என்ன அண்ணாச்சி.

ஏய் நீலகண்டன் பள்ளிக் கூடம் கட்ட பத்து லட்சம் குடுத்திருக்கானாம். காசி சொன்னான்.

அண்ணாச்சி நெசம்மாவா.

ஆமடே.

எப்பிடி அண்ணாச்சி மழதான் பெய்யப் போது.

அதாம்ல அவம் பெரியப்பன் மகன் சண்டியன் விசு இருக்காம்லா. அந்தப் பய போயிருக்காம். அவம் எப்பிடிப் பேசுவாம்ன்னு தாம் தெரியுமே.கொஞ்சம் காட்டு மாட்டுத் தனமா பேசிருக்காம். திடீர்ன்னு ஒம்மப் போட்டா என்ன செய்வீருன்னிருக்காம். சத்தம் காட்டாம பத்து லட்சம் குடுத்திட்டானாம்.

அது மரியாதயா நீங்கள்ளாம் குடுத்த மாரிக் கொடுத்திருக்க்லாம்லா.

அது வள்ளுவரய்யா சொல்லுதாருல்லா. சில பய நல்லதுக்கு நல்லவன்ல்லாம் கேட்டாக் குடுக்க மட்டாம். ரெண்டு போடு போடுத பயலுகளுக்குத்தம் குடுப்பாம்ங்காரு. நம்ம ஆச்சில்லாம் சொல்லுவாள்ளாலே. அந்தப் பய எச்சிக் கையால காக்கா வெரட்ட மாட்டாம்பா. என்ன அர்த்தம் கையில எச்சி உதிர்ந்து காக்கா தின்னிரும்ன்னு. அப்பிடிப் பட்டவனுவ கத்தியக் காட்டினா ரெண்டு அடி போட்டாம்ன்னா குடுப்பாம்.

குறள்

ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறு உடைக்கும்
கூன்கையர் அல்லா தவர்க்கு.

கம்பனின் இராவணன்

கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும் என்கின்றான் எங்கள் எட்டையபுரத்துப் பெரியவன் பாரதி.

இராவணன் தூய வீரன் என்று ஒரு விருத்தத்தில் கம்பன் சொல்லுகின்ற செய்தி அனைவரையும் விருப்பம் கொள்ள வைக்கும்.

இராமனோடு போர் புரிகையில் பிரம்மனின் பேரன் இராவணன் கருதுகின்றானாம் கம்பன் சொல்லுகின்றான்.

இராமனின் போர் முறையும் அவன் விரைவான வில் வித்தையும்

அந்தப் போரின் போது அவனது உடலிலே தோன்றும் அழகும் கண்டு அந்த வீரன் கருதுகின்றான் பாருங்கள்.

ஜனகனின் மகள் இவனை மிதிலையில் உப்பரிகையில் நின்று

பார்த்திருக்கலாம். அவன் நொடியில் வில்லொடித்ததை பார்த்தி

ருக்கலாம். அவனுக்கு மாலை சூட்டும் போது ஒரக்கண்ணால்

பார்த்திருக்கலாம்.

அயோத்தி வந்ததன் பின்னர் பலமுறை பார்த்திருக்கக் கூடும்.

அவளின் பொறுமையினால் உலகம் முழுவதும் போற்றப் படுகின்ற

சீதைக்கு இராமனை இன்னொரு கோணத்தில் பார்க்கின்ற வாய்ப்பு

இல்லாமல் போயிற்றே எனக் கருதுகின்றான்.

தீயைப் போல இராமன் செய்கின்ற போரினை மட்டும் ஜனகனின் மகள் பார்க்கின்ற வாய்ப்பினை பெற்றிருந்தாளென்றால் மன்மதன் அதன் பின்னர் என்னையெல்லாம் நாய் என்று நினைத்திருப்பாள் என்கின்றான்.

அவளின் மீது தங்கையினால் காமம் கொண்டு தூக்கி வந்து அசோக வனத்தில் சிறை வைத்துப் போர் முனையில் நிற்கும் போது மன்மதனை ஏன் இழுக்கின்றான் என நினைக்கும் போது தான் இராவணன் கூற்று நமக்குப் புரிகின்றது.

மன்மதன் காட்டியதானால் தானே சீதையைப் பார்த்தான். அப்படி எனில் மன்மதன் தானே முதற் குற்றாவாளி. அதனால் தான் நாயாக மன்மதனை முதலில் கூறி விட்டு பின்னர் தன்னை நாய் என்கின்றான்.

செய்யுள்

போயினித் தெரிவதென்னே பொறையினால் உலகம் போற்றும்
வேயெனத் தகைய தோழி இராகவன்மேனி நோக்கில்
தீயென கொடிய வீரச் சேவகச் செய்கை காணில்
நாயெனத் தகுதும் அன்றே காமனும் நாமும் எல்லாம்

இருபதாம் நூற்றாண்டின் மகாகவி

'யாதுமாகி நின்றான்'

சென்ற நூற்றாண்டின் இறுதியில் பிறந்து இந்த நூற்றாண்டில் உயிர் துறந்த ஒரு மகாகவியை, வாழ்க்கையில் எல்லா அனுபவங்களையும் பெற்ற எல்லா தரத்தினரோடும் பழகி உணர்ந்து, எல்லாக் கடவுள்களையும் பாடி, எல்லா மதங்களையும் உணர்ந்து, எம்மதத்திலும் அடங்கி விடாமல் எல்லாவற்றிலும் உண்மைகளைத் தேடிக் கண்டு பிடித்துக் களித்தவனை, பேச முடியாத சூழலில், பேசமுடியாத உண்மைகளை தான் பிறந்த குலத்திற்கு எதிராக கருத்துகளையும் பெருங்குரலில் உரத்துச் சொன்ன மகாகவியை அவன் மொழியாலேயே சொல்வதென்றால்...

"யாதுமாகி நின்றாய் பாரதி
எங்கும் நீ நிறைந்தாய்."

ஆம்... உலகின் மூத்த மொழியான அன்னைத் தமிழ், குறுநிலை மன்னர்களை குளிர வைக்கவும், பிரபுக்களின் பெருமூச்சுகளுக்கு பொருள் விளங்கச் செய்யவும் நமது புலவர்களால் அடிமைப் படுத்தப்பட்டிருந்த நேரம், அன்னை தமிழின் அடிமை விலங்கை உடைத்த முதல் தமிழன் "பாரதி" நாட்டு விடுதலைக்காகப் பாடிய நாயகன் என்று அவனைப் பாராட்டுவதற்கு முதலாக பாட்டு விடுதலைக்காக, பைந்தமிழ் அன்னையின் விடுதலைக்காகப் பாடி அந்த விலங்கை உடைத்தவன் பாரதி மடல்களிலும், உலாக்களிலும், மடங்கிக் கிடந்த அன்னைத் தமிழை மக்களிடம் அழைத்து வந்தவன் அந்த மகாகவி.

"சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது,
சொற் புதிது, சோதி மிக்க
நவ கவிதை, எந்நாளும் அழியாத மகாகவிதை"

என்று சொன்னபடி வென்றும் காட்டியவன்.

பிறப்பிலேயே மனித நேயம் மிக்கவர்களாக, உலகு தழுவிய சிந்தனையாளர்களாக யார் உருவெடுக்கிறார்களோ, யாரை உலகம் தனது நல்ல செயல்களால் பெருமிதம் கொள்ளச் செய்தும், தீய செயல்களால் பொங்கியெழவும் செய்கின்றதோ, அவர்கள்தான் கவிஞர்கள் என்பதற்கு பாரதியே ஓர் அத்தாட்சி.

முப்பத்தொன்பது வருட வாழ்க்கையிலே இருபது வருட காலம் மட்டும் எழுதிய ஒருவனால் எப்படி இன்னும் பல நூற்றாண்டுகளுக்கான செய்திகளைத் தரமுடிந்தது? அதுவும் பாமரத் தமிழனும் புரிந்து கொள்கின்ற பாட்டுக்களாக!

பெண்ணுக்கு இட ஒதுக்கீடு, பெண்ணுரிமை என்று பேசுவதும் எழுதுவதும் சிலருக்குப் பெருமையாகப் போய்விட்ட இந்தக் காலத்தில் அவன் அன்றே பேசிய பெண் விடுதலை கருத்துக்கள் நம்மை வாயடைத்து நிற்கச் செய்துவிடும். விதவைப் பெண்களின் எண்ணிக்கை அதிகமாகிப் போயிருந்த அன்றைய இந்தியாவின் நிலைமயை உணர்ந்து தேசத்தந்தை காந்தியடிகள் சில வழிகாட்டுதல்களைச் சொன்ன போது, அவரை "வாழ்க நீ எம்மான்!" என்று பின்னர் போற்றிய பாரதி மறுத்து நிற்கும் வேகத்தைப் பாருங்கள்.

"ஸ்தீரி விதவைகளின் தொகையைக் குறைக்க வழி கேட்டால் ஸ்ரீமான் காந்தி புருஷ விதவைகளின் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்கிறார். இதனின்றும் இப்போது ஸ்தீரி விதவைகளின் பெருந்தொகையைக் கண்டு தமக்கு அழுகை வருவதாக ஸ்ரீமான் காந்தி சொல்வது போல் புருஷ விதவைகளின் பெருந்தொகையைக் கண்டும் அழுவதற்கு ஹேதுவாகும். மேலும், ஆணுக்கேனும், பெண்ணுக்கேனும் இளமைப் பிராயம் கடந்த மாத்திரத்திலே போக விருப்பமும், போக சக்தியும் இல்லாமற் போகும்படி கடவுள் விதிக்கவில்லை.

விதவைகளில் தொகையைக் குறைப்பதற்கும், அவர்களுடைய துன்பங்களைத் தீர்ப்பதற்கும் ஒரே வழிதான் இருக்கிறது. விதவைகள்

எந்தப் பிராயத்திலும் தமது பிராயத்துக்கு தகுந்த புருஷரை புணர்விவாகம் செய்து கொள்ளலாம். புருஷர்கள் எந்தப் பிராயத்திலும் தமது வயதுக்கு தகுந்த மாதரை மறுமணம் செய்து கொள்ளலாம்.”

‘மேற்கு மொழிகளுக்கு முன்னர் தமிழ் அழிந்து போகும்’ என்று ஒரு வெள்ளைக் கல்வியாளர் சொன்னவுடன் பொங்கியெழுந்த பாரதியின் நாட்டில் தொலைக்காட்சிகளில் தமிழ்க்கொலை. தமிழருடை அணிந்தவரைப் பார்க்க முடியவில்லை. நல்லதமிழ் கேட்க முடியவில்லை. ஆங்கிலத் தமிழ் ஒன்று அரியணை ஏறியிருக்கின்ற அவலம் காணும் போது தந்தை பாரதியின் “என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்?” என்ற ஏக்கமே இதயத்தில் விம்மலாகி ஒலிக்கின்றது.

இன்று ஐந்தாம் வகுப்புவரை தமிழ்க்கல்வி என்றவுடனே ஆடுகின்றனரே அறிஞர் பெருமக்கள், அவர்களுக்கும் சேர்த்துத்தான் பாரதி அன்றே சொல்லி வைத்தான், ‘தமிழா! பயப்படாதே, ஊர் தோறும் தமிழ்ப் பள்ளிக் கூடங்களைப் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களையெல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய். ஜாதி வேற்றுமையை வளர்க்காதே. ‘ஜாதி இரண்டொழிய வேறில்லை’ என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள் என்கிறான் தமிழ் மகன் பாரதி.

கீதைக்கு உரையெழுதியவன் பொட்டல்புதூர் பள்ளிவாசலில் ‘திருக்குரான்’ சொற்பொழிவும் நிகழ்த்தியிருக்கின்றான்.

ஏசு கிறிஸ்துவைக் குறித்தும் பேசுகின்றார். எல்லா மதங்களிலும் அவனுக்கு முழுமரியாதை. தேவையற்ற சண்டைகளிலே ஈடுபடுகின்ற நமக்குச் சொல்லுகிறான்; ‘தெய்வம் பலபல சொல்லி பகைத்தீயை வளர்ப்பவர் மூடர். உண்மையின் பேர் தெய்வம் என்போம். அன்றி ஓதிடும் தெய்வங்கள் பொய்யெனக் கண்டோம். உண்மைகள் வேதங்கள் என்போம். பிறி(து) உள்ள மறைகள் கதையெனக் கண்டோம்.’ உண்மைப் பிழம்பான வார்த்தைகள் இவை!

ஒரு சிட்டுக் குருவியை அவன் எப்படிப் பார்க்கிறான்? "சிறிய தானியம் போன்ற மூக்கு. சின்னக் கண்கள். சின்னத் தலை. வெள்ளைக் கழுத்து. அழகிய மங்கல் வெண்மை நிறமுடைய பட்டுப் போர்த்த வயிறு; கருமையும் வெண்மையும் கலந்த சாம்பல் நிறத்தாலாகிய பட்டுப் போர்த்த முதுகு, சிறிய தோகை, துளித்துளிக் கால்கள். இத்தனையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்து விடலாம். 'காக்கை குருவி எங்கள் ஜாதி, நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம், நோக்க நோக்கக் களியாட்டம்' என்று குதியாட்டம் போட கள்ளமில்லா அந்தக் கவி மாமன்னனால் மட்டுமே முடியும்.

ஆயிரம் விதமான பலிகள் தந்து பூசைகள் செய்தாலும், உண்மையான முயற்சிகளில் ஈடுபடுவர்களுக்குத்தான் மாகாளி பராசக்தி துணை செய்வாள் என்பதனை சுட்டிக் காட்டவே, காலம் காலமாக வெறும் பூசைகளிலும் பலிகளிலும் ஈடுபட்டுக் கிடந்த இந்தியச் சமூகத்தினருக்கு "பார்! உங்களை விட்டுவிட்டு, கடுமையான, உண்மையான, முயற்சிகளிலே ஈடுபட்ட ருஷியத் தோழர்களுக்கு தனது கடைக் கண் வீச்சிலேயே விடுதலைக்கு துணை புரிந்தாள்" என்கிறான்.

"இமயமலை வீழ்ந்தது போல் வீழ்ந்து விட்டான் ஜாரகன்; இவனைச் சூழ்ந்து சமயமுளபடிக்கெல்லாம் பொய் கூறி அறங்கொன்று சதிகள் செய்த சமடர் சடசடவென்று சரிந்திட்டார், புயற்காற்றுச் சூறைதன்னில் திமுதிமென மரம் விழுந்து காடெல்லாம் விறகான செய்தி போலே". சில மரங்கள் தேக்கு, தோதகத்தி, கோங்கு, மாமரம் என்று இவைகள் நின்றாலும், மரம் விழுந்தாலும், மரம் எத்தனை உருமாற்றங்கள் பெற்றாலும், (மேஜை, நாற்காலி, நிலைப்படிகள், கதவுகள்) அந்தப் பெயரிலேயே அழைக்கப்படும். இறுதி வரை மரங்களாகவே வாழும். ஆனால், சில மரங்கள் நிற்கின்ற பொழுது மட்டும்தான் மரங்களே ஒழிய விழுந்து விட்டால் எரிக்கப் பயன்படும் விறகுகளாகத்தான் மாறி சாம்பலாய்ப் போகும் என்கிறான் பாரதி. வீழ்ந்து உடன் சாம்பலாகும்

விறகுகளைப் போன்ற பலர் ஆட்சியாளர்களின் அருகில் இருப்ப தனாலேயே 'மரமா'க்க் காட்சியளிக்கின்ற காட்சி. பாரதியின் உவமை எப்படி நம்மை வியக்க வைக்கின்றது! 'ஆறுவது சினம்' என்ற ஔவையையும், 'சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி' என்ற வள்ளுவனையும் தனது தலையாய மூதாதையர்கள் என்று தலைமேல் ஏற்றிப் போற்றும் அவனே' "ரௌத்ரம் பழகு" என்று பேசுகின்றான். ஆமாம்... தன்னை அழிக்கின்ற கோபம் என்பதனால் அதனைப் பழகு என்று சொல்லுகின்றான். ஏனென்றால் பயிற்சியில்லாமல் கோபம் கொள்ளக் கூடத் தெரியாதவர்களாக நமது இந்தியச் சமூகம் படும்பாடு கண்டுதான், தமிழ் மன்னர்களும் தமிழ்ச் சாதியினரும் தங்களுக்குள் கோபம் கொண்டு அழிந்துவிடக் கூடாது என்று ஔவை சொன்ன காலம் வேறு. வெள்ளையன் இவர்களை அடிமை செய்து இத்தனை கொடுமைகளுக்கு ஆளாக்கிய பிறகும் கோபம் கொள்ளாமல் இருக்கின்ற இந்தியருக்குச் சொன்ன வார்த்தை' "ரௌத்ரம் பழகு".

ஒரு கட்டுரையில் அடங்குபவனா இந்த உண்மைக் கவி? கொழும்பில் நடைபெற்ற கம்பன் விழாவில் நான் குறிப்பிட்டேன்... அங்கே ஒரு இளைஞர் என்னிடம் கேட்டார், "யாமறிந்த புலவரிலே என்று முதலில் கம்பனைத்தானே சொல்லியுள்ளான்?" என்று. நான் அவருக்குப் பதில் சொன்னேன்; "அந்தப் பாடலை சரியாகப் பாருங்கள். 'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவனைப் போல் இளங்கோவைப் போல்' என்பது வள்ளுவனை தராசின் முள்ளாக வைத்து கம்பனையும், இளங்கோவையும் தராசின் தட்டுக்களாக வைத்துப் பார்த்திருக்கின்றான்" என்று.

"தமிழா, உன் வேலைகள் அனைத்திலுமே பொய்க்கதைகள் மிஞ்சிவிட்டன உனது மதக் கொள்கைகள், லௌகீகக் கொள்கைகள், வைதீக நடை - எல்லாவற்றிலுமே பொய்கள் புகுந்து தலைதூக்கி ஆட இடங்கொடுத்துவிட்டாய். இவற்றை நீக்கி விடு. வீட்டிலும்,

வெளியிலும், தனிமையிலும், கூட்டத்திலும், எதிலும் நேர்மையிருக்க வேண்டும். நீயும் பிறரை வஞ்சிக்கலாகாது. பிறரும் உன்னை வஞ்சிக்கலாகாது பிறர் பிறரை வஞ்சிப்பதையும் நீ இயன்றவரை தடுக்க வேண்டும். எல்லாப் பேறுகளைக் காட்டிலும், உண்மைப் பேறுதான் பெருமை கொண்டது. உண்மைத் தவங்களுக்கெல்லாம் உயிர். உண்மை சாஸ்திரங்களுக்கெல்லாம் வேர். உண்மை இன்பத்திற்கு நல்லுறுதி, உண்மை பரமாத்மாவின் கண்ணாடி. ஆதலால் தமிழா, எல்லாச் செய்திகளிலும் உண்மை நிலவும்படிச் செய்." தமிழருக்கு இன்றைக்கும் தேவை பாரதியின் அறிவுரை.

அர்ச்சனைத் தட்டோடு கோயிலுக்குப் போகின்ற மனிதர் தங்கள் நட்சத்திரங்களை தங்கள் மனைவி, மக்களின் நட்சத்திரங்களைக் குறிப்பிட்டு கடவுள் அருள் வேண்டுகின்ற நாட்டில் 'வல்லமை தா இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே' என்று பூஜை செய்தவன் அந்த மகாகவி. ஒரு கட்டுரைக்குள் அடக்க முடியுமா அந்த மகாகவியை? தியானம் என்பதற்கு கடவுளர் பெயர் வேண்டுமென்று அலையாதே. ஏதேனும் ஒரு நல்லதை நினைத்துக் கொள் போதும். மனம் தெளிவுறும். அறிவு நலம் பெறும்' என்கின்றான். அங்கேயும் அவனுக்கு வள்ளுவன் தான் நினைவில் நிற்கின்றான். "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்கிறான். 'வையத்தலை கொள்' என்று நமக்கு அன்புக் கட்டளையிட்ட அந்த மகாகவிக்கு தமிழரினம் செலுத்த வேண்டிய மரியாதை ஒன்றே ஒன்றுதான். தமது மக்களுக்குப் பாரதியின் பாடல்களை கற்றுத் தருதலும் எப்படி திருக்குறள் இல்லாத வீடு ஒரு தமிழனுடைய வீடாக இருக்க முடியாதோ அதுபோல பாரதியின் மொத்த நூல்களும் இல்லாத வீடும் ஒரு தமிழனுடைய வீடில்லை என்கின்ற உணர்வினை கொள்ள வேண்டும்.

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே" என்று அவன் கூத்தாடினான். நாமும் அந்த அக்னிக் குஞ்சை வந்தேமாதரம்

வந்தேமாதரம் என்று வணங்கோமோ? “எங்களின் பாரதி வந்து பிறந்து இருந்ததும் இந்நாடே - எங்கள் முந்தையர் மூடத்தனங்கள் ஒழித்தவன் முழங்கியதிந்நாடே - இதை வந்தனை கூறி மனத்தினில் இருத்தி வாயுற வாழ்த்தோமோ. அதை வந்தேமாதரம் என்று வணங்கோமோ.” வாழிய செந்தமிழ், வாழ்க ‘நற்றமிழர்,’ வாழிய பாரத மணித்திருநாடு.

கம்ப சித்திரம் - 1

"வார்த்தை தமிழுக்கு வழங்கும் கவிவேந்தன் கம்பன்"

என்கிறார் கவியரசர் கண்ணதாசன்.

"எண்ணியெண்ணித் திட்டம் போட்டெழுதினானோ
எண்ணாமல் எங்கிருந்தோ கொட்டினானோ"
புண்ணியத்தின் வழிவந்த புலமைதானோ"

என்கின்றார் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை.

"அரக்கர் நன்கறிவான் - முனிவர்
அகமும் கண்டறிவான்;
குரங்கின் உள்ளறிவான் - வேடன்
குணமும் நன்கறிவான்"

என்றும்

"உள்ளம் மகிழ உரைநா அமுதூறக்
கொள்ளும் இருகாதும் குளிரவே - தெள்ளரிய
செந்தமிழ்க் கம்பத்திருநாடன் செய்நூலுக்கு
எந்த நூலாகும் இணை"

என்றும் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை வியந்து போற்றுகின்றார். இத்தனைக்கும் மேலாக

"கம்பன் பிறந்த தமிழ்நாடு - புகழ்க்
கல்விச்சிறந்த தமிழ்நாடென்றும்
"கம்பனென்றொரு மானிடன் வாழ்ந்ததும்"

என்றும் அமரகவி பாரதி போற்றி நிற்கின்றார்.

"கம்பநாடனோடு கவிதை போயிற்று"

என்றும் தமிழ் அவனைப் புகழ்கின்றது.

முதனூலில் இருந்து தமிழர் பண்பாட்டிற் கொப்ப வழி நூலை வகை செய்த கம்பன் அத்தனை பாத்திரங்களின் அளவினையும் மிகுந்தாலும் குறைந்தாலும் நோய் செய்துவிடும் என்று சரியாகச் செய்து வென்றிருப்பதனைப் பார்க்க வியப்பே மேலிடுகிறது. எல்லாப் பாத்திரங்களும் அவன்தான். அந்த பாத்திரங்களுக்குள் அவன் காட்டுகின்ற பாத்திரத்தைப் பார்க்க முயல்வதே இந்தத் தொடரின் வேலை.

இலங்கை வேந்தன் இராவணன். அவனைக் கம்பர் அறிமுகம் செய்கின்ற அழகு. அவனை விரும்பி அவர்களாகவே வந்து அந்தப்புரம் நிறைந்திருக்கிற காதலிகள். அதன் விளைவோ என்னவோ ஊட முயன்றாலும் அவர்கள் ஊட முடியாமற் போய்விடுவார்கள் போலும். ஏனெனில் மார்பகங்களின் அளவாலேயே சிறியதாகத் தெரியும் இடையும் கலவிப் பொழுதில் ஆடவர் முகம் புதைப்பதனாலேயே உடலெங்கும் ஏற்படுகின்ற பரவச இசைக்குக் காரணமான மூங்கிற் தோள்களும் முயன்று ஒரு ஊடலையே கொண்டாலும், இராவணன் அந்த ஊடல் தீர்க்க முயன்று அவர்களின் பாதம் வருடியவனில்லை என்றும் கம்பர் குறிப்பிடுகின்றார்.

ஊடல் விளையும் உள்ளரங்கத்திற்குள் கூடலுக்கு எதுவெனினும் நடக்கலாம், நடக்க வேண்டும் என்பதுவே இயற்கை. அதுவே சுகம் தரும் என்று அனுபவித்த கம்பருக்கு அங்கேயும் ஒருவன் வணங்காதவனாக இருந்தான் என்பதில் புதுமை தோன்றுகிறது.

சிவன், திருமால், பிரம்மா மூவருமே இவனுக்கு இணையாக இல்லை என்கின்ற பொழுது சாதாரண தேவர்கள் என்ன ஆவார் என்று பாராட்டுகின்றார்.

ஆமாம் சிவன் தன் காதலியாம் உமைக்குப் பாதி உடலே தந்தவன்.

திருமாலோ தன் மார்பைத் தந்தவன்,

பிரம்மாவோ நாவையே தந்தவன்.

ஆனால் இராவணனோ

"ஊடல் தீர்க்கக் கூடத் தலை வணங்காதவன்" என்கின்றார் கம்பர்.

முருகனை "மாது குறமகள் பாதம் வருடிய மணவாளா" என்கின்றார் அருணகிரியார்.

மும்மூர்த்திகளும் காதலிகளிடம் மயங்கி நிற்கின்ற வேளையில் இலங்கை வேந்தன் காதலிகளின் பாதம் தொட்டவனில்லை என்கிற பாடல் இதோ...

"புலியின் அதள் உடையானும், பொன்னாடை
புனைந்தானும், பூவினானும்
நலியும் வலத்தார் அல்லர் தேவரின் இங்கு
யாவர், இனி நாட்டல் ஆவார்?
மெலியும் இடை தடிக்கும் முலைவேயிளந்தோள்
சேயரிக்கண் வென்றிமாதர்
வலிய நெடும் புலவியிலும் வணங்காத
மகுட நிலை வயங்கமன்னோ"

பார்த்து மயங்கி வந்து பணிந்த மாதரிடம் இப்படியிருந்த இலங்கை வேந்தன் கேட்ட ஒரு நங்கையின் நினைவாகி அவளைத் திருடனாகித் தூக்கி வருகின்றான்.

வழி மறித்த சடாயுவே கேட்கின்றார்.

"கெட்டாய் கிளையோடும்; நின் வாழ்வை எலாம் சுட்டாய்; இது என் தொடங்கினை?" என்கின்றார்.

இதற்கு முன்னர் பெண்கள் தேடி வருபவனாக இருந்த இராவணன், ஒரு பெண்ணைத் திருட்டுத் தனமாக அவள் கணவரிடமிருந்து கவர்ந்து செய்வதனைக் கண்ட சடாயு.

"இது என் தொடங்கினை?" என்கின்றார்.

காதற்கிழத்தியரின் காலை ஊடல் தீர்க்கக் கூடத் தொடாதவன்தான்

காகுத்தன் மனைவியின் முன்னே விழுந்து விழுந்து வணங்கப் போகின்றான் என்பதற்காக இந்தப் பாடலை முதலில் வைத்துள்ளார் கம்பர்.

இராவணன் பெற்ற வரங்களே அவனை அழித்து விட்டதாக வருத்தப் படுகின்றனர் நமது கவிஞர்கள். அவன் பெற்ற வரங்களே அவனுக்கு சாபங்களாகி விட்டதாக இராவணனின் தவங்கள் தவங்களாக இல்லாத காரணத்தினாலேயே அவை சாபங்களாகின என்று உணராமல்...

"உற்றநோய் நோன்றால் உயிர்க்குறுகண் செய்யாமை. அற்றேதவத்திற்குரு"

என்கிறார் தமிழர் தந்தை வள்ளுவனார்.

இன்று கோவில்கள் தோறும் கோள்களை வழிபடுகின்றனர். இன்ன இன்ன வேண்டுமென்றும் யாகம் நடத்துகிறார்கள். நடத்துகிறவர்கள் செயலைப் போன்றதுதானே இராவணனின் தவங்களும்.

மிக மிகக் கடுமையான கொடூரமான தவங்களைச் செய்து இறுதியில் அவன் பெற்றவை வரங்களா? எல்லோரையும் அடிமைப்படுத்த வேண்டும். மூவுலகையும் ஆள வேண்டும். தன்னை எதிர்ப்பவர்கள் யாரும் வெல்லுதல் கூடாது என்பன, பண்புடையவன் ஒருவன் கேட்கும் வரங்களா?

அதனாலே தான் மனித குல மேம்பாட்டிற்காக கேட்கப்படாத, தன்னை குறித்தே கேட்கப்படுவையாக இருப்பதனாலேயே, தரப்படுகின்ற பொழுதே சாபங்களாகத் தான் அவை உருவெடுக்கும், யாராலும் அழிவில்லாத வரங்களைப் பெற முயலும்போதே மானிடர்களை இது கட்டுப்படுத்தாது என்று தான் வரம் அளிக்கப்படுகின்றது.

அந்த வரங்களின் விளைவாக பெற்ற வரங்களின் போதை, விண்ணுலகத்தாரே அடிமைப் பணி செய்து கொண்டிருக்கையில் மண்ணுலக மனிதர்கள் என்ன செய்ய முடியும் என்ற மமதையை

தோற்றுவிக்கின்றது. விண்ணுலகத்தாரை வென்றதோ அவர்களிடமே பெற்ற வரங்களால்தான்.

அதன் விளைவால்தான் மனிதர்களிடம் மோதாதே என்று வரமளித்தவர்கள் சொன்ன உண்மை மறந்து போகின்றது. ஆகவேதான் ராமனோடு போர்க்களத்தில் நிற்கின்றபோதும் இராவணனுக்கு தெய்வங்களே நினைவுக்கு வருகின்றனர். எதிரில் இருக்கின்ற தசரதன் மகன் இராமனென்றும் மனிதனென்றும் அவனுக்கு தெரியவில்லை.

"சிவனோ அல்லன்; நான்முகன் அல்லன், திருமாலாம்
அவனோ? அல்லன், மெய்வரம் எல்லாம் அடுகின்றான்.
தவனோ என்னில் செய்து முடிக்கும் தரன் அல்லன்.
இவனோ தான் அவ்வேத முதல் காரணன்?"

என்பான். இராமனால் தன்னைப் போன்றவர்கள் இயற்ற முடியாதென்று சிந்திக்கின்றவன், தனது வரங்களனைத் தையும் அற்றும் இற்றும் போகச் செய்கின்ற அவனை "வேதமுதல் காரணனாக கருதுகின்றானேயொழிய வரங்கள் குறித்த மனிதன் இவன்தான் என்று உணரவில்லை. அவன் மனதில் உண்மையும் தோன்றுகின்றது.

அகழ்வாரைத் தாங்கும் நிலத்தை பொறைக்கு இலக்கணமாகச் சொன்னாரே தமிழர் தந்தை வள்ளுவர். அதனைக் குறிக்கின்றான் இராவணன்.

சீதை பொறுமையில் உலகம் போன்றவளாம். ஏற்கனவே கண்ணோடு கண்ணினைக் கவ்வி, வில் முறித்து, கரம் பிடித்து வாழ்ந்தாளே இராகவனோடு, அவன் நினைப்பிலேயே வாழ்வதானாலேயே நிலமகள் போலும் என்கின்றான். நிலமகளின் மகளேதான் அவள் என்றுணர்ந்த கம்பன் இராவணன் சொல்வதாக இதனை வைக்கின்றார்.

இவன் செய்கின்ற போர்த்தொழிலை சீதை பார்க்க வாய்ப்பில்லை. அதுவும் நன்மைக்கே" போர்த்தொழிலை செய்கின்ற இராகவனின்

மேனியை நோக்கிவிட்டால், இராவணன் சொல்கின்றான் "மன்மதனையும் தன்னையும் இரண்டாவது நாயென்று கருதுவாளாம் சீதை".

தங்கையின் சொல்கேட்டு, காமவயப்பட்டு தூக்கிவந்தவன் இவன். ஆனால் மன்மதனை ஏன் இழுக்கின்றான் என்கிறபொழுது தான் நமக்கு புரிகின்றது. அவன் தூண்டித்தானே இந்தக் காம உணர்வு தனக்கு ஏற்பட்டது. ஆகவே மன்மதனை முதல் குற்றவாளியாகவும் கூறுகின்றான்.

"போயினித் தெரிவதென்னே பொறையினால் உலகம் போலும்
வேயெனத் தகைய தோளி இராகவன் மேனி நோக்கி
தீயென கொடிய வீரசேவகச் செய்கை கண்டால்
நாயெனத் தகுதும் அன்றே காமனும் நாமும் எல்லாம்"

கம்ப சித்திரம் - 2

எல்லாப் பாத்திரங்களும் தானாகவே இருந்தாலும் கம்பன் இரண்டு பாத்திரங்களில் மட்டும் அந்தப் பாத்திரங்களாகவே மாறிப் பேசுகின்றான்.

ஒன்று வாலி. இன்னொரு பாத்திரம் கும்பகர்ணன்.

கும்பனின் வாய்மொழி மூலமாக நமக்கு இன்னொரு உண்மையும் தெரியவருகின்றது. இராவணனும் அவன் தம்பியரும், தங்கையும் பிராம்மணர்கள்.

பண்டிதநேரு கூட இராம-இராவணப் போரை திராவி-ஆரிய இன மோதலாகவே எழுதியுள்ளார். இராவணன் பிராமணர், இராமன் ஷத்திரியன் என்ற செய்திதான்.

இராவணனிடம் கும்பன் பேசுகின்றான்.

"நீ அயன்முதற்குலம் இதற்கொருவன் நின்றாய்
ஆயிரம் மறைப் பொருளுணர்ந்தறிவ மைந்தாய்
தீயினை நயப்புறுதல் செய்வினை தெரிந்தாய்
ஏயின உறத்தகைய இத்துகையவேயோ?"

இராமனின் அழகில் மயங்கி அவனிடம் சூர்ப்பனகை சென்று தன் காதலைத் தெரிவித்த போதும் இராமன்,

சுந்தரி மரபிற்கு ஒத்த தொன்மையின் துணிவுற்று அன்றால்
அந்தணர் பாவை நீ, யான் அரசரில் வந்தேன்" என்றான்.

கும்பன் அறிவும், வீரமும், பாசமும் கொண்டவன் மட்டுமன்றி உண்மையும் தெரிந்தவன், அதனையும் விட இராவணனையே நேரில் இடித்துரைக்கும் ஆண்மையாளன்.

சுட்டது குரங்கெரி சூறையாடிடக்
கெட்டது கொடிநகர் கிளையும் நண்பரும்
பட்டனர் பரிபவம் பரந்தது எங்கணும்
இட்டஇவ் அரியணை இருந்தது என்உடல்

இலங்கையை அனுமன் எரித்துவிட்டு சென்று விட்டான்.

மூவுலகையும் வென்ற, வெற்றிகளையே கண்ட இராவணனைக் கம்பன் தான் பிணமாகி அரியணையில் அமர்ந்திருப்பதாகப் பேசவைக்கின்றான்.

இங்கேதான் கும்பனாகிக் கம்பன் பேசுகின்றான்.

ஓவியம் போன்ற நகரம் தீக்கிரையாக்கப் பட்டுவிட்டதாக வருந்துகின்றாயே.

அதற்கு முன்னரே அரசருக்குரிய நீதியை நியாயத்தை நீ அழித்திருக்கின்றாயே அதை உணர்ந்தாயா. போர்க்கள முடிவில் வேற்று அரசர் தம் துணையைச் சிறையெடுத்தல் உண்டு. அது அரச நீதி. ஆனால் இராமனுக்கும் நமக்கும் இடையில் போரெதுவும் நடந்ததோ? இல்லை, போர்க்கள முடிவில் சீதையை நீ சிறையெடுத்திருந்தால் அதுசரி. நீ போகக்களத்திற்காக அல்லவா மாற்றான் மனைவியின் மீது ஆசை வைத்து அவளைத் தூக்கி வந்திருக்கின்றாய். பாவங்களிலேயே கொடிய பாவம் செய்திருக்கின்றாயே என்கின்றான்.

ஓவியம் அமைந்த நகர் தீ உண, உளைந்தாய் “கோ-இயல் அழிந்தது”

என, வேறு ஒரு குலத்தான். தேவியை நயந்து, சிறைவைத்த செயல் நன்றோ பாவியர் உறும் பரி இதில் பழியும் உண்டோ

உன்னையே விரும்பி உன் தேவியர்களாக அந்தப்புரத்தில் நிறைந்திருக்கின்றவர்கள். உன் பார்வைக்காக பொன் நகை முகங்களோடு பூத்தும், காத்துமிருக்க, மாற்றான் மனைவியின் காலில் விழுந்து விழுந்து வணங்குகின்றாயே. இது என்ன புதுவிதமான புகழைத் தேடியிருக்கின்றாய் என்கின்றான்.

நம்முடைய அரசாட்சி உன்னால் மிகப்பெரிய பெருமை பெற்றுவிட்டது என்று வேறு கேலி செய்கின்றான். கம்பனின் பாடல் கும்பனின் வாயிலாக.

1. குற்றமற்ற அடுத்தவனின் மனைவியை சிறையெடுப்போம்.
2. அந்த மாற்றானின் மனைவி மீது குற்றமேயில்லாத புகழ் சேர்க்கும் காதல் கொள்வோம்.

3. நாம் எப்போதும் பேசுவதோ இனமானம், குலமானம் என்று அதற்கெல்லாம் நேர் அர்த்தம்தான் முன்னாலேயிருந்தது என்று மூவுலகும் உணர்ந்திருந்தது. இன்று உனது செயலால் அகராதியில் இனமானம், குலமானம் என்று பேசுவதற்கு அர்த்தம். முறைதவறிய காமம் என்றுணர்த்தப் பட்டிருக்கின்றது.

4. மூவுலகையும் தேவர்களையும் அடிமை கொண்ட நாம் மனிதர்களைக் கண்டு அஞ்சுகின்றோம் என்கின்ற பெருமை.

5. நமது ஆட்சிக்கு புதிய கொள்கைகளை வகுத்திருக்கின்றாய்

ஆகா எத்தனை பெருமை.

நியாயம் உணர்ந்து அவமானம் கொண்டவனாக கும்பன் பேசும் கிண்டல் இதோ

"ஆசுஇல் பரதராம் அவை
அம்சிறை அடைப்போம்
மாசுஇல் புகழ் காதலுறுவேம்;
வளமை கூரப் பேசுவது மானம்;
இடைபேணுவது காமம்; கூசுவது மானுடரை;
நன்று, நமகொற்றம்"

அறிவமைந்த போர்த்தளபதியாகவும் ஒரு வழி சொல்லுகின்றான். திட்டமிட்டு போர்த்தந்திரங்களோடு இராமனும் அவன் கூட்டமும் கடல் கடந்து வருவதற்கு முன்னரே நாம் கடல் தாண்டி அவர் இருக்கும் இடம் சென்று அவரை அழித்திடுதல் செய்வோம் என்று.

எதிரிகளை நிலைகுலையச் செய்யும் திடீர்த் தாக்குதலுக்கும் யோசனை சொல்கின்றான்.

"ஊறுபடை ஊறுவதன் முன்னம், ஒருநாளே
ஏறுகடல் ஏறி, நரர், வானரரை எல்லாம்
வேறுபெயராதவகை, வேரோடும் அடங்க
நூறுவதுவே கருமம்"

என்பது நுவன்றான்.

கம்ப சித்திரம் - 3

முதல் நாள் போரில் தோற்ற இராவணன் சகோதரனின் வழிகாட்டுதலில் கும்பகர்ணனை எழுப்பிவரச் சொல்லுகின்றான். கும்பகர்ணன் உட்கார்ந்திருந்தாலே இராவணன் நிற்கின்ற உயரமாம். வந்து வணங்கிய தம்பியை குன்றினைக் குன்று தழுவுதல் போல் இராவணன் தழுவுகின்றான்.

ஒன்றுமே சொல்லாமல் தம்பிக்கு போர்த் தொழிலுக்குரிய தலைக்கவசம், மார்புக்கவசம் என்று ஒவ்வொன்றாய் அணிவிக்கின்றான். காரணம் கேட்ட தம்பியிடம் மானிடர், வானரர் எல்லாம் நமது நகரைச் சுற்றியுள்ளனர். அவரைப் போய் கொன்று தின்று வா என்கின்றான்.

கற்பின் சீதையை இன்னும் நீ விடவில்லையா? போர் தொடங்கிவிட்டதா? வானுலகம் பூவுலகம் அனைத்திலும் ஈட்டிய புகழ் அனைத்தும் போகும் காலம் வந்துவிட்டதா? நீ சீதையின் தோள்களைச் சேர்ந்து விடலாம் என எண்ணுதல் வலிமை மிக்க இராமனை வெல்லலாம் என்பதைப் போன்றது இரண்டுமே நடக்காது.

என்னால் முடிந்தது இந்த உலகினை பெயர்த்து உன் முன்னால் கொண்டு போடுகின்றேன். அதற்கு ஒரு எல்லையை வேண்டுமானாலும் வகுத்து விடுகின்றேன்.

சீதையை எடுத்தனையே அவளை விடு எனச் சொன்னேனே, விடுத்தனையோ? இல்லை! அதனால் இந்திரனுக்கு மீண்டும் தேவலோகத்தையும், அரச பதவியையும் கொடுத்தனை, உன் சுற்றமாகிய அசுரர்களையோ கெடுத்தனை, உன்னை நீயே ஒழிப்பதற்கான வேலையையும் செய்து விட்டாய். தேவருலகத்தினர் அனைவரும் அடிமைத் தளத்திலிருந்து விடுதலை பெறவும் வழி செய்து விட்டாய்.

அற்புதமான அந்தப் பாடல்

"கொடுத்தனை இந்திரனுக்கு உலகும் கொற்றமும்
கெடுத்தனை, நின்பெருங்கிளையும், நின்னையும்
படுத்தனை; பலவகை அமரர் தங்களை
விடுத்தனை; வேறு இனி வீடும் இல்லையால்"

சரி ஒரு நல்ல முறையான வழியை நான் சொல்கின்றேன். கேட்பாயா?

சீதையை விடு, இராமனை வணங்கு, வீடணனைத் தழுவிக்கொள். ஒருவேளை உனது மான உணர்ச்சி தடுக்கிறதா? போர்தான் வேண்டுமா? அதற்கு ஒரு வழி சொல்லுகின்றேன் கேள்.

கும்பகருணன் இராவணனுக்குச் சொல்லுகின்றான். உன் படைகளில் கொஞ்சம் கொஞ்சமாக அனுப்பி அவர்கள் செத்து மடிவதைக் கண்டு இங்கேயிருந்து தேம்புகின்ற இந்த இழிநிலை விடு.

மொத்த படைகளையும் திரட்டிக் கொண்டு போய் மோதுவோம் என்கின்றான்.

இரண்டாம் உலகப் போரில் ஹிட்லர் கைக்கொண்ட போர்த்தந்திரத்திற்கு வழி காட்டியவனே கம்பனின் கும்பன்தான் போலும்.

'பந்தியில் பந்தியில் படையைவிட்டு, அவை
சிந்துதல் கண்டு, நீ இருந்து தேம்புதல்
மந்திரமன்று, நம் வலி எலாம் உடன்
உந்துதல் தரும‌ம்'

என்று உணரக் கூறினான்.

தவறுகள் சுட்டிக் காட்டப்படும் பொழுது அறிவு வேலை செய்யாமல் போனால் கோபமே கொப்பளிக்கும் "போருக்கு அஞ்சுகின்றாயா? போ போ, மது அருந்தி மாமிசம் அருந்தி உறங்கு என கும்பகருணனை மனம்

உளையச் செய்கின்றான். இராவணன் "மனிதர்களை வணங்குவதும் குரங்கைக் கும்பிடுவதையும் நீயும் உன் தம்பியும் தொழிலாகவே கொண்டு விட்டீர்கள். நானே போர் புரிகின்றேன்.

வேகம் எப்படிப் பாட்டில் வெளிப் படுகின்றது பாருங்கள்.

"தருக, என் தேர் படை; சாற்று, என் கூற்றையும்
வருக, முன் வானமும் மண்ணும் மற்றவும்
இருகை வன்சிறுவரோடு ஒன்றி என்னோடும்
பொருக, வெம்போர் எனப்போதல் மேயினான்"

புறப்படும்போதே வெற்றி என்ற புகழுரைகட்கு சொந்தக்காரனான கும்பன் இந்திரனை வெள்ளை யானையோடு தூக்கித் தரையில் அடித்தவன். புறப்படும்போதே "சாகப்பொகின்றேன் என்கின்றான். நான் செத்தவுடனேயே சீதையைவிட்டு விடு என்கின்றான்.

அதைவிடச் சிறப்பு தன் மரணத்திலாவது இராவணன் திருந்துவான் என்கின்ற நம்பிக்கை அவனுக்கு இல்லை. விதியின் விளையாட்டையே கருதுகின்றான்.

தனது மறைவிற்கு பிறகு அறிவை இழந்து நிற்கும் அரசன் இன்னொரு பெரிய பிழையைச் செய்வான் என்று கருதி அந்தக் கொலையையேனும் தடுக்க முயல்கின்றான்.

அடுத்து மகன் இந்திரஜித்தையே களபலி கொடுக்க எண்ணுவான் என்று தெளிவாகத் தெரிந்து கொள்கின்றான். இந்திரஜித் ஒரு பெண்ணைத் தூக்கி வந்து அதற்காக நாமெல்லாம் போய் மரணம் அடைந்தால் கூட உலகம் பழிக்காது.

ஆனால் தந்தை தூக்கி வந்த ஒரு பெண்ணுக்காக அதுவும் மாற்றான் மனைவிக்காக, மகனும் பலியாதல் எத்தனை பெரிய அவமானம் என்று கருதுகின்றான். ஆகவே சொல்லுகின்றான் "இந்திரனை வென்ற நமது மகன் மேகநாதனை இராமன் தம்பி கொன்று போடுவான். நீயும் நானும்

பரவாயில்லை. குலக் கொழுந்தையும் பலி கொடுத்துவிடாதே" என்கின்றான்.

அதற்காகவே ஒரு அருமையான அறிவுரையைக் கூறுகின்றான். ஆமாம் என்னை அவர்கள் வெல்லுகின்ற பொழுது உன்னை வென்று விடுகிறார்கள் என்பது உறுதியாகிவிடும். உன்னுடைய தவங்கள் அனைத்திலும் படிந்திருக்கின்ற அந்த மாசை அகற்றுவதற்கு ஒரே வழி சீதையை விட்டுவிடுதல்தான் என்கின்றான் கும்பன்.

அருமையான பாடல்

"என்னை வென்றுளர் எனில், இலங்கை காவல
உன்னை வென்றுயருதல் உண்மை; ஆதலால்
பின்னை நின்று எண்ணுதல் பிழை; அப்பெய்வளை
தன்னை நன்கு அளிப்பது தவத்தில் பாலதே"

கம்ப சித்திரம் - 4

இராவணன், அண்ணனாக அல்ல, அரசனாகப் பேசிவிட்டான். உணர்ந்து உணர்ந்து உளைகின்றான் கும்பன் விடை பெறுகின்றான்.

இற்றைநாள் வரை முதல், யான்முன் செய்தன

குற்றமும் உள எனின் பெறுத்தி; கொற்றவ
அற்றதால் முகத்தினில் விழித்தல்; ஆரிய!
பெற்றனன் விடை என, பெயர்ந்து போயினான்

கும்பனின் தோற்றம் இராமனை வியக்க வைக்கின்றது. கம்பன் வரிகளில்

தோளோடு தோள்செலத் தொடர்ந்து நோக்குறின்
நாள்பல கழியுமாய்

என்கின்றான்.

வீடணின் பதில் அந்த வியப்பை நியாயப்படுத்துகின்றது. இவன் என் அண்ணன்.

இவன் காலனுக்கு, காலன், தீயையும், காற்றையும் பிழிந்து சாறு எடுத்திடுவான். ஒரு பாடல் கும்பகருணனைப் போலவே கம்பீரம் காட்டும்.

ஊன் உயர்ந்த வரத்தினான்
மேல் நிமிர்ந்த மிடுக்கினான்
தான் உயர்ந்த தவத்தினான்
வான் உயர்ந்த வரத்தினான்

சுக்ரீவன் இவனையும் நம் பால் சேர்த்துக் கொள்வோம் என இராமன் சொல்ல வீடணர் தானே செல்கின்றான்.

கும்பனின் கேள்விகள் கம்பனின் வரிகளாகிக் கண்ணீர் வர வைக்கும்.

அறத்தின் பால் சென்றாய், உலகமும் பெற்றாய் என்று எண்ணி எண்ணி உவகை கொண்டேன். காலனின் வாயில் விழுவதற்கு திட்டமிட்டு அதிலேயே களிப்படைந்து கொண்டிருக்கின்ற எங்கள் பக்கம் ஏன் வந்தாய்? அமுது உண்ணப் போய்விட்டாய் என நம்பினேன். நஞ்சு உண்ணவா வந்தாய்.

அமுது அளித்தவன் பால் அசுரர் கூட்டத்தில் ஒருவன் போய் உய்ந்தாய் என்று மகிழ்ந்திருந்தேன் என்ன வேலை இது?

கவிஞரின் அறிவின் மிக்காய்!
காலன் வாய்க்களிக்கின்றோம்!
நவை உறவந்தது என் நீ?
அமுது உண்பாய் நஞ்சு உண்பாயா

இராமன் பக்கம் போனாய். உனக்கு பெருமை அல்லவா சேர்ந்தது. கும்பனின் மனத்தில் ஏற்பட்ட மிகப் பெரிய வீடு, தேடி வந்த களங்களும், தேடிப் போன களங்களுமாய் வெற்றிகளையே குவித்த வீரனுக்கு உள்ளம் அவமானத்தால் துடிக்கின்றது.

அறம் என நின்றநம்பற்கு அடிமை பெற்று அவன் தனாலே
மறம் என நின்றமூன்றும் மருங்கு அற, மாற்றி, மற்றும்
திறம் என நின்ற தீமை இம்மையே தீர்ந்த செல்வ

முத்தாய்ப்பாக விழுகின்ற வரிதான்

முத்தமிழா் அறச்சொல்லாக விழுகின்றது

பிறர்மனை நோக்குவேமை

உறவு எனப் பெறுதிபோலாம்?

கம்பன் கும்பனாகவே மாறி நிற்கின்றான்

என்ன பாடல் பாருங்கள். கம்பன் தமிழில் வென்றதற்கான கட்டியம் கூறும் பாடல்.

களத்தில் நிற்கின்ற ஒருவனின் தெளிவும் உறுதியும் இந்தப் பாடல் காட்டும் சொல்லாட்சியில் பாருங்கள்.

ஏற்றிய வில்லோன், யார்க்கும்
இறையவன், இராமன் நின்றான்
மாற்ற அருள் தம்பி நின்றான்;
மற்றையோர் முற்றும் நின்றார்

அடுத்து வரும் வரிகள் அப்பப்பா கம்பன் கம்பன்தான்.

கூற்றமும் நின்றது எம்மை கொல்லியே; விதியும் நின்ற;

களத்தில் நான் வந்த நிற்பது கண்டு எனது பலமும், வரங்களும் கருதி வந்தனையோ என்று பிறன் மனைவியின் மீது கொண்ட காமத்தால் அண்ணன் தவறிழைத்தானோ, அன்றே தோற்று விட்டோம். ஆகவே தோற்று விட்டுப் போருக்கு வந்த எங்கள் பக்கம் ஏன் வந்தாய்? என்கின்றான்.

தோற்றஎம் பக்கல, அய்ய! எவ்வலி தொலைய வந்தாய்

தேன் கூட்டில் கை வைத்தவன் மீது தேனீக்கள் மொய்ப்பது போல இராமனின் கணைகள் அரக்கர் குலத்தின் மீது மொய்க்கப் போகின்றது. யாரும் பிழைக்கப் போவதில்லை.

பிராம்மண குலத்தவர்களாகிய நமக்கு மரணத்தின் பின் எள்ளும் நீரும் இறைத்து இறுதிக் கடன் செய்ய நீ ஒருவன் இருக்கின்றாய் என்று நம்பினேனே

அய்ய! நீ அயோத்தி வேந்தற்கு
அடைக்கலம், ஆகி ஆங்கே
உய்கிலை என்னின், மற்றுஇவ்
அரக்கராய் உள்ளோர் எல்லாம்
மொய் கணை மாரியாலே இறந்து
பாழ் முழுதும் பட்டால்
கையினால் என் நீர் நல்கி
கடன் கழிப்பாரைக் காட்டாய்.

கம்ப சித்திரம் - 5

வீடணன் அறவழியாகிய அறிவு வழி, மிகச் சிறந்த வழிகாட்டும் உரைகளையெல்லாம் முன் வைக்கிறார். உன் மக்கள், என் மக்கள், இந்தக் குடிக்கு இறுதியை ஏற்பாடு செய்த இராவணனின் மக்கள் எல்லாரும் வாழ்வர். அறவழி தெரிந்த நீ என்னோடு வருவது தானே நீதி என்கின்றான்.

வீடணைக் காட்டிலும் அறவழி நன்குணர்ந்த கம்பனின் கும்பன் பேசுகின்றான். இந்த உயிர் வாழ்க்கை என்பது என்ன? நீரில் மறைந்து விடும் என்று தெரியுமோ அது போன்றது தானே. மரணம் உறுதி என்பது தெரிந்தும் என்னை இந்த உயிர் தாங்கும் உடலை எத்தனை காலமாக உட்கார்த்தி வைத்து இந்த போர்க்கோலத்தைச் செய்தவனே அவன்தான்.

இறந்து தான் போவேன் என்று சொன்ன பிறகும் அவன் அனுப்புகின்றான் என்றால் என் உயிரை அவன் துறக்க முடிவு செய்துவிட்டான் என்று தெரிந்த பின்னரும் இந்த உயிரைக் கொடுக்காமல் நான் அரசாள விரும்புதல் எவ்வகையில் நியாயமாகும். உடன் பிறந்த அண்ணனாக அவன் சொல்லவில்லை. உத்தரவிடும் மன்னனாகச் சாகப் போ என்றான். உடனடியாக நீ போய் விடு.

நீர்க்கோல வாழ்வை நச்சி, நெடிது நாள் வளர்த்துப்
பின்னை போர்க்கோலம் செய்து விட்டார் க்(கு) உயிர்
கொடா தங்குப் போகேன் தார்கோல மேனி மைந்த
என்துயர் தவிர்த்தியா யின் கார்க்கோல
மேனியானைக் கூடுதி கடிதின் என்றான்

தம்பி, தாத்தாவை நோக்கி நாம் மூவரும் தவம் இருந்தோம். ஆனால் உலகைப் படைக்கின்ற அந்த வள்ளல் பிரம்மன் உனக்கு அப்படியே நீ வேண்டினாற்போல வரந்தந்தான். அதனாலேயே குற்றமற்ற அறவழியே உனக்கு அமைந்தது. அதனால் உலகம் போற்றுகின்ற அறவழித் தலைவனாக நீயும் உள்ளாய். அதற்கு தகுதியுள்ளவனும் நீயே.

நித்தியத் தவம் கேட்ட என் வேண்டுகோளை மட்டும் வழுவுள்ள வரமாக மாற்றினானே அந்தப் பிரம்மன். அவன் கருத்தை நான் வீழ்த்தப் போகின்றேன். எப்படித் தெரியுமா. இந்தக் களத்தில் வீழ்ந்து. வழுவற்றவரத்தினால் உன்னை புகழின் மேல்நிலையில் நிறுத்த நினைத்தான் நம் தாத்தா பிரம்மன்.

ஆனால் நானோ அறம் உணர்ந்திருந்தும் ஆணையிட்ட அரசனுக்காக என்னையே என்றா கருதுகின்றாய். மந்திராலோ

-சனையிலேயே நேரிடையாகக் கண்டித்தவன் நான்தானே. அன்று அவன் அண்ணனாக இருந்தான். இன்று அரசனாகி விட்டான் தம்பி. மறைமுகமாக அறிவார்ந்த தம்பிக்கு புரிய வைக்கின்றான்.

உண்டு விட்டு போய் உறங்கு என அன்று இராவணன் சொன்னதை ஊட்டி ஊட்டி வளர்த்தவன் அவன். உண்டதைச் சொல்லியே காண்பித்து விட்டான். அதன் பின்னர் அவனுக்கு முன்னாலேயே அவனுக்காகவே சாதல்தானே தின்றவனின் கடமை. வேதனையின் வெளிப்பாடு

அறம் சொன்னதாலையே அரசன் தம்பியை அடிமைகளில் ஒருவனாக்கிய அவலத்தைக்கூறும் பாடல்

கருத்திலா இறைவன் தீமை கருதினால் அதனைக் காத்துத்
திருத்தலாம் ஆகின் அன்றோ திருத்தலாம்? தீராது ஆயின்
பொருத்துறு பொருள் உண்டாமோ? பொருதொழிற்குரியர் ஆகி
ஒருத்தரின் முன்னம் சாதல் உண்டவதற்கு உரியது அம்மா.

முகநூலில் எழுதினேன்

நூல் வடிவில் தருகிறேன்

படித்து பயனுறவும்

அன்புடன்

நெல்லை கண்ணன்